|---|---|---|---|---|---|---|---|
| | | | | *F* | *S* | *C* | *D* |
| *A* | *1977.06.03* | களுத்துறை | *1AB* | - | *3* | *3* | *2* |
| *B* | *1977.04.12* | பதுளை | *1C* | - | *2* | *3* | *3* |
| *C* | *1977.01.12* | மொனறாகலை | *2* | - | - | *4* | *4* |
| *D* | *1977.04.05* | கொழும்பு | *1AB* | - | - | *5* | *3* |
| *E* | *1977.03.08* | அம்பாந்தோட்டை | *1C* | - | - | *6* | *2* |
| *F* | *1977.12.03* | காலி | *1C* | - | - | *7* | *1* |
| *G* | *1977.08.06* | இரத்தினபுரி | *2* | - | - | *8* | - |
| *H* | *1977.07.06* | கேகாலை | *1AB* | - | - | *5* | *3* |
| *I* | *1977.05.30* | கண்டி | *1AB* | - | - | *1* | *7* |
| *J* | *1977.04.13* | நுவரெலியா | *2* | - | - | *3* | *5* |

27. மாணவர்கள் அவர்களது வயதின் ஏறுவரிசையில் ஒழுங்குப்படுத்தப்பட்டால் பத்தாவது மாணவனாக வருபவன் யார்? ......................

28. இம் மாணவர்கள் மத்தியில் வயதில் மிக மூத்தவர் யார்? ......................

29. S,C,D எனும் தரங்களுக்கு முறையே 1,2,3 எனும் புள்ளிகள் வழங்கப்பட்டால் அதிசிறந்த செயலாற்றுகையைக் கொண்டிருந்த மாணவன் யார் ..................

30. மேலேயுள்ள வினாவிற் கூறப்பட்டவாறு மாணவர்கள் பெற்ற தரங்களுக்கு விவரிக்கப்படும் புள்ளிகளுக்கு அமைய மாணவர்கள் ஏறுவரிசையில் ஒழுங்குப்படுத்தப்பட்டால் 6 ஆவது மாணவனாக வரக்கூடியவன் யார்? ......................

31. 1C,2 எனும் பாடசாலை வகைகள் இரண்டிலும் எந்த வகையான பாடசாலை க.பொ.த (சா.தர)பரீட்சையில் தனது மாணவர்களது செயலாற்றுகையின் அதியுயர்ந்த சராசரியைக் காட்டுகின்றது? ......................


32. மிகவுயர்ந்த புள்ளிகளைப்பெற்ற,வயதில் மிகக் குறைந்த மாணவனுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படுமாயின் எந்த மாவட்டத்திலிருந்து அந்த மாணவன் தெரிவுசெய்யப்படுவான்? ......................

33 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்கள் ஒரு பாத்திரத்திலிருந்து இன்னுமொரு பாத்திரத்திற்குத் தேனை ஊற்றும் மிகப் பிரசித்தமான பின்வரும் பிரசினத்தை அடிப்படையாகக் கொண்டவை.தரப்பட்டுள்ள அட்டவணையை ஆராய்ந்து வெற்றிடங்களை நிரப்புக.


ஒரு மனிதன் தேன் நிறைந்த பத்து லீற்றர் கொள்கலன்கள் இரண்டை வைத்திருந்தான். அத்துடன் அவனிடம் ஐந்து லீற்றர் அளவையொன்றும் நான்கு லீற்றர் அளவையொன்றும் இருந்தன. இரு அளவைகள் ஒவ்வொன்றினுள்ளும் அவன் சரியாக மூன்று லீற்றர் தேனை ஊற்றவேண்டும். பதினொரு கையாளுகைகளின் பின் தேன் எதனையும் வீணாக்காது இரு அளவைகளினுள்ளும் அவன் சரியாக மூன்று லீற்றர் தேனை ஊற்றமுடியும். வெற்றிடங்கள் பலவற்றைக் கொண்ட பின்வரும் அட்டவணை, கையாளுகைகள் பலவற்றின் பின் ஒவ்வொரு பாத்திரத்திலுமிருந்த தேனின் அடக்கத்தை (லீற்றர்களின் எண்ணக்கையை)க் காட்டுகின்றது. அட்டவணையை அவதானித்து 3, 4, 5, 6, 9, 10 என இலக்கமிடப்பட்டுள்ள. கையாளுகைகளின் இறுதியில் ஒவ்வொரு பாத்திரத்திலும் இருக்கவேண்டிய தேனின் அளவை இனங்காண்க. உமது விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | 10 லீற்றர் கொள்கலன் | 10 லீற்றர் அளவை | 5 லீற்றர் கொள்கலன் | 4 லீற்றர் அளவை |
|---|---|---|---|---|---|
| | தொடக்கத்தில் | 10 | 10 | 0 | 0 |
| | 1 ஆவது கையாளுகையின் பின் | 5 | 10 | 5 | 0 |
| | 2 ஆவது கையாளுகையின் பின் | 5 | 10 | 1 | 4 |
| 33 | 3 ஆவது கையாளுகையின் பின் | ...... | ...... | ...... | ...... |
| 34 | 4 ஆவது கையாளுகையின் பின் | ...... | ...... | ...... | ...... |
| 35 | 5 ஆவது கையாளுகையின் பின் | ...... | ...... | ...... | ...... |
| 36 | 6 ஆவது கையாளுகையின் பின் | ...... | ...... | ...... | ...... |
| | 7 ஆவது கையாளுகையின் பின் | 9 | 3 | 4 | 4 |
| | 8 ஆவது கையாளுகையின் பின் | 9 | 3 | 5 | 3 |
| 37 | 9 ஆவது கையாளுகையின் பின் | ...... | ...... | ...... | ...... |
| 38 | 10 ஆவது கையாளுகையின் பின் | ...... | ...... | ...... | ...... |
| | 11 ஆவது கையாளுகையின் பின் | 4 | 10 | 3 | 3 |

39 தொடக்கம் 44 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமானத்தைக் கண்டு அதனைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக?

39. 

(.............................)

40. 

(.............................)

41. 

(.............................)

42. 

(.............................)

43. 


(.............................)

44. 

(.............................)


45 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தாயக்கட்டையின் நான்கு தோற்றங்கள்(பார்வைகள்) தரப்பட்டுள்ளன. இத் தோற்றங்கள்,தாயக்கட்டையானது எவ்வாறு மூன்று தடவைகள் குறித்த ஒரு கோலத்திற்கு அமையவும் இன்னுமொரு தடவை கோலத்திற்கு முரணாகவும் திருப்பப்பட்டுள்ளது.என்பதைக் காட்டுகின்றன. கோலத்திற்கு முரணாக அமையும் தோற்றத்தைக் கண்டுபிடித்து அதைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

45.





(......................)

46.





(......................)

47.





(......................)

48.





(......................)

49.




(......................)

50.




(......................)

**இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III இற்கு (பொதுப் பதவியணி) ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2002**

**(02) கிரகித்தல்**
**Comprehension**

ஒரு மணித்தியாலம் முப்பது நிமிடம்
One hour and Thirty minutes

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் பந்திகளை வாசித்து, ஒவ்வொரு பந்தியினதும் பிரதான கருத்தை இயன்ற அளவு சுருக்கமாக ஒரு தனிவாக்கியத்தில் எழுதுக. தடித்த அச்சில் உள்ள சொற்றொடர்களின் கருத்தைப் பந்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(அ) தற்காலச் சமூகத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகப் பொதுவாகக் கருதப்படும் பொருளாதார அபிவிருத்தியும் அதனால் உண்டான பொருளாதார மதிப்புகளும் எமது பண்பாட்டின் சாரமாகவுள்ள மனித விழுமியங்களை மறைப்பதற்கு இடமளித்தல் கூடாது. ஒவ்வொரு தனியாளுக்கும் முழு மனித வளர்ச்சியை அடைவதற்குரிய வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். கல்வி வாய்ப்புக் கோட்பாடு இன்று ஓர் ஒழுகலாற்று உரிமையாகக் கருதப்படுகின்றது. எனினும் கல்வியின் பல்வேறு மட்டங்களிற் சமமான வாய்ப்புகள் வழங்கப்படாவிட்டால், சமூக நீதியைப் போதிய அளவுக்குப் பேண முடியாது. ஆகவே கல்வியில் சமவாய்ப்புக்களை வழங்குதலானது சமூக நிலைப்பாட்டிற்கும் சமூக நீதிக்கும் பயனுள்ளதொரு சாதனமாகும்.

(ஆ) உலகமயமாக்கல் இன்று பிரதானமாகக் கட்டற்ற சந்தை சக்திகள் மற்றும் வர்த்தக நலனகள் என்பவற்றினால் உந்தித்தள்ளப்பட்டு வருகின்றது. அது உலக நாடுகளுக்கு வளர்ச்சிக்கும் அநுகூலங்களின் நியாயமான பகிர்வுக்குமான வாய்ப்புக்களை வழங்குவதில் தோல்வி கண்டுள்ளது.அது உண்மையிலேயே சில நாடுகளுக்கு - வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் புதிதாகத் தொழில் மயமாகிவரும் வளர்முக நாடுகள் சிலவற்றுக்கும்-வாய்ப்புக்களையும் அனுகூலங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளது.என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது பெரும்பாலான வளர்முக நாடுகளை உதாசீனப்படுத்தியுள்ளது. வளர்ச்சி அடைந்த நாடுகள் அல்லது கைத்தொழில் நாடுகள் என்பனவும் அந்நாடுகளில் வாழும் பெரும் செல்வந்தர்களும் உலகமயமாக்கலின் மூலம் உச்ச மட்ட அனுகூலங்களை ஈட்டிக்கொண்டுள்ளனர். மிக வறிய வளர்முக நாடுகளும் அந்நாடுகளில் வாழ்ந்து வரும் வறிய சமூகப் பிரிவும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.

(இ) அதிகரித்த நீர்பாசன வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருந்தமையும் உயர் விளைச்சலைக் கொண்ட குறுங்கால நெல் வகைகள் தெரிவு செய்யப்பட்டமையும் காரணமாக நிலையான சாகுப்படிபருவங்களின் முக்கியத்துவம் வெளிப்படையாகக் கவனிக்கப்டவில்லை. நிலையான சாகுபடிக் காலங்களின் தெரிவு சூரிய ஒளியின் உச்ச பயன்பாட்டுடன் மழை நீர் வேளாண்மையை ஆரம்பிப்பதற்கும் தாவரங்களின் தகுந்த வளர்ச்சிக்குத் தேவையான பிற வானிலை நிலைமைகளின் பயன்களை மிகுந்த அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கும் நோய்களையும் பீடைகளையும் ஒழிப்பதற்கும் உதவும். இது மேலும் விளைச்சலை அதிகரிக்கச் செய்வதுடன் நோய்கள், பூச்சித் தொந்தரவு என்பவை நிகழும் சந்தர்ப்பங்களைக் குறையச் செய்து நீரைச் சேமிப்பதற்கும் உதவும்.

2. பின்வரும் உரைப்பகுதியை உமது சொந்த உரைநடையில் ஏறத்தாழ 90 சொற்களில் சுருக்கி எழுதி, அதற்குப் பொருத்தமான ஒரு தலைப்பையும் இடுக.

மனித குலத்தின் தோற்றம் முதல் வேளாண்மையே உலக பொருளாதாரத்தின் பிரதான நடவடிக்கையாக இருந்து வந்துள்ளது. ஆனால், கைத்தொழிற் புரட்சி நவீன தொழினுட்பத்துடன் இணைந்த விதத்தில் இந்நிலையை மாற்றியமைத்தது.இன்றைய சூழ்நிலையில் பிரதானமாகக் கைத்தொழில் அபிவிருத்தியின் அடிப்படையிலேயே ஒரு நாட்டின் அபிவிருத்தி மதிப்பிடப்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையிலும் கூட அண்மைக்காலம் வரையில் அதன் சமூக, பொருளாதார வாழ்க்கையில் வேளாண்மைத் துறையே அடிப்படை ஆதாரமாக இருந்துவந்தது. ஆசியாவின் ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் போது பாரிய அளவிலான கைத்தொழில் அபிவிருத்தி இலங்கையில் மெதுவாகவே இடம் பெற்று வந்துள்ளது. 1950 களின் தொடக்கத்தின் போது அரச தொழில் முயற்சிகளாகச் சில கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன.பின்னர் தனியார் துறையும் கைத்தொழில்களில் படிப்படியாக ஈடுபடத் தொடங்கியது.

அரச துறைக் கைத்தொழில்கள் 1950 களின் பிற்பகுதியிலும் 1960 களின் ஆரம்பத்திலும் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இவற்றில் சில கைத்தொழில்கள் வெற்றியடைந்தன. ஆனால் வெளியீட்டுப் பொருட்களின் மோசமான தரம் மற்றும் தொழினுட்ப, நிர்வாகப் பிரச்சனைகள் போன்றவை காரணமாகப் பெரும்பாலான கைத்தொழில்கள் தோல்வி அடைந்தன.1970 களின் பிற்பகுதியில் தனியார் துறையின் பாரிய அளவிலான பங்கேற்பும் சந்தைப் பொருளாதாரத்தின் அறிமுகமும் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியில் பேரளவிலான ஒரு முன்னோக்கிய பாய்ச்சல் ஏற்படுவதற்கு வழிகோலின என்பதை எவரும் மறுக்க முடியாது. துரித வேகத்தில் மாற்றம் கண்டுவரும் உலகு ஒன்றில் இலங்கையும் செயல்முனைப்புடன் நிலைத்து வர வேண்டுமானால் வேளாண்மைத் துறையின் அபிவிருத்தியில் மட்டும் தங்கியிருப்பது போதியதாக இருக்கமாட்டாது. இலங்கையும் அலையுடன் சேர்ந்து நீந்திச் செல்ல வேண்டியுள்ளது. உள்நாட்டுக் கைத்தொழில்களின் உற்பத்தி பொருள்கள் இறக்குமதிப் பொருள்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. நவீன தொழினுட்பம் மற்றும் அறிவு என்பவற்றின் மாற்றலுடன் இணைந்த விதத்தில் உற்பத்திப் பொருள்களின் தரம் விருத்தி கண்டுள்ளது. மேலும் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்கள் ஆரம்பிக்கபட்டுள்ளன. இதன் விளைவாக, கைத்தொழிற் பொருள்களின் ஏற்றுமதியிலும் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. பல கூட்டு முயற்சிகளுடன் இணைந்த விதத்தில் பாரிய அளவிலான அன்னிய மூலதனம் நாட்டுக்குள் வந்துள்ளது.

3. பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் (அ), (ஆ) (இ) என மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. உமது அபிப்பிராயத்திற்கமைய இக்கூற்றுகளுள் எது தரப்பட்டுள்ள உரைப்பகுதிக்கு மிகப் பொருத்தமானது என எடுத்துக்காட்டுக.

உதாரணமாக, உரைப்பகுதி (i) இன் இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் உரைப்பகுதிக்கு மிகப் பொருத்தமான கூற்று (ஆ) என நீர் கருதுவீராயின், உமது விடை பின்வருமாறு அமைதல் வேண்டும்.
(i) - (ஆ)

(i) பல வளர்முக நாடுகள் துரித நகரமயமாக்கல் பற்றிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ளன. இலங்கையில் நகரங்களை நோக்கிய இழுப்பு அந்த அளவுக்கு உயர்வானதாக இருக்கவில்லை. நகரக் குடித்தொகை இப்பொழுது நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 22 சதவீதம் அளவில் உள்ளது. இதில் மெதுவான ஓர் அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது என்பதைத் தரவுகள் காட்டுகின்றன.
எனினும், துரித வேகத்தில் அபிவிருத்தி இடம்பெறக்கூடிய வாய்ப்பும் வருமானங்களிலான செங்குத்தான அதிகரிப்பும் சேர்ந்து 2020 ஆம் ஆண்டளவில் நாட்டின் நகரக் குடித்தொகை 40-50 சதவீதமாக இருப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கும் அதே வேளை அது உணவு நுகர்ச்சியில் கணிசமான அளவில் செல்வாக்குச் செலுத்தும்.

(அ) பல வளர்முக நாடுகள் நகரமாக்கல் பற்றிய பிரச்சனையை எதிர்நோக்குகின்றன.
(ஆ) தரவுகளுக்கு ஏற்ப, நகரங்களுக்கு வரும் மக்களின் தொகை குறைவாகும்.
(இ) 2020 ஆம் ஆண்டளவில் குடித்தொகை அதிகரிப்பு உணவு நுகர்ச்சியில் கணிசமான அளவில் செல்வாக்குச் செலுத்தும்

(ii) பண்டைய இந்தியாவில் "கார்ஷா பணம்" என அழைக்கப்பட்ட முத்திரைக் குறியிட்ட நாணயங்களை நாணயவியலாளர் இரு பிரதான தொகுதிகளாக வகைப்படுத்துவர். அவற்றுள் முதலாவது உள்ளூரில்அடிக்கப்பட்டு வரையறைக்குட்பட்ட ஒரு பிரதேசத்தில் சுற்றோட்டத்திலிருந்த "ஜனபத" என நாணய வரிசையைக் கொண்டிருந்தது. ஒருங்குபடுத்தும் ஓர் அதிகார்த்தின் பாதுகாப்பின் கீழ் அடிக்கப்பட்ட இரண்டாவது தொகுதி, பேரரசு நாணய வரிசையாகக் கொள்ளப்பட்டது. பேரரசு வரிசை நாணயங்கள் மகதப் பேரரசு உருவாகிய காலத்தில் தோன்றி மௌரியப் பேரரசின் காலத்தில் முழுமையாக விருத்தியடைந்தன, இப்பேரரசு நாணயங்கள் அவற்றின்வேலைப்பாட்டிற்கமைய இரு முக்கிய வகுதிகளாகப் பிரிக்கப்படலாம். அவற்றுள் ஒரு வகை மௌரிய காலத்துக்கு முற்பட்ட காலத்தையும் ஆரம்ப மௌரிய காலத்தையும் சேர்ந்தவையாகக் கருதப்படும் அளவில் ஓரளவு பெரிய, தடிப்பற்ற நாணயங்களாகும். மறுவகை மௌரிய கால நடுப் பகுதியையும் பிற்பகுதியையும் சேர்ந்தவையாகக்

கருதப்படும் அளவிற் சிறிய தடித்த நாணயங்களாகும். சில விதிவிலக்குகளுடன், தீவிற் காணப்பட்ட அனைத்து நாணயங்களும் இரண்டாவது வகுதியைச் சேர்ந்தவையாக இருந்தன.

(அ) பண்டைய இந்தியாவில் இருந்த கார்ஷா பணத்தை ஜனபத நாணய வரிசை, பேரரசு நாணய வரிசை என இரு வகுதிகளாகப் பிரிக்கலாம்.

(ஆ) மௌரிய காலத்திற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தநாணயங்கள் பெரிய, தடிப்பற்ற நாணயங்களாகவும் சிறிய, தடித்த நாணயங்களாகவும் இருந்தமை சிறப்பம்சமாகும்.

(இ) தீவிற் காணப்பட்ட அனைத்து நாணயங்களும் பேரரசு வகுதியைச் சேர்ந்தன.

(iii) இலங்கைச் சுகாதாரத் துறைச் சீர்திருத்தங்களின் பிரதான சவால்கள் தற்சமயம் தனியார் துறையின் விரிவாக்கம், பன்முகப்படுத்தல் என்பவற்றைச் சுற்றியே ஒன்றுபட்டுள்ளன. சுகாதாரத் துறைச் சீர்திருத்தம் என்பதன் உண்மையான பொருள் அடிப்படை மாற்றங்கள் எனப்பட்டபோதும் இற்றைவரை, பாரம்பரிய நிருவாக ஒருங்கமைப்பின் கீழ் உயர் தனிமைப்பட்டு நிற்கும் சுகாதார முறைமையைப் பொறுத்தவரை இம்முறையைச் சீர்திருத்த இலங்கை உயர் மாற்றங்கள் கொண்ட பொதி ஒன்றினை ஏற்க வேண்டியுள்ளது. மாகாண சுயாட்சி, மாகாண, பிரதேச, தாபன, நிகழ்ச்சித்திட்ட மட்டங்களில் உபாயங்களை வகுத்து அமுல் நடத்தல் என்பவற்றிற்கு உரிய அங்கீகாரம் அளித்து முழுச் சுகாதார முறைமையையும் படிப்படியாக மீளமைத்தல்பன்முகப்படுத்தலின் தீர்க்கமான விவகாரமாகும்.

(அ) இலங்கையில் தனியார் துறை எதிர்நோக்கும் சவால்கள் தனியார் துறையின் விரிவாக்கம் ஒருமுகப்படுத்தல் என்பவற்றைச் சுற்றியே ஒன்றுபடுத்தப்பட்டுள்ளன.

(ஆ) உயர் மாற்றங்களைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டத்தைத் தெரிந்தெடுத்து சுகாதாரத் துறையைச் சீர்திருத்தல் அவசியமானதாகும்.

(இ) பன்முகப்படுத்தலுடன் பிணைந்த பல பிரச்சனைகள் உள்ளன.

4. பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து, அவ்வுரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை எழுதுக.

(i) பாடவிதானத்தின் மையத்துண்டம் மாணவர் கற்க வேண்டியுள்ள பெருந்தொகையான விடயங்களைக் கொண்டுள்ளது. இவ்விடயங்கள் வழக்கமாக மிகவும் தரப்படுத்தப்பட்டவையும் அச்சேற்றிய நூல்கள் மூலம் அறிவிக்கக்கூடியவையும் ஆகும். செயன்முறை வேலைக்கான அப்பியாசங்களும் அறிவுறுத்துரைகளும் விதிப்புகளாக வழங்கப்படலாம். ஆகவே மாணவர் வினைத்திறனுடன் கற்றலுக்கு நேரமும் வளங்களும் வழிகாட்டலும் உரிய நேரத்திற் பின்னூட்டலும் மட்டுமே அவசியமாகும்.

நல்ல பாடநூல்களும் செய்முறை அப்பியாசங்களுக்கான தெளிவான அறிவுத்துரைகளும் கற்றலுக்கான வழிகாட்டல்களும் செய்துகாட்டிய உதாரணங்களும் விடைகளுடன் கேள்விகளும் வழங்கப்பட்டால் மாணவர்கள் போதனாசாலைகளுக்குச் சென்று கற்பதைவிட அநேகமான மையத் துண்ட விடயங்களைத் தனி முயற்சியாலும் சுய கற்றலாலும் மிகவும் திறமையாகக் கற்றல் முடியும்.

கற்பித்தலில் ஆசிரியரின் உழைப்பு, அதாவது கற்பித்தலானது தூண்டலுக்கும் கருத்தையும் அகக்காட்சியையும் உருவாக்குவதற்குமே அவசியமாகின்றது. தகவல்களைப் பிரயோகித்தல், அறிவு மாணவர்களைச் சென்றடைதல், விளக்கத்துடனும் மகிழ்ச்சியுடனுஞ் செய்தல் ஆகியன எல்லாங் கற்பித்தலில் அடங்கல் வேண்டும். கற்பித்தல் வெளிப்படையாக நுண்ணறிவுடன் அதற்கு இருக்கும் தொடர்பைவிடப் புலக்காட்சியுடன் அதிக தொடர்புடையது. அஃது ஆசிரியரின்முன்மாதிரியால் நடத்தப்படுகின்றது. மாணவரின் கற்றலுக்கான விடயங்களை நன்கு ஒழுங்கமைப்பதன் மூலம், இப்பங்களிப்புக்காக ஆசிரியருக்கு வசதி அளிக்கப்படல் வேண்டும். கற்றலை மேற்பார்வை செய்தலும் கற்றலுக்கான விடயங்களை வழங்குதலும் அவருடைய வேலையாக இருக்கக்கூடாது. அதனைப் பாடநூல் ஒன்றின் மூலம் சிறப்பாகச் செய்யலாம்.

(அ) பாடவிதானத்தின் மையத் துண்டத்தின் இயல்பு யாது?

(ஆ) மாணவன் பாடவிதானத்தின் மையத் துண்டத்தை எங்ஙனம் நிறைவேற்றலாம்

(இ) கற்பித்தல் நுண்ணறிவைக் காட்டிலும் புலக்காட்சியுடன் அதிக தொடர்புள்ளது. எனவும் முன்மாதிரியான ஆசிரியர் அதற்கு அண்மையில் வருகின்றார் எனவும் இப்பந்திகள் உட்கிடையாகக் கருதுகின்றனவா?

(ஈ) பாடநூல்களின் மூலம் மிகச் சிறந்த முறையில் அடையத்தக்கது யாது?

(ii) உள ஆரோக்கியம், உடல் ஆரோக்கியம் என்பவற்றிலிருந்து கல்வியை வேறாக்கல், செயற்கையானது விரும்பத்தகாதது ஆகும். வெறும் பாடவிடயங்களைக் கற்றலுக்கும் மட்டுமட்டான ஓர் எண்ணிக்கையுடைய குறிப்பான திறன்களை விருத்தி செய்வதற்கும் பாடசாலை நடவடிக்கைகளை மட்டுப்படுத்தலால், வளரும் பிள்ளை ஒன்றின் விருத்தியிலும் கல்வியிலும் ஒரு பெரும் பகுதி கவனியாது விடப்படுகின்றது. பிரச்சனைக்குரியதாகியுள்ள இளைஞர் பிராய வாழ்க்கை அமிசங்களைக் கவனிக்கும்பொழுது, மிக இளமையிற் பாடசாலைக்குச் செல்வதாற் பிள்ளை ஒன்றின் கல்வியியற் பல முக்கியமான அமிசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என ஊகிக்கத் தோன்றுகின்றது.

உடற்கல்வி என்பது பிள்ளைகளைப் பரிசில்பெறும் நோக்கத்துடன் போட்டி விளையாட்டுக்களிலும் ஆட்டங்களிலும் போட்டிகளிலும் பங்குபற்றச் செய்தலும் அவற்றிற்காகப் பயற்சியளித்தலுமாகும் என்ற தவறான கருத்து ஒன்று நிலவுவதாகத் தெரிகின்றது. குழு உறுப்பினரும் வெற்றியீட்டுபவர்களும் பயிற்சியளிப்பவர்களும் அமைப்பாளர்களும் மட்டும் பிரசாரமும் முதலிடமும் பெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளையும் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியாட்டங்களையும் விருத்தியாக்கி ஒழுங்கமைக்கும் செயற்கிரமத்தில், ஒவ்வொரு பிள்ளையும் முறையாகவும் ஒழுங்காகவும் உடற்பயிற்சி செய்து, உடல் ஆற்றல்களை விருத்தியாக்கிக்கொள்ளச் செய்யும் வழக்கமான செயற்பாடு முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றது. பிள்ளைகளும் பெற்றோரும் ஆசிரியரும் உடலுக்கு ஒழுங்கான பயிற்சி அவசியம் என்பதையும் பிள்ளைகள் உடலைப் பேணக் கற்றல் அவசியம் என்பதனையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

(அ) வளரும் பிள்ளைகளின் விருத்தியிலும் கல்வியிலும் ஒரு பகுதி கவனியாமல் விடப்படுகின்றமைக்குக் காரணங்கள் யாவை?

(ஆ) இளைஞர் பிராய வாழ்க்கை பிரச்சனைக்குள்ளாகி இருப்பதேன்?

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தவறான கருத்து யாது?

(ஈ) பெற்றோரும் ஆசிரியர்களும் எதனை உணராமல் உள்ளனர்?

(iii) மருத்துவம், தொழினுட்பவியல் போன்ற வாண்மைத் தொழிற்றுறைகளிற் பட்டப்படிப்பு மட்டப் பயிற்சி நெறிகளை நடத்தும் தனியார் கல்வி நிறுவகங்களின் தேவைப்பாடு உண்டு என்பது எடுத்துகாட்டப்பட்டுள்ளது. அத்தகைய நிறுவகங்கள் நிலைபெற்றுள்ள பல்கலைக்கழகங்களுடன் கொண்டுள்ள தொடர்பும் அவற்றின் பாடவிதானங்கள் தொழில் வழங்குநர்களின் அவசியத்துக்கேற்பவும் அமைந்திருத்தலானது அங்கு கற்கப்போகும் மாணவர்களும் அவர்களுக்குத் தொழில் வழங்குநர்களும் அவற்றை ஏற்றுகொள்ளலைத் தீர்மானிக்கும் காரணிகளாகும். மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து தேசிய பல்கலைக்கழகங்களில் சேர்ந்துகொள்வதற்கு இருக்கும் பெரும் போட்டியையும் அநேகமாகப் பெற்றோர்களால் இத்தனிப்படட்ட நிறுவகங்கள் அறவிடும் கட்டணங்களைச் செலுத்த முடியாதிருப்பதையும் கருதும்போது சமூக நீதியும் ஒப்புரவும் பற்றிய பிரச்சனை பெரிதாகின்றது. அரசாங்கத் துறையில் உள்ள வேலை வாய்ப்புக்கள் குறைந்து, தனியார் நிறுவகங்களால் பயிற்றப்பட்ட பட்டதாரிகளை, குறிப்பாக உயர்ந்த நிலைகளில் தனியார் வேலையில் அமர்த்த விரும்பினால் இவ்விடயங்கள் மேலும் மோசமடையும்.

தற்போதைய பல்கலைக்கழக முறைமை நாட்டின் தேவைகளையும் அளவிலும் தரத்திலும் உயர் கல்வியைப் பெறவிரும்பும் இளைஞர்களின் அபிலாசைகளையும் முழுமையாக நிறைவேற்றவில்லை என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும். புதிய பொருளாதாரக் கொள்கைகளின் பிரகாரம் மூன்றாவது வலுமிக்கச் சக்தி ஒன்றும் அஃதாவது தனியார் துறையின் எதிர்பார்ப்புகளுங் கவனிக்கப்படல் வேண்டும். மும்முனைகளிலிருந்து வந்து சேரும் கோரிக்கைகள் எப்பொழுதும் ஒரே பாங்கினவாய் இருப்பதில்லை. அவை ஒன்றுக்கொன்று நேரடியாக முரண்படுஞ் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். தீர்வுகள் இனங்காணப்பட்டாலும் வளங்களின் பற்றாக்குறை பல்வேறான கோரிக்கைகளை ஈடுசெய்யக்கூடிய பல்வேறான உபாயங்களுக்கு வழிவகுக்கும் எல்லாக் காரணிகளதும் சுய தொழிற்பாட்டை வள நெருக்கடிகள் தடைப்படுத்துகின்றன. சமூக நீதி ஒப்புரவுக் கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத் தலையீடும் முதலீடும் தேவைப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

(அ) வாண்மைத் தொழிற்றுறைகளில் பட்டப் படிப்பு மட்டப் பயிற்சிகளை நடத்தும் தனியார் நிறுவனங்களை ஏற்றுக்கொள்வதற்கு இன்றியமையாத காரணிகள் யாவை?

(ஆ) சமூக நீதியும் ஒப்புரவும் பற்றிய பிரச்சனைகள் யாவை?

(இ) நாட்டின் பல்கலைக்கழக முறைமை இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில்லையென இப்பந்திகள் குறிப்பிடுகின்றனவா?

(ஈ) எப்போதும் ஒரே பாங்காக இருக்க முடியாத மூன்றாவது வலுமிக்க சக்தி யாது?

**இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு தமிழ் மொழி மூல உத்தியோகஸ்த்தர்களை (பொதுப் பதவியணி) ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, 2000**

(02) கிரகித்தல்
**Comprehension**

ஒரு மணித்தியாலம் முப்பது நிமிடம்
One hour and Thirty minutes

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் பந்திகளை வாசித்து, ஒவ்வொரு பந்தியினதும் பிரதான கருத்தை இயன்ற அளவு சுருக்கமாக ஒரு தனிவாக்கியத்தில் எழுதுக. தடித்த அச்சிலுள்ள சொற்றொடர்களின் கருத்தைப் பந்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(அ) மாணவரின் பேறுகள் நம்பிக்கைகுரியனவாதற்கு அவர்கள் ஆய்வொன்றைச் செய்யும்போது உண்மையாக நிகழ்வதை நுணுக்கமாகக் கவனித்தல்வேண்டும். உதாரணமாக:- தாவரங்களின் இலைகள் நீரை வெளிவிடுகின்றனவா, இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க அவர்கள் எத்தனிக்கிறார்களென ஆயத்தஞ் செய்கிறார்கள். சாடியிலுள்ள பவனத்தோடு மண்ணைத் தொடர்பற்றதாக்குகிறார்கள். அடுத்தநாட்காலையிற் சாடியின் உள்ள மேற்பரப்பில் நீர்த்துளிகள் காணப்படுகின்றன. பிரச்சினைக்கு விடை கண்டுவிட்டதாகப் பிள்ளைகள் உடனே தீர்மானித்துக்கொள்கின்றனர். ஆனாற் சாடியிலுள்ள பவனத்திலிருந்த நீரானது வரவில்லையென்று திடமாக அவர்களால் எப்படிச் சொல்லமுடியும்? அவர்களால் முடியாது. தாவரம் மட்டுமன்றி தாவரச்சட்டி, மண் முதலானற்றைக் கொண்டு முன்பு அமைத்தது போலவே வேறோர் உபகரணம் அமைத்துக் கொள்கிறார்களென வைத்துக்கொள்வோம். சாடிகள் பக்கத்துக்குப் பக்கமாக வைக்கப்பட்டு நன்கு அவதானிக்கப்படல் வேண்டும். இப்போது தாவரத்தைக் கொண்ட சாடியின் உட்பரப்பில் நீர்த்துளிகள் காணப்பட்டு மற்றச் சாடியின் உட்பரப்பிற் காணப்படாவிடில் தாவரத்தின் இலைகளிலிருந்தே நீர் வந்திருக்க வேண்டும். ஆய்வுகள் பிள்ளைகளின் தொழில்களாக அவற்றின் உண்மையான கருத்தைப் பெற வேண்டுமானால் கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வின் இவ்வழியானது அவசியமாகின்றது. முடிவுகளைப் பெற முன்பு பல முறை செய்யப்படல் அவசியமென்பது இத்தொடர்பில் வற்புறுத்தப்பட வேண்டியதாகும்.

(ஆ) நவீன உலகுக்கும் "தகவல் யுகத்துக்கும்" முகங் கொடுக்கக்கூடிய ஒரு மொழியாகத் தமிழ் வளர வேண்டுமாயின் அதைக் கணனிக்குப் பொருத்தமானவகையில் வளர்ப்பதைவிட முக்கியமான காரியங்கள் நம்முடன் உள்ளன. தமிழின் அறிவுத் தரம் உயரவேண்டும். மனித அறிவைப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அளவிடுவதன் பொருத்தமின்மை பற்றி நான் விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை. பாடசாலை, பல்கலைக்கழக வகுப்பறைகட்கு வெளியேதான் நமது அறிவின் பெரும்பகுதி பெறப்படுகின்றது. நம் உலக அறிவை வளர்ப்பதிற் செய்தி ஊடகங்களின் பங்கு பெரியது. அவை பற்றிய சிறந்த விவாதங்களின் பங்கு பெரியது, புதுமை நவீனத்துவம் என்று மார்தட்டிக் கொண்டுவரும் பொம்மலாட்டங்களை விடத் தெளிவான சிந்தனையின் பங்கு பெரியது. செய்நேர்த்தியின் பங்கு பெரியது, எல்லாவற்றினும் மேலாக எதையும் கேள்விக்குட்படுத்தும் நேர்மையான விமர்சன மனோபாவத்தின பங்கு பெரியது. இன்று நமது கல்வி முறையோ தகவற் துறைகளோ அதை ஊக்குவிக்கத் தக்கனவற்றைச் செய்யவில்லை என்பது வருந்தத்துக்குரிய உண்மை.

(இ) நாட்டில் பொதுக்கல்வியின் மட்டத்தினை மேம்படுத்துவற்காகப் பல செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வசதியற்ற குழுக்களுக்குக் கல்வி வசதிகளின் கிடைப்பனவினை அதிகரிக்கச் செய்வதற்காகப் பிரதேச மட்டத்தில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமது வீட்டுக்கு அருகாமையிலேயே கிராமியச் சிறுவர்கள் சிறந்த கல்வி வசிதியினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒவ்வொரு பிரதேச சபையிலும் ஆககுறைந்தது ஒரு பாடசாலையாவது அபிவிருத்தி செய்யப்படும் இச் செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக 325 பாடசாலைகள் தெரிந்தெடுக்கப்பட்டதோடு இப்பாடசாலைகளில் பெரும்பாலானவற்றிற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டன. ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், மனிதவள அபிவிருத்தியின் சிறந்த மேற்பார்வை என்பவற்றை வழங்குவதன் மூலம் இந்த பாடசாலைகளின் கல்வித் தரம் மேம்படுத்தப்படவுள்ளது.

ஈ) பின்வரும் உரைப்பகுதியை உமது சொந்த உரைநடையில் ஏறத்தாழ 90 சொற்களிற் சுருக்கியெழுதி அதற்குப் பொருத்தமான ஒரு தலையங்கத்தையும் தருக.

சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் தமிழைக் கல்லூரி மொழியாக்கும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. தமிழில்தான் மாணவர்கள் நன்கு புரிந்து கொள்கிறார்கள். ஆசிரியர்களால் ஐயமறக் கற்றுக் கொடுக்க முடிகிறது என்று கூறப்படுகிறது. சமூகவியலிலுள்ள நூல்களெல்லாம் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. ஆசிரியர்களும் ஆங்கிலத்தில்தானே அவற்றைக் கற்கிறார்கள். ஆகவே ஆங்கிலம் தான் சமூகவியலை கற்கவும் கற்பிக்கவும் உகந்தமொழி என்று பிறர் கூறுகின்றனர். ஆங்கிலமும் அதற்கிருந்த ஆட்சி மொழித்தகுதியை இழந்து கொண்டிருக்கின்றது. ஆங்கிலம், இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் நன்கு பாதுகாக்கப்பட்டுக் கற்பிக்கப்படவில்லை. கல்லூரிக்கு வந்து சேரும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் எழுதவும் பேசவும், புரிந்துகொள்ளவும், போதிய புலமையும், பயிற்சியும் இல்லை. தற்காலத் தமிழ்நாட்டு மாணவர்கள் சமூகவியலை ஆங்கிலத்தில் கற்கின்றவராயினும், கசடறக் கற்க முடியவில்லை. இந்நிலையில் தமிழே போதுமானது என்று கூறுகின்றனர் இன்னுமொரு சாரார். இத்தகைய பல்வேறு கருத்துக்களிடையே தமிழைக் கல்லூரிமொழியாக்கும் திட்டமும் சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் பரிசீலனைக்குள்ளாகியிருக்கின்றது.

தமிழில் முடியாதது என்ன இருக்கிறது? முடியும் என்று ஒரு வார்த்தையிலேயே நான் என் கருத்தைக் கூறுவேன். தமிழில் முடிய வேண்டுமானால் சில நிபந்தனைகள் தேவையாகவேயிருக்கின்றன. திரும்பத் திரும்பக் குறளைமட்டும் போற்றிக் கூறிக்கொண்டிருந்தால் போதாது. நமது இன்றைய அரசியல் தத்துவம், ஆட்சிமுறை, அரசியலமைப்பு, சட்டம் பொருளாதாரக் கொள்கை, அதன் குறிக்கோள் போன்றன தமிழ் இலக்கியங்களில் பகுதியாக இல்லை என்பது மட்டுமன்றி, இன்று நமது இலக்கியத்தில் சமூகவியலுக்கும், அதன் பகுதியாகிய அரசியல், ஆட்சியியல் போன்ற இயல்களுக்கும் போதிய நூல்கள் இல்லையென்றே கூறலாம்.

இவ்வகை நூற்கருத்துக்கள் பழந்தமிழனின் கலாச்சார, நாகரீக வாழ்க்கையில் அமைந்தவையல்ல, ஆகையால் இதுவரை நம் மொழியில் தகுந்த புத்தகங்கள் இல்லையென்றே கூறலாம். இந்த முட்டுக்கட்டையைச் சமாளிப்பதற்குச் சில வழிகள் உள்ளன. இவற்றில் அரசியலில் எழுத தகுதிபெற்றவர்களைக் கொண்டு, எழுதி முடிப்பது ஒன்று: ஆங்கில மொழியில் உள்ள புத்தகங்களை தக்கவர்களைக் கொண்டு மொழிபெயர்ப்பது மற்றுமொரு முறை, ஆங்கில மொழியிலுள்ள புத்தகங்களைத் தழுவித் தமிழில் எழுதுவது இன்னொன்று, இம்மூன்று வேலைகளையும் உடனடியாகவும், விரைவாகவும் செய்து முடிப்பது தான் மிகவும் அவசியம். இன்று ஆங்கில மொழியில் புலமை மிகுந்தவர்களும், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் அரசியல் ஆட்சியியல் துறைகளில் வல்லுனர்களாக ஏராளமானவர்களும் நம்மிடையே இருந்து வருகின்றனர். அவர்களுக்குத்தான் ஆங்கில மொழியில் உள்ள புத்தகங்களில் பொறிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் உட்கருத்தையும் பொருட்செறிவையும் தமிழ் மாணவர்கக்கும் தமிழுக்கு உதவியாக இருக்கும் வண்ணம் தமிழாக்கம் செய்ய முடியும். தமிழில் முடியும் ஆனால் அதற்கு இன்னும் சில ஆண்டுகள் தேவை என்று காலங்கடத்திக்கொண்டேபோனால் நான் மேற்கூறிய அறிவாளிகளின் தொண்டு நமக்கு கிடைக்கப்பெறாது. அவர்களுக்குப் பதில் தமிழ்ப் புலமை மட்டும் மிக்க தமிழறிஞர்கள் மொழிபெயர்ப்பு வேலையில்ஈடுபடுத்தப்படுவர்: பொருள் மாறுபடும்: பிற பல விபரீதங்களும் விளையும்.

3. பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் (அ), (ஆ) (இ) என மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. உமது அபிப்பிராயத்திற்கமைய இக்கூற்றுகளுள் எது தரப்பட்டுள்ள உரைப்பகுதிக்கு மிகப் பொருத்தமானது என எடுத்துக்காட்டுக. உதாரணமாக, உரைப்பகுதி (i) இன் இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் உரைப்பகுதிக்கு மிகப் பொருத்தமான கூற்று (அ) என நீர் கருதுவீராயின், உமது விடை பின்வருமாறு அமைதல் வேண்டும்.

(i) - (அ)

(i) குடும்ப அலகு என்பது ஒரு சக்தி வாய்ந்த அலகாக இருந்து வருகின்றது என்றும். "ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப " என்ற கோட்பாடு அதில் நிலவி வருகின்றது என்றும் டர்கொட் பார்ஸன்ஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார். கைத்தொழில் சமூகத்தின் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட வீட்டுக் குடும்பம், தொழில் முறைகளுக்கிடையில் நிலவி வரக்கூடிய வேறுபாடுளை உறிஞ்சிக் கொள்ளும் ஓர் அமைப்பாகச் செயற்பட்டு வருகின்றது என்பது அவருடைய கருத்தாகும். குடும்பத்தின் இணக்கமான இயற்கை கட்டமைப்பின் அத்திவாரம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு பாத்திரங்களை அளிப்பதிலேயே தங்கியுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் சமமமானவர்களாகவும் தொழில் கட்டமைப்பிற்குள் ஒருவருடன் ஒருவர் போட்டி போடக்கூடியவர்களாகவும் இருந்த வந்தால் குடும்ப அலகின் மீது பெருமளவுக்கு நெருங்குதல் மேற்கொள்ளப்பட முடியும். எனவே இந்தப் பின்னணியில்

ஆண்கள்(குறிக்கோளை சாதித்துக் கொள்ளல் மற்றும் குடும்பத்துக்கு இடையிலும் பரந்த சமூகத்திற்கிடையிலும் தொடர்புகளை மேற்கொள்ளல் போன்ற) முக்கியமான பங்குகளை வகித்து வருவதையும், பெண்கள் (பிள்ளைகளைப் பிரசவித்தல், வளர்த்தல் போன்ற) சாதாரண பணிகளை மேற்கொள்வதனையும் உறுதி செய்வதற்கு பால் பேதம் உருவாக்கப்பட்டுள்ளது.

(அ) பால்பேதம் உருவாக்கப்பட்டமைக்குக் குடும்ப அமைப்பே அடிப்படைக் காரணம் என்பதை டல்கொட் பார்ஸன்ஸ் எடுத்துக் காட்டியுள்ளார்.

(ஆ) ஆண் பெண் வேலைப்பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட குடும்ப உறுப்பினரிடையே சமத்துவமும் தொழில் துறைப் போட்டியும் தோன்றுமிடத்து குடும்ப அலகின் மீது ஏற்படக்கூடிய நெருக்குதலைத் தவிர்ப்பதற்குப் பால்பேதம் உருவாக்கப்பட்டது.

(இ) கைத்தொழிற் சமூகத்தின் குடும்ப அமைப்பில் ஆண்கள் முக்கியமான பாத்திரத்தையும் பெண்கள் கீழ்மட்ட பாத்திரத்தையும் வகிக்கின்றனர்.

(ii) ஏகாதிபத்தியம், முதலாளியம், அரசு அதிகாரம், வணிகக் கலாச்சாரம், ஆகிய அனைத்தும் தொடர்ந்து செயல்படுவதன் மூலம் கலாச்சாரப் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. சுரண்டலும் ஒடுக்குமுறையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள், மக்கள் வறுமைக்கு, கடுமையான சுரண்டலுக்கு, அதற்கான ஒடுக்குமுறைக்கு தொடர்ந்து உள்ளாக்கப்படும் பொழுது, மனித வாழ்க்கை பற்றிய இலட்சியங்கள் அவர்களுள் அழிக்கப்படுகின்றன. வெறும் உணவுக்காகவும் இன்பத்திற்காகவும் வாழ்வதே வாழ்க்கை என்று ஆகிவிடுகின்றது. உண்பது, புணர்வது, இருப்பிடம் தேடி உறங்குவது என்ற நிலையில் மிருகத்திற்கும், மனிதனுக்கும் இடையிலான வேறுபாடு அழிகிறது. மனிதன் பண்டமாகிறான். பயன் மதிப்பு அற்றுப் போகிறான் சில சந்தர்ப்பங்களில் பரிமாற்ற மதிப்பு இவனுக்கு இல்லை. இந்நிலையில் இவன் சமூகத்திற்குத் தேவையற்றவன் ஆகிறான். அதாவது, முதலாளியத்திற்கு அதன் உற்பத்தி செயலுக்கு இவன் தேவையில்லை. உண்பதற்கும் உயிர் வாழ்வதற்குமான ஆதாரம் மறுக்கப்படும்பொழுது இவன் திருடனாகிறான் மனிதப் பண்பினை இழக்கிறான்.

(அ) ஏகாதிபத்தியமும் வர்த்தக கலாச்சாரமும் மக்களை ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாக்குகின்றன.

(ஆ) ஏகாதிபத்திய, வர்த்தக கலாச்சார சூழலில் சுரண்டப்படும்போது மனிதன் சுயமதிப்பற்றவனாகிறேன்.

(இ) மனிதனுக்குப் பரிமாற்ற மதிப்பு இல்லாதவிடத்து அவனுடைய வாழ்வு அர்த்தமற்றதாகிவிடுகிறது.

(iii) சுற்றுலாத் துறையில் வேலைவாய்ப்புக் குறித்த மற்றொரு சிறப்பம்சம், இந்த துறையின் பெரும்பாலான நடவடிக்கைகளுக்கு உயர்ந்த கல்வித் தகைமைகளைக் கொண்டவர்களோ அல்லது உயர்மட்டத்திலான தொழில்சார் திறமைகளைப் பெற்றிருப்பவர்களோ தேவைப்படுவதில்லை எனப்படுவதாகும். சுற்றுலாவுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு முகாமை, விஞ்ஞான மற்றும் தொழில்சார் ஊழியர்கள் ஒரு சிலர் மட்டுமே தேவைப்படுகின்றார்கள். ஆனால், அதேவேளையில், மேற்பார்வைத் தரங்கள், இலிகிதர் தரங்கள் போன்றவற்றைச் சேர்ந்த ஊழியர்களும் இயங்குதல் மற்றும் உடல் உழைப்புத் தொழிலாளர் போன்றவர்களும் அதிக எண்ணிக்கையில் இத்துறைக்குத் தேவைப்படுகின்றனர். சுற்றுலாக் துறையில் நேரடியாக தொழில்வாய்ப்புக்களை பெற்றிருப்பவர்களில் சுமார் 87 சதவீதத்தினர் ஓரளவுக்குத் தேர்ச்சி பெற்ற மற்றும் உடலுழைப்பு வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களாகவே இருந்து வருகின்றனர். சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மிகப் பெரிய தனியொரு துறையான ஹோட்டல்துறை ஊழியர்களில் 90 சதவீதத்தினர் ஓரளவுக்கு தொழில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் தேர்ச்சியற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

(அ) சுற்றுலாத்துறையில் உயர்கல்வித் தகைமைகள் இன்றி ஒருவர் தொழில் வாய்ப்பினைப் பெறமுடியும்

(ஆ) சுற்றுலாத் துறையின் சிறப்பு யாதெனில், அத்துறையில் பணியாற்றுவோருள் 87 சதவீதத்தினர் ஓரளவு தேர்ச்சிப் பெற்றவர்களாகவும் உடல் உழைப்பாளர்களாகவும் உள் அதே வேளை ஹோட்டல் துறையில் வேலை செய்வோருள் 90 சதவீதமானோர் குறைந்த தொழில் தேர்ச்சிப் பெற்றவர்களாக அல்லது தேர்ச்சியற்றவர்களாக இருப்பதாகும்.

(இ) சுற்றுலாத் துறை அதிகமானோருக்குத் தொழில் வாய்ப்புத் தகூடியதாக இருப்பதற்குரிய முக்கியமான காரணம் இத்துறைக்குத் தேவைப்படும் ஆளணியினருள் பெரும்பாலோருக்கு குறைந்த அல்லது இடைநிலை கல்வித் தகைமை இருந்தால் போதும் என்பதாகும்.

4. பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து, அவ்வுரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை எழுதுக.

(அ) தனியார் டியுசன் முறையின் பரவலான முறையில் ஏற்றுக்கொள்ளப்படும் அனுகூலம், அது மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பொது பெறுபேறுகளைப் பெறுவதற்கும், அதன் மூலம் பல்கலைக்கழக அனுமதியினை அல்லது வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒரு மேலதிக சக்தியை வழங்கி வருகின்றது என்பதாகும். தனிப்பட்ட முறையில் வழங்கப்படும் டியுசன் பலவீனமான மாணவர்கள், அவர்களின் செயல்திறன் குறைவாக இருந்து வரும் பாடங்களில் அதிகளவு கவனம் செலுத்துவதற்கு உதவ முடியும். தனிப்பட்ட ஒவ்வொரு மாணவரினதும் தேவைக்கு பொருந்தக்கூடிய விதத்திலான ஒரு போதனா முறையை அது சாத்தியப்படுத்துகின்றது. மாணவர் ஆசிரியர் வரவின்மை, பாடசாலை அடிக்கடி மூடப்படுதல், தாக்கமற்ற போதனா முறை, ஆசிரியரின் அக்கறையின்மை போன்ற பலவிதமான காரணிகளால் மாணவர்களின் படிப்பில் பாரிய இடைவெளிகள் தோன்றுகின்றன. கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற முக்கியமான பாடங்கள் தொடர்பான தேர்ச்சி பெற்றுள்ள ஆசிரியர்களை பெரும்பாலான பாடசாலைகள் போதியளவில் பெற்றிருக்கவில்லை. இப்பாடங்களை போதித்து வரும் அனுபவமோ முதிர்ச்சியோ அற்ற அல்லது உரிய தகைமைகளைப் பெற்றிராத ஆசிரியர்கள், அந்தந்தப் பாடங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளை மாணவர்களுக்கு சிறப்பாக எடுத்து விளக்க முடியாதவர்களாக இருந்து வருகின்றார்கள். இந்த மாணவர்கள், இத்தகைய இடைவெளிகளை அல்லது குறைபாடுகளை வெற்றி கொள்வதற்கு தாக்கமான தனியார் டியுசன் முறை உதவ முடியும். மேலும் மாணவர்கள் ஏனையவர்களுடன் போட்டி போடக்கூடிய ஒரு நம்பிக்கையையும், சந்தோசமான வாழ்க்கை அனுபவத்தினையும் அது அவர்களுக்கு அளிக்க முடியும்.

(i) தனியார் கல்வி நிறுவனங்கள் எவ்வகையில் மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன?

(ii) பாடசாலைக் கற்பித்தலின் பின்னடைவுகள் யாவை?

(iii) தனியார் கல்வி நிறுவனங்களில் பலவீனமான மாணவர்களுக்கு அதிக பயன் கிடைக்கிறது என்ற கூற்று எந்தளவிற்குப் பொருத்தமானது.

(ஆ) இன்று இலக்கியத்தில் முதன்மை வகிக்கும் திறனாய்வு முறைகள் எவ்வாறு ஒரு பிரதி பொருள்கொள்ளப்படலாம் என்ற வினாவை முக்கியப்படுத்தியுள்ளன. அதாவது ஒரு படைப்பு அழகியல் ரீதியாக உயர்தரத்தைக் கொண்டதாக இல்லையா என்பதைக் கேட்கமுன்பதாக, அப்படைப்பை எவ்வாறு நாம் விளங்கிக்கொள்கிறோம். என்பதே சர்ச்சைக்குரியது என்று இம்முறைகள் வலியுறுத்துகின்றன. இந்தவகையில் இம்முறைகளை வியாக்கியான முறைகள் அழைக்க வேண்டுமேயொழிய, திறனாய்வு முறைகள் என அழைக்க முடியாது. எனினும் ஆங்கில விமர்சன துறையிற் கூட இவ்வணுகுமுறைகளைத் "திறனாய்வு முறைகள்" என அழைக்கும் ஒரு நிலை பொதுவாக இருந்து வருகின்றது. வியாக்கியானம் சிக்கலடைவதற்குக் காரணம் இவ்வணுகுமுறைகள் மொழியைப்பற்றி வகுத்துக்கொள்ளும் சிறப்பான கண்ணோட்டமே. அதாவது மொழியின் அமைப்பு, அது தொடர்பாடலில் செயற்படும் விதம், எமது சிந்தனையிலும் சமூகவாழ்க்கையிலும் வகிக்கும் செல்வாக்கு என்பவற்றைப் பற்றி கூர்மையாய் அவதானிக்கும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. உண்மையில் அமைப்பியல் வாதமும் பின் - அமைப்புவாதமும் மொழியியற் துறையில், சிறப்பான பேடினன் டீ சசூரின் என்பவரின் மொழியியற் சிந்தனைகளிலிருந்து, உதயமாகின என்றால் மிகையாகாது. சுருங்கக் கூறின் இவ்வணுகுமுறைகளின் முக்கிய எடுகோள்களைப் பின்வருமாறு சித்திரிக்கலாம். "மொழியின் இடையீடின்றி நாம் எதனையும் பார்க்கவோ கிரகிக்கவோ விளங்கிக்கொள்ளவோ முடியாது.மொழியினூடாக கலாச்சார, சித்தாந்த , சமூக விழுமியங்களும் எமது கண்ணோட்டத்தை பாதிக்கின்றன. எனவே பாராபட்சமற்ற நடுநிலையான கண்ணோட்டமென்று ஒன்று இல்லை. எல்லாமே பற்றுள்ள, அவரவர் மொழி நிலைப்பட்ட வியாக்கியானங்களே, இதனால் உண்மை, யதார்த்தம், இயற்கை என்பவையெல்லாம் அவரவர் மொழியின் ஈடுபாடு இன்றிப் பற்றற்ற முறையில் ஆள்நிலைப்படாமல் புரிந்துகொள்ளமுடியாது. இவை உண்மையில் அவரவர் மொழியியல் வழிப்பட்ட உருவாக்கங்களே. இந்த வகையில் மொழிப் பின்னணிக்கேற்ப இவற்றின் விளக்கம் அல்லது அர்த்தம் வேறுபடும். இப்படியே ஓர் இலக்கியப் படைப்பும் பற்பல கருத்துக்களையும் ஒவ்வொரு வாசகனுக்கும் கொடுப்பது தவிர்க்க முடியாதது. அப்படியே உண்மை, யதார்த்தம், இயற்கை என்பன ஒன்றல்ல: பலருக்கும் பல. இத்தகைய மனப்பான்மை இலக்கியத்தோடு நின்றுவிடாமல் நடைமுறை வாழ்க்கையின் பல துறைகளை வியாக்கியானம் செய்வதனையும் பாதிக்கின்றன என்பது கண்கூடு. எனவே இவ்வியாக்கியான முறைகள் வேறுபல கலை,சமூக

அறிவியல் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. மொழியையும் வியாக்கியானத்தையும் முதன்மைப்படுத்தும் போக்குகள் இறையியல் முதல் சரித்திரம் உட்பட பௌதீக விஞ்ஞானம் வரை பல துறைகளிலும் ஊடுருவியுள்ளன.மானுடவியலாளர் கீட்ஸ் தான் ஒரு சமூகத்தின் பண்பாட்டை விளக்கும் அல்லது ஆராயும் முறையானது ஓர் இலக்கிய படைப்பை வியாக்கியானம் செய்யும் முறைக்கு ஒப்பானது என அண்மையில் கூறியுள்ளார். இந்த வகையில் இவ்வணுகுமுறைகள் இலக்கியம் வேறு துறைகளோடு தொடர்புபடவும், புலமைசார் உலகில் முக்கியத்துவம் பெறவும் வழிவகுத்துள்ளன. இலக்கியம் உட்பட எல்லாத்துறைகளிலும் ஒரு புரட்சிகரமான திருப்பத்தையும் இப்புதிய கொள்கைகள் ஏற்படுத்தியுள்ளன.

(i) புதிய இலக்கிய திறனாய்விலே பிரதியொன்று பெறும் முக்கியத்துவம் யாது?

(ii)இலக்கியத்தை விளங்கிக் கொள்வதில் மொழியின் பங்கு எத்தகையது?

(iii)மொழி நிலைப்பட்ட வியாக்கியானங்கள் நடுநிலைமையானவையாக ஏன் அமையமாட்டா?

(iv)புதிய இலக்கிய திறனாய்வு முறையில் மொழி பெற்றுள்ள செல்வாக்கு எப்படிப்பட்டது?

(இ) கடந்த சில தசாப்தங்களில் இலங்கை சார்பு ரீதியில் உயர்மட்ட சுகாதார தரங்களை எய்தியுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தேசிய சுகாதார குறிகாட்டிகள் ஆசியாவிலேயே மிகச் சிறந்தவையாகக் காணப்படுகின்றன. தொற்றுநோய்கள் அதேபோன்று தொற்றா நோய்கள் என்பன மீண்டும் மீண்டும் தலைதூக்குவதன் காரணமாக இத்தகைய பெறுபேறுகளின் மத்தியிலும் இலங்கையின் நலத்துறை புதிய அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மலேரியா, டெங்கு காய்ச்சல், ய்ப்பானிய மூளைக்காய்ச்சல் என்பன அண்மைக்காலங்களில் அடிக்கடி பரவியுள்ளன. இதேவேளையில் இருதய நோய்கள், நீரிழிவு, சூழல் மாசடைவதன் காரணமான சுகயீனங்கள், கருச்சிதைவு, மனநோய் மற்றும் புற்றுநோய் என்பவற்றின் அதியுயர் நிகழ்வுகளின் காரணமாகவும் முதிர்ச்சியும் சனத்தொகையின் சுகாதாரப் பிரச்சனைகள் காரணமாகவும் இலங்கை இப்போது புதிய வகையிலான சுகாதாரப் பிரச்சனைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இதற்கு மேலதிகமாக அகதிகளினது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களினதும் நலக் கவனிப்பானது நலத்துறையின் மீது மேலதிக பொறுப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட நிதியியல் வளங்கள் சுகாதார நிறுவனங்களின் பயன்தரு செயற்பாட்டினைக் கட்டுப்படுத்தியுள்ளன. சமனான அடிப்படையில் தரமான நலக்கவனிப்பினை அனைவருக்கும் வழங்க வேண்டிய அரச நலத்துறை மீதான அழுத்தமானது தனியார் துறையின் அதிகரித்த பங்கேற்பின் காரணமாக ஓரளவு தணிக்கப்பட்டிருக்கலாம். இந்தப் பிரச்சனைகளை கருத்திற்கொள்வதற்காக வேண்டி 1997 இன் சுகாதார சீரத்திருத்தங்களுக்கான சனாதிபதி செயலணியின் விதந்துரைப்புகளுக்கு இணங்க நலத்துறைச் சீரதிருத்த நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(i) இலங்கையின் நலத்துறையினால் எதிர்கொள்ளப்பட வேண்டியவையாயுள்ள புதிய சுகாதாரப் பிரச்சனைகள் யாவை?

(ii)"இத்தகைய பெறுபேறுகள்" என்று இப்பகுதியில் குறிப்பிட்டுள்ளவை யாவை?

(iii)சீரதிருத்த நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது எதற்காக?

(iv)இலங்கையின் தேசிய சுகாதார தரம் அபிவிருத்தியடைந்த நாடுகளைவிட உயர்ந்த நிலையில் அமைந்ததெனக் கொள்வது பொருந்துமா? காரணங் காட்டுக.

**இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் பொது ஊழியர் கோப்பு III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப் பரீட்சை, 1994 (1995 மார்ச்)**

**(02) கிரகித்தல்**
**Comprehension**

ஒரு மணித்தியாலம் முப்பது நிமிடம்
One hour and Thirty minutes

1. பின்வரும் பந்திகளை வாசித்து, ஒவ்வொரு பந்தியினதும் பிரதான கருத்தை இயன்ற அளவு சுருக்கமாக ஒரு தனிவாக்கியத்தில் தருக. தடித்த அச்சிலுள்ள சொற்றொடர்களின் கருத்தைப் பந்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(அ) கல்வியானது வெற்றிடம் ஒன்றில் இருப்பதில்லை. இதற்கு மாறாக அது பொருளாதார அரசியல், பண்பாட்டுச்சூழ்நிலைகளாலும் சமூக மனப்போக்கினாலும் வேறு பல காரணிகளாலும் நிருணயிக்கப்படுகின்றது. அன்றாட **சீவனோபாயத்துக்காக** மட்டும் தொழில் செய்து வாழும் சமுதாயங்களில் முழுநேரத் தொழில்வாய்ப்புக்களின் வளர்ச்சிவீதம் படிப்பறிவுடைய மனிதவாளம் அதிகரிக்கும் அளவுக்குச் சமமாவதில்லை.இது தொழில்களுக்குத் தேவைப்படும் ஆகக்குறைந்த கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கு ஏதுவாகியுள்ளது. இதன் பேறாக மேலும் உயர்மட்டப் பாடசாலைக்கல்வி வேண்டியதாயிற்று. தொழில் திறமையற்ற கற்ற இளைஞர்களின் தொகையைக் கூட்டுவதால் நாட்டின் மட்டுமட்டான வளம் வீண்விரயமாகின்றது.மேலும் இஃது இளைஞர்களிடத்தில் விரக்தியை ஏற்படுத்துகின்றது. இதன் விளைவாக நிவர்த்தனை முன்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு வளங்களை மேலும் வீணே செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

(ஆ) மாற்றத்திற்குத் தாக்குப்பிடிக்குந் தன்மையையும் இணக்கமடையுந் தன்மையையும் வளர்த்துக் கொள்ளல் இன்றியமையாதது. உலகம் மிக விரைவாக மாறுவதால் ஒருவரின் உயிர்வாழ்க்கை தானும் மாற்றத்துக்கு இணக்கமடையுந்தன்மையிலே தங்கியிருக்கலாம். ஒருவர் பின்தங்கி நிற்றலைத் தடுக்கக் கூடியதும் இந்த இணக்கமடையுந் தன்மையேயாகும். **மாற்றமே தொடர்ச்சியை உறுதிப்படுத்தும்** மாறாமல் இருப்பது எதுவும் உற்சாகத்தை உண்டாக்காது. ஆழ்ந்த பகுப்பறிவினதும் அறிவு சான்ற அகக் காட்சியினதும் அடிப்படையிலான இணக்கமடையுந் தன்மை ஒத்திசைவையும் உண்டு பண்ணும். இணக்கமின்மை எப்பொழுதும் பலத்துக்கு அறிகுறியாக இருப்பதில்லை. அஃது ஒருவரை விரைவாக இயங்கும் உலகத்திலே பின்தங்கி நிற்கச் செய்யும் அதே வேளையில் ஒருவர் நலம் தரும் மாற்றங்களைச் செய்யும் அறிவுத்திறனையும் விருத்தியாக்க வேண்டும். மனிதையின் பெரு நன்மைக்காக சமூகப் போக்கினை மாற்றியமைத்த உன்னத புருடர்களைப் பற்றிப் போதிய வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.

(இ) நாட்டகத்தே சாந்தியும் சமாதானமும் நிலவுவதற்குக் காப்புணர்வும், உறுதிப்பாட்டுணர்வும் முற்படு தேவையாக அமைகின்றன. இத்தகைய அடிப்படைத் தேவையில் மக்கள் எல்லோரும் ஆசையுற்றும், அவாவுற்றும் இருக்கின்றனரெனினும், அன்றாடப் **பாதுகாப்புக்கும் நிலைபாட்டுக்குமான** வழி முயற்சிகளின் விளைவாக இவை நம்மை விட்டுத் தப்பிவிடுகின்றன. காப்புக்கும் உறுதிப்பாட்டிற்குமான பாதை அகச்சக்திகளாலும் புறச்சக்திகளாலும் பாதிக்கப்படுகின்றது. ஒருவரின் விருத்தி மட்டத்திற்கிணங்க அவரின் மனத்திலேயே அகச்சக்திகள் உருவாகின்றன எனலாம். ஆயின், புறச்சக்திகள் ஏனைய உலகியல் முயற்சிகளிலிருந்து உண்டாகும் அனுபவப்பேறுகளாகும், சம நிலைப்பாடொன்றை அடையவும் காப்புணர்வையும் உறுதிப்பாட்டுணர்வையும் எய்தவும், நலனளிக்கும் அகச்சசக்திகள், புறச்சக்திகள் ஆகிய இரண்டையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இது தனியாள் ஒருவரிடத்தில் வீறான போக்கொன்றை வேண்டிநிற்கின்றது.

2. பின்வரும் உரைப்பகுதியை உமது சொந்த உரைநடையில் ஏறத்தாழ 90 சொற்களிற் சுருக்கியெழுதி அதற்குப் பொருத்தமான ஒரு தலையங்கத்தையும் தருக.

கல்வி பொருளாதாரத்துடன் மிக முக்கியமான இணைப்பு ஒன்றினை உடையதாய் இருக்கிறது.கடுமையான, நீடிக்கின்ற தொழிலில்லாப்பிரச்சினை, வறுமை, சமூக அமைதியின்மை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் என்பன காரணமாக, இலங்கையில் மனித வளத்தையும் இயற்கை வளத்தையும் சிறந்த வகையிற் பிரயோகிப்பதை உறுதிசெய்யும் அதேவேளையில்உயர்ந்த விதமான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்காகத் திட்டமிடல், முதலீடு, பல்துறை வினையாற்றுகை என்பவற்றிற் பெரும்பிரயத்தனஞ் செய்யப்படுகின்றது. குறிப்பாக, விவசாய, தொழினுணுக்க, தொழில்நுட்ப தொழிற்பயிற்சிக்கல்வியானது பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய திட்டங்களில் முக்கிமானதொரு பங்கினை வகிக்கின்றது. கல்வியறிவுடைய பணியாளரணி ஒன்றினையும் பயன்மிக்க திறனுடைய

தொழிலாளர்களையும் வழங்குவதால் மேற்கூறிய துறை மனிதவள அபிவிருத்திக்குப் பெரியளவில் உதவலாம். விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து, தொடர்பாடல், வர்த்தகம், வணிகம், வங்கிப்பணி, தொழில் நிதி, காப்புறுதி ஆகிய துறைகளுக்கும் ஏனைய பொருளாதார சேவைத்துறைகளுக்கும் தேவையாகின்ற வைத்தியர்கள், துணைமருத்துவ ஆளணியினர், கமத்தொழிலறிஞர், பொறியியலாளர், தொழினுணுக்கல்வியலாளர், விஞ்ஞானிகள், தொழினுட்பவல்லுநர், ஆகியோரும் பல்வேறு தொழிற்றுறையைச் சார்ந்தவர்களிற் பயிற்சித் திறன்பெற்ற ஆளணியினரின் திட்டமிட்ட வழங்கற்றொகை ஒரு காலத்திலும் தேவையாகும் தொகைக்கு முற்றும் சமனற்றதாக இருத்தலாகாது. ஏனெனில், அவ்வாறான பொருத்தமின்மை சமூகத்திற் பெருங்குழப்பங்களை உண்டுபண்ணும் என்பதனாலாகும்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஒருவேளை பொருளாதார அபிவிருத்திக்கான பாரிய திட்டமிடலின் பெறுபேறாகலாம். அதிகரித்துவரும் சனத்தொகையொன்றினதும், சிக்கலான சமூகமொன்றினதும் தேவைகளை ஈடுசெய்வதற்குப் பொருளாதாரத் துறையில் ஏற்படும் பாரிய நெருக்கடியினால், வேறு வழியில்லாமல், "தொலைநோக்குத் திட்டமிடல்" என்று அழைக்கப்படுகின்ற பெரிய திட்டங்களை வகுக்க வேண்டியதாயிற்று. தொலைநோக்குத் திட்டமிடலில் முக்கியமானவையும், முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவையுமான துறைகளும், உபதுறைகளும் இனங்காணப்பட்டு, வள ஒதுக்கீடுகளில் இவை முன்னுரிமை பெறுகின்றன. இப்பொருளாதார அபிவிருத்திச் செயற்கிரமம், சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததாகக் கருதப்படும் அதிமுக்கிய துறைகளில் முதலீடு செய்வதற்கு வழி செய்தது. இத்துறைகளில் வள ஒதுக்கீடுகள் உச்ச பலாபலனைத் தருமென எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறான பலாபலனை அடைவதற்குப் பொருளாதாரத்திலுள்ள விகாரங்களை அகற்றுவதும் அவசியமாகும். விரைவாகப் பொருளாதார அபிவிருத்தி அடைவதற்கென இம்முயற்சியில் விஞ்ஞானமும் தொழினுணுக்கவியலும் அபிவிருத்தியடைதலும் முழுமையான பங்கினைப் பெறுகின்றது. ஏனைய துறைகளுக்குத் தேவையான மனித வளங்களைப் (ஆளணி) பெற்றுக்கொள்வதற்கான எதிர்பார்ப்புக்களின் விளைவாகவும் கல்வித்துறையில் நெருக்கடிகள் பெருகத்தொடங்கின. இதன் விளைவாகக் கல்வியானது பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு சாதனமாக மட்டுமல்லாது, அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகவும் இப்பொழுது அமைகின்றது.

3. பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் (அ), (ஆ), (இ) என மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. உமது அபிப்பிராயத்திற்கமைய இக்கூற்றுக்களுள் எது தரப்பட்டுள்ள உரைப்பகுதிக்கு மிகப் பொருத்தமானது என எடுத்துக் காட்டுக. உதாரணமாக உரைப்பகுதி (i) இன் இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் உரைப்பகுதிக்கு மிகப் பொருத்தமான கூற்று (அ) என நீர் கருதுவீராயின் உமது விடை பின்வருமாறு அமைதல் வேண்டும்.

(i) - (அ)

(i) இலவசக்கல்வி, எமது நம்பிக்கைக்கு முரணாக, பெரும் சமூகச் சமப்படுத்தற் சாதனமன்று என்பதனால், இது மேலும் அவசியமாகின்றது. உண்மையில் அது செயற்படும் பொழுது, பல்வேறு தர மட்டங்களையுடைய சமூகங்களில் வேறுபாடுகளையும் சமமின்மைகளையும் மேலும் தீவிரமாக்குகின்றது. ஏலவே நலன்களையும் அதிகாரங்களையும் பெற்றவர்களுக்கு மேலும் அவை பெருகுகின்றன. எனவே அணுகு வழிகளையும் வாய்ப்புகளையும் சமமாக்குவதற்குக் கண்டிப்பான முயற்சிகள் இல்லாத பரவலான இலவசக் கல்வி, பெரும்சமூக மனத்தாக்கல்களுக்கும், ஒருவரையொருவர் அழிக்கும் மனப்போக்குகளுக்கும் மட்டுமே வழிவகுக்கும். இம்மனத்தாக்கல்களும் மனப்போக்குகளும் இவற்றைக் குறுகியகால நன்மைக்காகப் பயன்படுத்த விரும்புகிறவர்களுக்கே பெருவாய்ப்பாக அமையும். மக்களுக்கிடையில் முரண்பாடுகளும் சச்சரவுகளும் அவர்களை நலன்தரும் பயன்மிக்க முயற்சிகளிலிருந்து திசை திருப்புவதனால் அவர்களது நிலைமையை மேலும் மோசமாக்கும்.

(அ)இலவசக் கல்வி சமூகத்தின் வேறுபாடுகளையும் சமமின்மைகளையும் தீவிரமடையச் செய்கின்றது.

(ஆ)கல்வியில் சமவாய்ப்புகளை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டது கல்வியானது முரண்பாடுகளுக்கும் அழிவுக்கும் வழிவகுக்கும்.

(இ)மக்களிடை நிலவும் முரண்பாடுகள் அவர்களைப் பயன்மிக்க முயற்சிகளிலிருந்து திசை திருப்பும்.

(ii) கல்வி முறைமை, அதன் முகாமைத்துவ, நிருவாக, நிறைவேற்று நிலைகளிற் பணியாற்றுவதற்கு உன்னத மனிதர்களிலே அல்லது அசாதாரண புத்திமான்களிலே தங்கியிருத்தல் முடியாது. எண்ணிறந்த நிறுவகங்களிற் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். பிரிவுகள், பகுதிகள், பாடசாலைகள் முதலியன சாதாரணமான அல்லது குறைந்த ஆற்றலுடைய ஆள்களால் முகாமை செய்து நடாத்தப்பட முடியாவிட்டால், வேறு வகையாகச் சொல்வதானால், கடினமாக முயன்று அதனை ஏற்றவாறு செய்யும் ஆள்களால் ஒவ்வொரு பணியையும் ஒழுங்கு செய்ய முடியாவிட்டால் அதனை எவ்வகையிலும் செய்யவே முடியாது.

கல்வி முறைமை கொள்கை மூலம் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். ஆனால் அதற்கு முன்றிட்டங்கள் மட்டும் போதியனவாகா. இங்கு நல்ல நோக்கங்களும் கடின உழைப்பும் தேவையாகின்றது. இவை எல்லாம் வரவு செலவுத் திட்டமொன்றிற் பெரிதுந்தங்கி யிருக்கின்றன. இயலுமான வேளைகளிலெல்லாம் வினையாற்றுகையை ஊக்கு நெறிப் படுத்தக் கூடிய முறைமையொன்றும் கட்டமைப்பொன்றும் அதற்கு அவசியமாகின்றது. கொள்கைகளைத் திட்டமிட்டு மீளாய்தல், திட்டமிட்டுப் பழையன கழிதல், திட்டமிட்டுக் கைவிடுதல் என்பன போன்ற நெறிகளும் அதற்குத் தேவைப்படுகின்றது. தரப்பட்ட கொள்கை ஒன்று ஒரு காலத்துக்குப் பயனுடையதாய் இருக்கும். ஆயின் அது என்றும் பயனுடையதாய் இருக்காது. எந்தவொரு மதிப்புடைய கொள்கையாக்கத்திலும் இது ஒரு முக்கியமான தொடக்கவாதமாக இருத்தல் வேண்டும்.

(அ)கல்வி முறைமை உன்னத மனிதர்களிலோ அசாதாரண புத்திமான்களிலோ தங்கியிருப்பதில்லை.
(ஆ)முகாமை நோக்கங்களுக்காக் கல்வி முறைமையானது இயலுமான இடங்களில் வினையாற்றுகையை ஊக்குவிக்கும் முறைமையொன்றையும் கட்டமைப்பொன்றையும் பெற்றிருத்தல் வேண்டும்.
(இ)கடினமாக முயற்சி செய்யும் இந்நபர்கள் ஒவ்வொரு பணியையும் தகுந்த அளவில் ஒழுங்கு செய்ய முடியாவிடத்து பாடசாலை முகாமை எளிதான ஒரு காரியமாக அமையாது.

(iii) தரப்பட்ட பாடநெறியொன்றில் பின்பற்ற வேண்டிய முறைகளையுஞ் செயற் கிரமங்களையும் பாடவிதானம் விதித்து நிருணயிக்கின்றது. ஆசிரியர்களுக்கு மாணவர்களுக்குமான கற்பித்தல், கற்றல் நடவடிக்கைகள் தொடர்பான திட்டமாக மட்டுமன்றி, இதன் தொடர்பாக கண்காணிப்புப் பணியும் நிறைவேற்றும் பணியும் புரிகின்ற மேற்பார்வையாளர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் ஏனையோருக்கும் இது வழிகாட்டியாவும் அமைகின்றது. செயற்படுத்தும் பொழுது குறிப்பான முறைகளுஞ் செயற்கிரமங்களும், அவதானிக்கப்பட்ட விளைவுகளின் அடிப்படையில் திருத்தப்படவும் நுண்சீரமைப்புச் செய்யப்படவும் வேண்டியனவாகவுள்ளன. அத்தகைய சீராக்கல்கள் ஒரு பகுதியைச் சேர்ந்தனவாக இருக்கலாம். அவை குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பாடவிதானச் செயற்படுத்தலைச் சீர்செய்யும் நோக்குடையனவாகும். திட்டமொன்றைச் செயற்படுத்துபவர்களுக்குத் தேவையான சீராக்கல்களைச் செய்வதற்கான சுதந்திரமும் வளங்களும் வழங்கப்படல் வேண்டும்.

(அ)பாடவிதானம் கற்கை நெறியொன்றிலே கையாளப்படும் முறையியலைப் பகுத்தாராய்கிறது.
(ஆ)எந்த ஒரு திட்டத்திற்கும் குறித்த ஒரு கால எல்லையின் முடிவில் முழுமையான மீளாய்வு அவசியமாகும்.
(இ)குறித்த சந்தர்ப்பங்களில் குறித்த முறைகள், செயற்கிரமங்கள் என்பவற்றிற்கான திருத்தங்களினால் பாடவிதான அமுலாக்கம் சீராக்கமடைகிறது.

4. பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து அவ்வுரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் விடை தருக.

(அ)தேசிய பல்கலைக்கழகங்களாலும் அவற்றையொத்த நிறுவகங்களாலும் நிறைவேற்றப்பட வேண்டிய இன்றியமையாத கல்விப் பணிகளும் உண்டு. இலக்கியம் இலங்கையினதும் பிரதேசத்தினதும் வரலாறும் பண்பாட்டுப் பாரம்பரியங்களும், தொல்பொருளியல், நுண்கலைகள், இசை, நடனம், நாடகம் என்பவற்றைப் படிப்பதற்கு அதிக மதிப்புக்கொடுத்தல் அவசியமாகும். முறையான கல்வியாலும் நூல்களையும் புலமைமிக்க ஆக்கங்களையும் எழுதுவதற்குப் பயன்படுத்துவதாலும் தேசிய மொழிகளை விருத்திசெய்தல் உயர்ந்த முந்துரிமையுடைய பணியாகும். அத்துடன் புலமைப்பரிசில் மூலமும் ஆராய்ச்சி மூலமும் நம் தேசியப் பண்பாடுகளை மேம்படுத்தலும் அவற்றின் ஒத்திசைவான பதிவொன்றை வைத்து வருவதாலும் உயர்ந்த முந்துரிமைக்குரிய பணிகளாகும். நூல்களையும், சஞ்சிகைகளையும் சேர்த்து வைத்தால் மட்டும் போதாது. கல்வியறிஞர்களினதும் வல்லுநர்களினதும் குழுக்களையும் ஒன்று திரட்டி, ஆதரவளிப்பதற்கு நிதியும் வசதியும் இருத்தலும் வேண்டும். இதனால் இந்நிறுவன பண்பாட்டுக் கட்டுக்கோப்புப் பணியைப் போதியவாறு நிறைவேற்றக்கூடிய உயிர்ப்பும் துடிப்புமுள்ள சமுதாயமொன்று நிலைபெற்றிருக்கும். பிரிவேணாக்களையும் பொதுச் சுவடி நிலையங்களையும் அரும்பொருட்சாலைகளையும் இந்நோக்கத்துக்காகத் தேசியக் கூட்டு அமைப்பொன்றில் பல்கலைக்கழகங்களுடன் ஒன்று சேர்த்தல் வேண்டும். கல்விப்பரப்பின் ஒரு முனையில். முனைப்பான ஆய்வின் மூலமும், கண்டறியும் நுண்ணாய்வு மூலமும் அறிவினைப் பேணலும் பெருக்கலும் அமைந்திருக்கின்றன. சில துறைகளில் அவதானிப்பாலும் பரீட்சித்தலாலும் வழிநடத்தப்படுகின்ற தொடர்ச்சியான கண்டறியாய்வும், புதிய அகக்காட்சிகளை அறிதலும், மிகவும் பொதுவாகச் செல்லுபடியாகின்ற எளிமையான விளக்கங்களையும் விதிகளையும் கண்டுபிடித்தலும், திருத்திய கொள்கைகளையும் மாதிரிகளையும் உருவாக்கலும் நடந்து வருகின்றன பல்கலைக்கழகங்களிலுள்ள நாற்கல்வியாளர்கள். இம்முயற்சிகளில் ஈடுபடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் அத்தகைய ஆய்வுகளினதும் விசாரணைகளினதும் முறையியலில் அவர்களுடைய சகாக்களையும் மாணவர்களையும் ஈடுபடுத்துவார்களெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.
(1) அதியுயர் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய பணிகள் யாவை?

(2) நிதி எதற்காகத் தேவைப்படுகிறது?

(3) தேசியக் கூட்டு அமைப்பு எனும் பதத்தினால் ஆசிரியர் கருதுவது யாது?

(4) பல்கலைக்கழகங்களிலுள்ள நூற்கல்வியாளர்களிடமிருந்து எந்த முயற்சிகள் எதிர்பார்க்கப்படுகின்றன?

(ஆ)கற்பித்தல் மொழி எதுவாயிருப்பினும் மாணவரிற் பெரும்பான்மையினர் அநேகமாக அவர்களுடைய குறிப்புகளையே நம்பியிருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாடத்திட்டங்கள் பெரும் தகவல்-தொகுதியாக அமைதலும் பரந்த பாடப்பரப்பை அடக்கியிருத்தலும் மேலும் அத்தகைய நம்பிக்கையை வலுவடையச் செய்கின்றன. இரு வேறுபட்ட வாழ்க்கை முறைகளைத் தாண்டி வந்து, கல்விச்சமுதாயமென்றின் வாழ்க்கைக்குத் தம்மை ஆயத்தஞ் செய்து கொள்ளவிருப்பதால் மாணவர் வாசிக்கும் பழக்கத்திலிருந்து விலகிச் செல்கின்றனர். பாடசாலையில் இருக்கும்பொழுதும் முழுமூச்சுடன் "நெட்டுருப்பண்ணியமையும். அதனைத் தொடர்ந்து பாடசாலைக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியிற் குறிக்கோள் இல்லாது சோம்பித்திரிந்தமையுமே இவ்விரு வேறுபட்ட வாழ்க்கைமுறைகளுமாகும். இச்சந்தர்ப்பங்களில் நன்றாகச் செயல்படும் மாணவர்கள் ஒத்திசைவான தனிப்பட்ட குறிக்கோள்களின் தொகுதியொன்றை (அல்லது இறுதியான பணி ஒன்றை) இனங்காணக்கூடியவர்களாவர். இவர்கள் சுய நம்பிக்கையுடையவர்கள். ஏனையோரையும் முறைமையையும் பற்றி எளிதிற் "கண்டனஞ் செய்யாதவர்கள்" பல்கலைக்கழகங்கள் "நூற்கல்வியை" வற்புறுத்துவதனால் ஆசிரியர்கள் சில மார்க்கங்களைப் பயன்படுத்திச் செயலாற்ற முற்படுகின்றனர். இது மாணவர்களினதும் துணை ஆசிரியர்களினதும், அவர்கள் தொடர்புகொண்டுள்ள நிறுவகத்தினதும் வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பைத் தடைசெய்வதாய் முடிகின்றது.

(1) மாணவர்கள் வாசிக்கும் பழக்கத்திலிருந்து விலகிச் செல்வதற்கான காரணங்கள் யாவை?

(2) நன்கு செயல்படுபவர்களாகக் காணப்படும் மாணவர்களின் சிறப்பியல்புகள் யாவை?

(3) கற்பித்தல்மொழி எதுவாயிருப்பினும் மாணவர்கள் தமது குறிப்புகளில் மட்டுமே தங்கியிருக்கின்றனர் எனும் கருத்தை இவ்வுரைப்பகுதி தருகின்றதா?

(4) பல்கலைக்கழகக் கல்விப்பரப்புகளில் "நூற்கல்வி " எனும் அமிசத்திற்கு அழுத்தந் தருவதன் விளைவுகள் யாவை?

(இ)சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து நம் நாட்டின் பொருளாதார சமூகக் கட்டமைப்பில் ஒரு தொடரான மாற்றங்களை நாம் கண்டுள்ளோம். கடந்த இரு பத்தாண்டுக் காலத்திலேதானும் பொருளாதாரம் ஒரு முழுமையான மாற்றத்தை எய்தியுள்ளது.அஃதாவது பல ஒழுங்கு விதிகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டமைந்த ஆட்சிமுறையானது கட்டுப்பாடுகள் பெரிதுந் தளர்த்தப்பட்ட முறையாய் மாறியது. வழக்கிலிருந்த கட்டுப்பாடுகள் அநேகமாக அகற்றப்பட்டன. தடைகள் விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் ஏற்றுமதி, இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள், கடுமையான நாணயமாற்றுக்கட்டுப்பாட்டுச் சட்டங்கள், விலைக்கட்டுப்பாடு, பங்கீட்டு முறைமை போன்ற ஒரு தொடரான ஒழுங்குவிதிக் கட்டுப்பாட்டுகள், பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் ஏகபோக உரிமை நிலைமைகளை உருவாக்கியிருந்தன உயர்ந்த சுங்கவரி, அனுமதிப்பத்திரம் என்ற திரைமறைவில், பொதுத்துறைக் கைத்தொழில்களின் ஏகபோக உரிமை மிகவும் வலுவடைந்திருந்தது. பொருளாதாரம் தளர்த்தப்பட்டு நிலைமை மறுமுனைக்குத் திசைதிரும்பியுள்ளதால், தனியாரின் முதலீடும் வெளிநாட்டு முதலீடும் பொருளாதார முயற்சியின் பெரும்பகுதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டாயிற்று.

இரு நாடுகளுக்கு இடையிலான உதவிகளும் பலநாடுகளுக்கு இடையிலான உதவிகளும் பொதுவாகப் பொருளாதாரத்தில் முடிவெடுக்கும் விருப்புத் தெரிவுகளை மட்டுப்படுத்தும் நிபந்தனைகளை உடையனவாகும். அதேவேளையில் பொருளாதாரத்தைத் தளர்த்தலால், சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்குப் பாதிப்பை உண்டாக்கும் வகையில் தம் பெருஞ் செல்வாக்கைப் பிரயோகிக்கும் வாய்ப்புகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும், உள்ளூரிலுள்ள பெரிய பொருளாதார நிறுவகங்களுக்கும் கிடைக்கின்றன. நம் நாட்டின் பொருளாதாரத்திற் பங்கொன்றை வகிக்கும் உண்ணாட்டு, வெளிநாட்டு, அக்கறையாளர் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளை உணர்தல் வேண்டும். பொறுப்பிலிருந்து விலகியிருக்குஞ் சுயாதீனம் எதுவும் இல்லை. அவர்களுக்குச் செயற்பட அனுமதித்த சமூகக் கட்டமைப்பை அவர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். ஆகவே, அவர்கள் ஊழியர்களின் உரிமைகளை மதிப்பதும் சூழல் மாசடைதலைத் தடுப்பதும் போன்ற பரந்ததொரு வீச்சை உள்ளடக்கிய சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகத் தம் இலாப மனப்போக்கை மட்டுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.. மூன்றாம் உலக நாடுகளில் பொதுவாக நிலவுகின்ற பொருளாதாரக் கொடுங்கோன்மை என்னும் குற்றச்சாட்டை ஒழிப்பதற்கு மிகு இலாப மனப்போக்கைக் கைவிடுதலே சிறந்த வழியாகும்.

(1) பொதுத்துறை, தனியார்துறை ஆகிய இரண்டிலும், ஏகபோக உரிமை நிலைமைகள் தோன்றுவதற்கான காரணங்கள் யாவை?

(2) உயர்ந்த அளவிற் தளர்த்தப்பட்ட (தாராளமயமாக்கப்பட்ட) ஒரு பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் யாவை?

(3) சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்குப் பாதிப்பினை உண்டுபண்ணும் காரணிகள் யாவை?

(4) இவ்வுரைப்பகுதிக்கு அமைய முதலீட்டாளர்கள் வகிக்கவேண்டிய பங்கு யாது?

**இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப் பரீட்சை, 1991 – யூன்**

**கிரகித்தல்**
Comprehension

**ஒரு மணித்தியாலம் முப்பது நிமிடம்**
One hour and Thirty minutes

1. பின்வரும் பகுதிகளை வாசித்து ஒவ்வொரு பகுதியிலுமுள்ள பிரதான கருத்தை இயன்றளவு சுருக்கமாக ஒவ்வொரு வாக்கியத்தில் தருக. தடித்த எழுத்திலுள்ள சொற்றொடர்களை அவை அமைந்துள்ள பகுதியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(அ) கல்வி அமைச்சிலே பல்லாண்டு கால அனுபவமும் அர்ப்பண உணர்வுமுடைய, கடுமையாக உழைக்கும் அலுவலர்கள் பணியாற்றுகின்றார்கள் என்பது எங்களுக்கு வெளிப்படை. நாட்டின் அபிவிருத்திக்கு அவர்கள் பங்களிப்பு செய்திருக்கிறார்கள். எனினும் பணிக்குழுவாட்சியின் பெரும் பருமனும் அதோடு தொடர்புடைய ஒற்றைத்தம்ப ஒழுங்கமைப்பும் காரணமாக நிருவாகத்திற் பெரும் பிரச்சினைகள் அவசியம் ஏற்படும். இதன் விளைவாக இந்த ஒழுங்கமைப்பினால், ஆண்டு தோறும் பாடசாலைகளைக் கண்காணிப்பதற்கோ மதிப்பீடு செய்வதற்கோ முடியவில்லை என்றும் அதனால் சுற்றறிக்கைகள் அனுப்புவதிலே பல வருட அனுபவம் இருந்தபோதிலும் அதனுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும். அலுவலரோடு பயனுறுதிவாய்ந்த முறையிலே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை என்றும் எங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த ஒழுங்கமைப்பு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அதைப்பும் நெகிழ்வுமுடையதாகத் தொழிற்படும் ஆற்றலையும் வெவ்வேறு பிரதேசங்களுக்குத் தக்கவாறு வேற்றுமையைப் புகுத்தும் ஆற்றலையும் தவறுகளைத் தானாகவே திருத்திக்கொள்ளும் வல்லமையையும் இழந்துவிட்டது. கல்வி முறைமையொன்றினைப் பிரமாணங்கள் மூலம் நிருவகிக்க முடியாது என்றும்: பாடசாலையானது **"நிருவாகச் சில்லில் ஒரு பல்லாக"** இருக்கமுடியாது என்றும்: தனியாள்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்றும்: உள்ளூர் மட்டத்திலான அலகுகள் அதன் தொழிற்பாடுகளின் இயக்கவாற்றலுடைய மையக் கருவாக இருத்தல் வேண்டும். என்றும் ஆணைக் குழுவானது திடமான நம்பிக்கையுடையதாகவுள்ளது. கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டுமாயின் கல்வி முறைமையானது பன்முனைப்படுத்தப்படுவதோடு உள்ளூர் மட்டத்தில் அதற்கு வலுவும் விறுவிறுப்பும் ஊட்டப்படல் வேண்டும்.

(ஆ) பிராகிருத மொழியின் வழிமொழியான சிங்களம் தேங்கிநிற்கும் ஒன்றல்ல. நாளாந்தம் உபயோகிக்கப்படுவதனால் அதன் சொற்கள் வளர்ச்சியடைகின்றன. அதே சமயம் அவை தமது பழமையான இந்திய வடிவங்களைக் களைந்தெறிந்துவிட்டுப் புதிய சுற்றாடலுக்கேற்ற புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றன. **"சாதாரண மனிதன் தூய்மைவாதி அல்லன்"**. அவன் சொல்லிலக்கணத்தை மதிப்பவன் அல்லன் சொற்களின் கருத்துச்சரியாக இருக்க வேண்டுமென்று கருதுபவனுமல்லன். ஆரம்பத்தில் அவன் தவறான முறையில் பிரயோகிக்கும். வழக்குகள், காலப்போக்கிலே பொது மக்களால் உபயோகிக்கப்பட்டுப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வழக்கில் ஒரு பகுதியாகி விடுகின்றன. இவ்வழி ஆரம்பத்திலே தவறானவையாகக் கருதப்பட்ட சொல்வடிவங்கள். சொற்றொகுதி விரிவடைவதற்கு உதவக்கூடும்.

(இ) ஆணைக்குழுவின் முன்னிலையிலே சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளிலே புத்தூக்கத்தைக் கூடுதலாகத்தந்த ஓர் அமிசமாவது, சிங்கள, தமிழ்ச் சமூகங்களுக்கிடையே நல்லெண்ணம் உதயமாகிக்கொண்டிருக்கின்றது எனும் கருத்தாகும். வடக்கிலே ஐக்கியமானதோர் எதிர்காலம் குறித்து வெளியிடப்பட்ட நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஆணைக்குழுவினைக் கவர்ந்தன. தெற்கிலே உள்ள இளைஞர்கள்,சிறுபான்மை இனத்தவர்களுடன் வேலை செய்வதற்கும் அவர்களுடைய பண்பாடுகளையும் வாழ்க்கை முறைகளையும் மதித்துச் செயற்படுவதற்கும் விரும்பியதாகக் கூறினார்கள். எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த இளைஞர்கள், பல இனத்தவரையும், பல சமயத்தவரையும் கொண்ட சமுதாயமொன்றிலே அனைவரும், ஒற்றுமையாக வாழவேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்தற்கு விருப்பந்தெரிவித்தார்கள். சமூகங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கு அவசியமுண்டு என்பது பற்றிப் பரவலான உடன்பாடும் எமது அரசியல் ஒழுங்கமைப்பில் **பன்மைவாதமும் அதனோடு இணைந்த பெறுமானங்களும் நிறுவனங்களும்** அத்தியாவசிய பகுதியாக இருக்கவேண்டுமென்ற நம்பிக்கையும் இருப்பதாகத் தோன்றுகின்றது.

2. பின்வரும் உரைப்பகுதியை 90 சொற்களுக்குக் குறையாமலும் 100 சொற்களுக்கு கூடாமலும் சுருக்கி எழுதுக.

முக்கியமான மூன்று குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கே பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன : கற்பிப்பது, ஆராய்ச்சி செய்வது, தமது சமுதாயங்களுக்குச் சேவையாற்றுவது, அதாவது அறிவைத் திரட்டுவது, அவ்வறிவினைப் பேணுவதும் கடத்துவதும், சமுதாயத்தின் நன்மை கருதி அந்த அறிவு பிரயோகிக்கப்படுவதை ஊக்குவிப்பது. இதுவரை கூறப்பட்டவை யாவும் எல்லாம் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவானவை என நான் நம்புகிறேன். நாம் ஏற்கனவே கண்டறிந்தது போல புதிய ஆபிரிக்க அரசுகள் உருவாகிய சமயத்திலோ அவை சுதந்திரம் பெற்ற தருணத்திலோ தான் ஆபிரிக்காவின் புதிய பல்கலைக்கழகங்கள் உதயமாயின. ஆகவே இப்பல்கலைக்கழகங்கள் தேசிய சுதந்திரத்தைப் பெறுவதையோ, பெற்ற சுதந்திரத்தை வலுப்படுத்துவதையோ நோக்காகக் கொண்டும் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்குதவும் முக்கிய சாதனங்களாக இருக்க வேண்டுமென்பதை நோக்காகக் கொண்டும் மனமறிந்து திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டன. ஆகவே எந்த நாட்டிலுமுள்ள பல்கலைக்கழகத்திற்கும் பொதுவான அடிப்படையான குறிக்கோள்களை "கல்வியைப் பேணுவது, பரப்புவது, வளமாக்குவது" - இப்பல்கலைக்கழகங்கள் நிறைவேற்றுகின்றன. இவை யாவற்றையும் விட இப்பல்கலைக்கழகங்கள் தாம் அமைக்கப்பட்டிருந்த நாடுகள் அபிவிருத்தியடைவதையும் நவீனமயமாவதையும் ஊக்குவிக்குமென்றும் அபிவிருத்திக்கு அவசியமானவற்றை வழங்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இவை அபிவிருத்திப் பல்கலைக்கழகங்களாகச் செயற்படுதற்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகங்கள், 19ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஐக்கிய அமெரிக்காவிலிருந்த காணிக்கொடைக் கல்லூரிகளின் கடமைப்பாங்கினை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே ஒருபுறம் கல்விச்சுதந்திரம், கல்வி மாட்சிமை ஆகியன காரணமாக உருவான "ஏகாந்தக் கோபுர"த்தின் தேவைப்பாடுகளுக்கும் மறுபுறம் தேசிய அபிவிருத்தியின் தேவைப்பாடுகளுக்குமிடையே சரியான சமநிலையினை அல்லது "கலப்பினை" ஏற்படுத்துவதே இவற்றின் பிரதான பிரச்சினையாக இருந்து வந்துள்ளது இருந்து வருகின்றது. எனினும் இவை இரண்டும், ஒன்றிற்கொன்று எதிரானவையல்ல.

ஆபிரிக்காவிலும் ஏனைய பிரதேசங்களிலுமுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அபிவிருத்தி குறித்து எதிர்நோக்கவேண்டியுள்ள பிரச்சினைகளின் இயல்பு பற்றி மனிதவள பொருளியல் அறிஞர்கள் அண்மைக் காலத்தில் புதிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். இப்பொருளியல் அறிஞர்கள், இவ்வபிவிருத்திப் பிரச்சினைகள், பிரதானமாக 'மனித வளம்' சம்பந்தமானவை எனவும் அபிவிருத்திச் செயன்முறையில் மனிதவளம் மையமானது எனவும் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்... ஒரு நாட்டினால் தனது பிரசைகளின் திறன்களையும் அறிவினையும் விருத்திசெய்வதற்கும் அவற்றை நவீனமயமாக்கும் செயன்முறையில் பயனுறுதிவாய்ந்த முறையிலே பயன்படுத்துவதற்கும் முடியாவிட்டால் அந்நாடு வேறு எதனையும் அபிவிருத்தி, செய்யமுடியாத நிலையிலிருக்கும்.

3. பின்வரும் பந்திகள் ஒவ்வொன்றின் இறுதியிலும் (அ), (ஆ), (இ) எனும் மூன்று கூற்றுக்கள் உள்ளன. இக்கூற்றுக்களுள் எது எடுத்துக்கொள்ளப்படும் பந்திக்கு மிகப் பொருத்தமானது எனக்காட்டுக. உதாரணமாக பந்தி(i) இன் இறுதியிலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் அப்பந்திக்கு (ஆ) எனும் கூற்றே மிகப் பொருத்தமானது என நீர் கருதினால் உமது விடை பின்வருமாறுஅமைதல் வேண்டும்.

(i) - (ஆ)

(i) தமது சீடனுக்கு மதக் கோட்பாடுகளிலே சிறப்பான அறிவுறுத்தல்களை வழங்குவதே மதகுருவின் தலையாய நோக்காகஇருந்தது. மதச்சார்பற்ற கல்வியைக் கற்பது உண்மையிலே பௌத்த தர்மத்துக்கு முரணானதாக இருந்தது. ஆனால் பிக்குகளின் மனப்பாங்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஒத்துப்போகக் கூடிய வகையிலே பிக்குகள் தமது நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து கொண்டார்கள். மேலும் இந்தியாவிலே கிறித்தவ யுகத்தின் ஆரம்பத்தில் நடைமுறையிலிருந்த கல்விசார் நடவடிக்கைகளினால் உந்தப்பட்டு இவர்கள் தமது கல்வி நெறிகளில் மதச்சார்பற்ற கல்வியையுஞ் சேர்த்துக்கொண்டார்கள். இந்தப் புதிய போக்கு பிரிவேனாக்கள் மீது பெருஞ்செல்வாக்குச் செலுத்தியது. இப்பிரிவேனாக்கள் மதச்சார்பற்ற கல்வியைப் புகட்டும் நிலையங்களாயின. பிறநாட்டு மாணவர்கள் இப்பிரிவேனாக்களில் அனுமதி பெற விரும்பியமையானது இக் கல்விப் பீடங்கள் அங்கீகரிக்கப்பெற்ற தரங்களை எய்தியிருந்ததுடன் பெருங் கீர்த்தியையும் பெற்றிருந்தன என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

(அ)இந்தியாவில் நடைமுறையிலிருந்த கல்விசார் நடவடிக்கைகளின் செல்வாக்கு காரணமாக, பிக்குகள், தமது கல்விநெறிகளில் மதச்சார்பற்ற கல்வியையுஞ் சேர்த்துக் கொண்டார்கள்.

(ஆ)பிரிவேனாக்களில் மதச்சார்பற்ற கல்வி புகட்டப்பட்டமையினால் வெளிநாட்டு மாணவர்கள் அவற்றில் அனுமதி பெற முயன்றார்கள்.

(இ)பிரிவேனாக்கள் உயர் தரங்களை எய்தியிருந்தமையினால் வெளிநாட்டு மாணவரிடையே பெருங்கீர்த்தி பெற்றிருந்தன.

(ii) ஒரு நாட்டிலுள்ள சிறுவர்கள் அனைவருக்கும் கல்வியறிவு புகட்டுவதற்கு ஏற்பாடு செய்வது அரசின் கடமையாகும் என்பது இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. "இயற்கைச் சுதந்திரம்", "அரசு தலையிடாக் கொள்கை" ஆகியவற்றின் தூதர்களான அடம் ஸ்மித், ஜோன் ஸ்றுவற் மில் ஆகியோருங்கூட இவற்றிலிருந்து கல்விக்கு விலக்களிக்கவேண்டும் என்பதனை ஏற்றுக் கொண்டனர். கல்வியானது அரசின் கட்டுப்பாட்டிலிருப்பதை அடம் ஸ்மித் ஆதரித்த போதிலும் உயர்கல்வியில் அரசு தலையிடுவதைத் தான் ஆதரிக்கவில்லை என்பதை ஒளிவுமறைவின்றிக் கூறினார். மறுபுறம் மில் என்பவர், அரசு, ஆரம்பக் கல்வியையும் உயர்கல்வியையும் வழங்க வேண்டும் என்று ஆரம்பக் கல்வியானது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றும் பரிந்து பேசினார்.

(அ)அடம்ஸ்மித், ஸ்றுவற் மில் அகிய இருவரும் கல்வியில் அரசு தலையிடுவதனால் இயற்கை சுதந்திரம் பாதிக்கப்படும் என்று வாதாடினர்.

(ஆ)அடம் ஸ்மித், ஸ்றுவற் மில் ஆகியோர். ஆரம்பக் கல்வியும் உயர் கல்வியும் அரசினால் வழங்கப்பட வேண்டும் என்று வாதாடினார்.

(இ)உயர்கல்வியில் அரசு தலையிடுவதை அடம் ஸ்மித் ஆதரிக்கவில்லை.

(iii) கல்வி உளவியலானது கல்வியின் விஞ்ஞானம், நடைமுறை ஆகியவற்றில் உளவியல் கோட்பாடுகளும் ஆராய்ச்சி முறைகளும் பிரயோகிக்கப்படுவது சம்பந்தமானது. கல்விப்பூட்கைகளுக்கு உறுதியானதோர் அடிப்படையை வழங்குவதற்கு அவசியமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் கற்பித்தலுக்குக் கையாளப்படும் முறைகளின் வினைத்திறனைச் சோதனை செய்வதுமே கல்வி உளவியலறிஞனின் நோக்கமாகும். கல்வி, உளவியலின் நவீன காலப்பகுதியானது பினெட் எழுதிய 'நுண்ணறிவுச் சோதனைகள் மூலம் நுண்ணறிவுசார் ஆற்றலை மதிப்பிடுவது' எனும் நூலோடு (1908) ஆரம்பமாகிறது. இவையும் ஆற்றலை மதிப்பிடும் இவற்றோடு தொடர்புடைய வேறு சோதனைகளும் நுண்ணறிவு மட்டத்திற்கு ஏற்ப வகைப்படுத்துவதுபோன்ற சர்ச்சைக்குரிய நடைமுறைகள் உருவாவதற்கு வழிவகுத்துள்ளன. ஆசிரியர்களும் அவர்களது மாணவர்களுக்குமிடையிலான தொடர்பு வகிக்குமிடத்தை மதிப்பிடுவதும் கல்வி உளவியலறிஞரின் பரப்பினுள் அடங்கும்.

(அ)நுண்ணறிவு மட்டங்களுக்கமைய வகைப்படுத்துவது கற்பித்தலில் வினைத்திறமைக்கு வழி வகுக்கின்றது.

(ஆ)ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையிலான தொடர்புவகிக்கும் இடமானது சர்ச்சைக்குரியதொரு விடயமாகும்.

(இ)நுண்ணறிவு மட்டங்களுக்கமைய வகைப்படுத்தும் பிரச்சினை குறித்து அபிப்பிராயபேதமுண்டு.

4. பின்வரும் பகுதியை வாசித்து ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சுருக்கமான விடை தருக.

(i) பல்கலைக்கழகங்கள் இன்று வளர்ச்சியெய்தியுள்ள முறையில் அதிகரித்துக் கொண்டிருக்கும் மாணவர் தொகைக்குத் தரத்திற் குறைந்த கல்வியறிவை வழங்குகின்றன என்ற பொதுவானதொரு கருத்து இருந்தது. தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணங்கள் பல உள ஆனால் இவை யாவும் பல்கலைக்கழகக் கல்வியைச் சனநாயகப்படுத்துவதோடு தொடர்புடைய அல்ல. இரண்டாவதாக, பல்கலைக்கழக சம்பளங்களும் வாழ்க்கைப் பாணிகளும் மூளைசாலிகள் வெளியேறுவதை நிறுத்துவதற்குப் போதியளவு கவர்ச்சியானவையல்ல. நமது கல்விமான்களுட் சிறந்தவர் பலரை இழப்பதற்கு மூளைசாலிகள் வெளியேற்றம் காரணமாக இருந்துளது. இதன் நேர் விளைவுகளுள் ஒன்றாக, பல பீடங்களிலே கல்வித் துறைப் பதவிகளைப் பொறுத்தமட்டில், விரிவுரையாளர் மட்டத்தில் 50 சதவீத வெற்றிடங்கள் இருக்கின்றன. வேறு பீடங்களில் இந்தச் சதவீதம் 70 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இப் பதவிகளை நிரப்புதற்கு முடியாத நிலையிலுள்ள பல்கலைக்கழகங்கள் பல்வேறு பீடங்கள் தொழிற்படும் பொருட்டு விரிவுரையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதைக்கட்டுப்படுத்தும் தரங்களை அவசியம் குறைத்தல் வேண்டும். அண்மை ஆண்டுகளிலே இவ்வாறு நிகழ்ந்தது என்பதற்குப் பிரத்தியட்சமான சான்றுகள் உள்ளன.

(அ)"பல்கலைக்கழகக்கல்வியைச் சனநாயகமயமாக்குவது" என்பதன் கருத்து யாது?

(ஆ)"மூளைசாலிகள் வெளியேற்றம்" என்பது என்ன?

(இ)நமது சிறந்த கல்விமான்கள் பலரை நாம் இழந்தமைக்கான காரணம் யாது?

இலங்கைக் கல்வி நிருவாகச் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, 2002

(03) கல்வி நிருவாகம் தொடர்பான விடய வகைக் கற்கை

**Case Study Relating to the Educational Administration**

இரண்டு மணித்தியாலம்
Two hours

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து எல்லா வினாக்களுக்கும் விடை தருக

அழகாபுரியில் விவசாயக் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றமையால் அது விரைவாக முன்னேற்றம் அடைந்துவரும் பிரதேசத்தில் அமைந்திருக்கும், சன நெரிசல்மிக்க புதிய நகரமாகும். மக்கள்தொகை அதிகரித்துள்ளமையால், பெற்றோரின் வேண்டுகோளின் பேரில் இந்நகரில் இருக்கும் பழைய மகாவித்தியாலயத்துக்குப்பதிலாக எல்லா வசதிகளையும் கொண்ட ஓர் இடைநிலைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதில் 6 ஆந் தரம் தொடக்கம் 13 ஆந் தரம் வரைக்கும் விஞ்ஞான, கலை, வர்த்தக பாடங்களுக்கான வகுப்புக்கள் நடைபெறும் அதே வேளை மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2000 ஐக் கடந்துள்ளது. ஆய்கூடங்கள், நூலகம், கணினி அலகு, தொழினுட்பவியல் அலகு, விவசாய, மனைப்பொருளியல், ஆய்வுகூடம் ஆகிய எல்லா வசதிகளும் இப்பாடசாலையில் உள்ளன.

ஆரம்பத்தில் மகாவித்தியாலயத்தின் இடைநிலைப்பிரிவின் எல்லா மாணவர்களும் புதிய பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அதே வேளை விருப்பத்தைத் தெரிவித்த ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதிபரை நியமித்தல் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் மகாவித்தியாலயத்தில் சேவையாற்றிய திரு. சிவராசா மாகாணத்தைச் சேர்ந்தவர் ஆகையால் அவரை அதிபராக நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. சிவராசா மாணவ ஆசிரியராக ஆசிரியர் சேவையில் சேர்ந்து, ஆசிரியர் கல்லூரியில் பயிற்சிப் பெற்று பின்னர் பல்கலைக்கழகத்திலிருந்து கலைப்பட்டமும் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவும் பெற்ற முதலாந்தர அதிபராவார்.

திரு.சிவராசாவின் வேண்டுகோளுக்கேற்ப அவருடன் மகாவித்தியாலயத்தில் சேவையாற்றிய திரு.கந்தையா இப்பாடசாலையில் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார். அம்மகாவித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்து பணியாற்றிய ஆசிரியை கீதா இப்பாடசாலையின் கனிஸ்ட பிரிவுக்குப் பொறுப்பான உதவி அதிபராக நியமிக்கப்பட்டார்.

பாடசாலையை ஆரம்பிக்கும் போது இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்த இம்மூவரும் மற்றைய ஆசிரியர்களின் உதவியுடன் பாடசாலையை அழகான இடமாக மாற்றினார். இதற்காகப் பெற்றோரின் உதவியும் சிரமதானத்தின் மூலம் பெறப்பட்டது. இவ்வாறு ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளில் பாடசாலை தேவையான எல்லா அம்சங்களையும் கொண்டிருந்தது.

இந்த ஆண்டில் நடைபெறவுள்ள க.பொ. த (உ.த) பரீட்சையின் ஒரு நிலையமாக இப்பாடசாலை தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதனால் அதன் ஒழுங்கமைப்புப் பணிகள் தொடர்பாக அதிபருடன் கலந்துரையாடுவதற்காக ஒரு நாள் வலயக்கல்விப் பணிப்பாளர் இப்பாடசாலைக்கு வந்தார். இக் கலந்துரையாடல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஒரு மாணவன் வந்து வெண்கட்டித் துண்டை தருமாறு கேட்டான். அவன் வெளியேறியதும் வேறொரு மாணவன் வந்து வரிப்படத்தை பிரதிசெய்து வகுப்பில் விநியோகிப்பதற்காக க.பொ.த (உ.த) பௌதிகவியல் ஆசிரியருக்கு 30 ஒளிப்படத்தாள்கள் தேவையெனக் கேட்டான். சிறிது நேரத்திற்குப் பின்னர், 8ஆந் தரத்தின் மாணவர் தலைவன் வந்து, ஆசிரியை வசதிச் சேவைக்கட்டணப் பற்றுச் சீட்டுப் புத்தகத்தை பெற்று வருமாறு குறிப்பிட்டதாகக் கூறினான். பின்னர் ஆய்கூடச் சேவையாளர் வந்து உயிரியற் பாடத்துக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குப் பணம் கேட்டார். 9 ஆந் தரத்தின் வகுப்புத் தலைவர் வந்து வகுப்பு ஆசிரியர் வராமையால் வகுப்புப் பிள்ளைகள் சத்தமிடுவதாக முறைப்பாடு செய்தார்.

வலயக் கல்வி பணிப்பாளர் சிறிது நேரத்தின் பின்னர் எழுந்து சென்று விட்டார்.

மாத ஆசிரியர் கூட்டத்தில் அதிபர் திரு. சிவராசா ஆசிரியர்குழுவை அழைத்து, நேரத்துக்கு வரவேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஆசிரியர்கள் தினசரிப் பாடக் குறிப்புகளைப் பிரதி அதிபருக்கோ, உதவி அதிபருக்கோ சமர்ப்பித்து அவற்றை அங்கீகரிப்பித்துக் கொள்வதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அதோடு வகுப்புக்களில் அமைதியைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். க.பொ. த. (உ.த) பௌதிகவியல் ஆசிரியர் திரு. மோகன் செய்முறைப் பணிகளுக்குத் தேவையான உபகரணங்கள் போதாமல் இருப்பதாகவும் அவற்றை விரைவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார். உயிரியல் கற்பிக்கும் ஆசிரியை கமலா ஆய்கூடத்தின் நீர்க் குழாய்த் தொகுதியைப் புதுப்பித்தல் வேண்டும் எனவும் பழைய இரும்புக் குழாய்களினூடாக வரும் நீர் கறள் காரணமாக மாசடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். ஆய்வுகூடத்துக்குத் தேவையான தேய்மானமடையும் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி அனுமதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் பட்டியல் பிரதி அதிபரிடம் கொடுக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு மாதமாகி விட்டது எனவும் அப்பொருள்களை வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் முறைப்பாடு செய்தார்.

வர்த்தகப் பாடத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் திரு. சங்கர் தமது பாடத்துக்குத் தேவையான சில சஞ்சிகையை வாங்குதல் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரைக்கும் அவை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனக் கூறினார். புவியியலைக் கற்பிக்கும் ஆசிரியர் திரு. உலகநாதன் தமது மாணவர்களுடன் சிங்கராஜ வனத்துக்குச் சுற்றுலாவில் செல்வதற்காகச் சமர்ப்பித்த கடிதம் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக இதுவரைக்கும் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பப்படவில்லையெனக் குறிப்பிட்டார்.

இவை அனைத்தையும் செவிமடுத்த அதிபர் பிள்ளைகள் பரீட்சைகளில் சித்தியடைதலே பெற்றோரின் எதிர்பார்ப்பு எனவும் செய்முறைப் பணிகளையும் சுற்றுலாக்களையும் காட்டிலும் பிள்ளைகள் விடயங்களை நன்றாக மனனஞ்செய்யச் செய்தல் முக்கியம் எனவும் பரீட்சையில் கேட்கப்படும் வினாக்கள் பற்றி அறிவுறுத்தல் ஆசிரியர்களின் பணி எனவும் கூறினார். இவை தொடர்பாக ஆசிரியர்கள் இப்போது கூடிய அக்கறை கொள்ள வேண்டும் எனவும் தேவையெனின் பின்னேர வகுப்புகளை நடத்தி இவற்றைச் செய்தல் வேண்டும். எனவும் அவர் கூறினார். இப்பாடசாலையிலிருந்து முதன்முதலாகக் க.பொ.த. (உ.த)பரீட்சைக்குக் கடந்த ஆண்டு தோற்றியவர்களின் பேறுகள் சிறந்த முறையில் அமையாமைபற்றிக் குறைகூறாத போதிலும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள க.பொ.த (உ.த) பரீட்சையின் பேறுகள் சிறந்த முறையில் அமையாவிட்டால் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.ஆசிரியர்களுக்குக் கரும்பலகைகள் உள்ள வகுப்பறைகளும் வெண்கட்டியும் வழங்கப்பட்டால் நல்ல பேறுகளை ஏன் பெற முடியாதென அவர் வினவினார்.

க.பொ.த (உ.த) பேறுகள் வெளியிடப்பட்டன. விஞ்ஞானப் பிரிவிலிருந்து தோற்றிய 35 மாணவர்களில் ஒரு மாணவரே மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருந்தார். வர்த்தகப் பிரிவில் 2 மாணவர்களும் கலைப் பிரிவில் 30 மாணவர்களில் 8 மாணவர்களும் சித்தியடைந்திருந்தனர்.இப்பேறுகள் தொடர்பாக உயர் வகுப்பு மாணவர்களைப் போன்று பெற்றோரும் கவலையடைந்திருந்தனர். பாடசாலையின் கல்வி நிலைமைப்பற்றிக் கலந்துரையாடுவதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டத்தை நடத்துமாறு உயர் வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பலர் கையொப்பமிட்ட ஒரு கடிதம் பாடசாலையின் அதிபருக்குக் கிடைத்தது.

அதற்கு அமைய அடுத்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. தொடக்க நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் உரையாற்றிய பெற்றோர்கள் பிள்ளைகளின் பரீட்சைப் பேறுகள் சிறந்த முறையில் அமையாமைக்கு அதிபரும் ஆசிரியர்களும் வகைச்சொல்ல வேண்டும் எனவும பரீட்சைப் பேறுகளை மேம்படுத்துவதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தாவிட்டால் இதனைப் பற்றி அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ய வேண்டியிருக்கும் எனவும் கூறினர்.

அதிபர் பரீட்சை பேறுகளை மேம்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்களைத் தாம் ஆசிரியர்களிடம் அளித்துள்ள போதிலும் அவர்கள் அதற்கு ஏற்பச் செயற்படுவதில்லையெனக் கூறினார். மனனஞ்செய்யுமாறு பிள்ளைகளிடம் கூறுவதன் மூலம் கல்வியையோ பரீட்சைப் பெறுபேறுகளையோ மேம்படுத்த முடியாது எனவும் அதற்குப் பொருத்தமான சூழ்நிலையைப் பாடசாலையினுள்ளே அதிபரும் அவருடைய உதவியாளர்களும் ஏற்படுத்த வேண்டும் எனவும் ஆசிரியர் திரு. மோகன் கூறினார்.

இப்பாடசாலைகளின் அதிபரும் ஆசிரியர்களும் பாடசாலையில் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் பணியாற்றுவதில்லையெனக் கூறிக்கொண்டு பெரும்பாலான பெற்றோர்கள் கூட்டத்திலிருந்து வெளியேற்றினர்.

1. அதிபர் என்ற ரீதியில் திரு. சிவராசாவின் ஒரு பலத்தையும் மூன்று பலவீனங்களையும் விளக்குக
2. அழகாபுரி இடைநிலைப் பாடசாலையின் முகாமைக்குப் பொருத்தமான ஒரு கட்டமைப்பைக் கோட்டுபடத்தில் காட்டி, முக்கிய நபர்களின் வகிபாகங்களை விவரிக்க.
3. இப்பாடசாலையின் க.பொ.த (உ.த) வகுப்புக்களில் பரீட்சைப் பேறுகளை மேம்படுத்துவதற்கான ஒரு செயற்றிட்டத்தைத் திட்டமிட்டு, அதனை நடைமுறைப்படுத்தும் விதத்தை விளக்குக. செயற்றிட்டத்தின் குறிக்கோள்கள், செயற்பாடுகள், பொறுப்புக்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.
4. "வெற்றிகரமான அதிபராக இருக்க வேண்டுமெனின், ஆசிரியர் குழுவிடம் தலைமைத்துவத்தை அளித்தல் வேண்டும்.
   (i) தலைமைத்துவம் என்பதை சுருக்கமாக விளக்குக.
   (ii) தலைமை தாங்குபவர் விருத்திசெய்ய வேண்டிய ஐந்து தேர்ச்சிகளைக் குறிப்பிடுக.
   (iii) அழகாபுரி இடைநிலைப் பாடசாலையின் அதிபரின் பணிகளுடன் தொடர்புபடுத்தி இவற்றில் இரு தேர்ச்சிகளின் முக்கியத்துவத்தை ஆராய்க.

**இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு தமிழ் மொழி மூல உத்தியோகஸ்தர்களை (பொதுப் பதவியணி) ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, 2000**

**கல்வி நிருவாகம் தொடர்பான விடயவகைக் கற்கை**

**Case Study Relating to Education Administration** இரண்டு மணித்தியாலம்

கீழே தரப்பட்டுள்ள தகவல்களை வாசித்து கேட்கப்பட்ட வினாக்கள் எல்லாவற்றுக்கும் விடை எழுதுக.

திரு.இந்திரன் கரூர்ப் பிரதேசத்தில் இருக்கும் நவோதய மகா வித்தியாலயத்தில் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் சேவையாற்றி, அப்பாடசாலையை அப்பிரதேசத்தின் பேர்பெற்ற மகா வித்தியாலயமாக மேம்படுத்திய அதிபர் ஆவார். பாடசாலையில் உயர்தர வகுப்புகளை ஆரம்பித்த இவர் முதற் தடவையிலேயே பல்கலைகழகத்திற்கு மாணவர் இருவரை அனுப்புவதிலும் வெற்றி ஈட்டினார். விளையாட்டு, நாடக, பேச்சு போட்டிகளில் முதல் இடங்களைப்பெற்ற இப்பாடசாலை, வலயக் கல்வி அதிகாரிகளின் புகழுக்கும் உரித்தாகியது. முதற்றடவையாக மாகாண முதலமைச்சரினதும் மாகாணக் கல்விப்பணிப்பாளரினதும் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவானது கொழும்பில் உள்ள பிரபலமான பாடசாலைகளில் நடைபெறும் விழாவைப் போல நடைபெற்றது.

ஆசிரியர் குழுவில் உள்ள அனைவரும் அதிபருக்கு மரியாதை அளித்தனர். அதிபர் தினமும் அவர்களுடைய நலன் பற்றி விசாரித்து அறிந்தார். வெளிப் பிரதேசங்களிலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு வதிவிட வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் அவர்கள் நலனுக்கு தேவையான செயல்களைச் செய்வதிலும் அதிக அக்கறை காட்டினார்.

அதிபரின் மனைவியாகிய திருமதி.கீதா அப்பாடசாலையில் மனையியல் ஆசிரியை ஆவார். பாடசாலை அதிபரின் வீட்டுக்கு வரும் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் தேநீரையேனும் அளித்து உபசரிப்பதற்கு அவர் தவறியதில்லை. பாடசாலைக்கு நிதமும் தாமதமாக வருகின்றமையால் அதிபரால் எச்சரிக்கப்பட்ட திரு.குமரன், திரு.சுந்தரம் என்ற இரு ஆசிரியர்களைத் தவிர ஏனைய ஆசிரியர் அனைவரும் அதிபரைப் போற்றி புகழ்ந்தனர்.

பாடசாலைப் பணிகளில் அதிபருக்கு உதவிய இளம் ஆசிரியர்கள் எண்மர் அப்பாடசாலையில் பணியாற்றினார், மலைவேளைகளில் மேலதிக வகுப்புகளை நடத்தல், விளையாட்டுப் போட்டிகள், ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகள் ஆகியவற்றை நடத்தல் போன்ற பணிகளை இந்த ஆசிரியர்கள் தலைமை தாங்கி நடத்தினர். ஆசியர் குழுவின் ஏனைய ஆசியர்களும் இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

திரு.இந்திரன் ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் கூட்டங்களை நடாத்திய போதிலும் அவை தொடர்பான அறிக்கைகளைப் பேணவில்லை. எனினும் முக்கியமான விடயங்களைப் பொறுத்தவரை அவர் காலைக் கூட்டங்களுக்குப் பின்னர் ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அவசியம் ஏற்பட்டபோது அவர் ஆசிரியர் குழுக்கூட்டங்களை நடத்தி விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார். முறைமையான நியமனம் பெற்ற பிரதி அதிபரோ, உதவி அதிபரோ அப்பாடசாலையில் இல்லாத போதிலும் அதிபர் இல்லாத வேளைகளில் இளம் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரான திரு.மதியழகன் பதில் கடமையாற்றினார். எனினும் அதிபர் தம்முடன் நெருங்கிப் பணியாற்றிய சில இளம் ஆசிரியர்கள் ஊடாக வெவ்வேறு பணிகளை மேற்கொண்டார்.

பாடசாலை மிக விரைவாக வளர்ச்சியடைந்தமையால் மாணவர்களும் அதிபருக்குச் சிறந்த மரியாதையையும் கௌரவத்தையும் அளித்தனர். மாணவர் தலைவர்களும் தலைவிகளும் பாடசாலையை ஒழுங்கமைக்கும் பணியில் சிறந்த பயிற்சி பெற்றிருந்தனர். அவர்கள் தமது பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றினர்.

பிரதேசத்தில் வதியும் பொதுமக்களைப் போன்று முக்கியஸ்தர்களாகக் கருதப்படும் அரசாங்க சேவையாளர்களும் நிலவுடமையாளர்கள் சிலரும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் சிலரும் அதிபரின் சேவையை மனதார மதித்தனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களுக்கு வந்த பெற்றோர் பாடசலையின் முன்னேற்றம் தொடர்பாகத் தம்மாலான உதவிகளை அளித்தனர்.

பாடசாலைச் சமுதாய உறுப்பினர்கள் அனைவரும் அதிபரின் சேவையைப் போற்றினர் என்று கூறுதல் மிகையாகாது.

கல்வித் திணைக்களத்தின் அலுவலர்களும் அதிபருடன் ஒத்துழைத்தமையால் அதிபர் திணைக்களத்தில் தமது தேவைகளைய எளிதாக நிறைவேற்றக்கூடியவராக இருந்தார்.

திரு.இந்திரனின் மூன்று பிள்ளைகள் அப்பாடசாலையின் ஆரம்ப பிரிவில் கல்வி கற்றனர். அவருடைய மூத்த மகள் இன்னும் ஓராண்டில் ஆறாந் தரத்தில் படிக்க இருந்தார். ஆகையால் அதிபர் தமது பிள்ளைகளை நகரிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டுமென விரும்பினார். அவர் கஷ்டப் பிரதேசத்தில் நீண்டகாலம் சேவையாற்றி இருந்தமையால் இடமாற்றம் பெற்றுத் தமது கிராமத்துக்குச் சென்று தமது பிள்ளைகளுக்குப் பிரபல பாடசாலைகளில் கல்வி பயில அனுமதி பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்தார். இது தொடர்பாகப் பாடசாலைச் சமுதாயமும் கல்வி அதிகாரிகளும் பெருங் கவலை அடைந்த போதும் திரு.இந்திரன் குடும்பத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்த அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் உதவியுடன் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் திருவாரூர் நகரிலிருந்து ஏறத்தாழ எட்டுமைல் தொலைவிலிருக்கும் தமது கிராமமாகிய வள்ளுவர்புரத்திலுள்ள பாரதி மகாவித்தியாலத்திற்கு அவர் மாற்றலாகிச் சென்றார். அவர் பாடசாலை அதிபரின் விடுதியிலேயே தங்கியிருந்து நகரத்தின் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்பதற்குத் தமது பிள்ளைகளுக்கு அனுமதி பெற்றார்.

அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் பணியாற்றும் கீழ், மத்திய தர வருமானம் உள்ள மக்கள் வாழும் நகரமாக மாறிக்கொண்டு வருகின்ற இடமே வள்ளுவர்புரமாகும். இப்பிரதேசத்தின் மத்திய தரக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளில் சிறு பகுதியினர் நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்றனர். ஏனைய பிள்ளைகளும் அயற் கிராமங்களிலிருந்து வரும் பிள்ளைகளுமே பாரதி மகாவித்தியாலத்தில் கல்வி பயின்றனர். இப்பாடசாலையில் பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை நவோதயப் பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கிலும் கூடியது.

இப்பாடசாலையின் ஆசிரியர் குழுவில் பெரும்பாலானோர் நகரில் வேலை செய்யும் அலுவலர்களின் மனைவியர் ஆவர். அயற் கிராமங்களில் வதியும் கிராம சேவக அலுவலர், அஞ்சல் அதிபர், ஆகியோரின் மனைவிமாரும் கிராமத்திலேயே கல்வி கற்று ஆசிரியர் பதவி பெற்ற ஆசிரியர்கள் சிலரும் அவர்களில் அடங்கியிருந்தனர். கிராமத்துக்கு வெளியேயிருந்து வரும் பத்து, பன்னிரண்டு ஆசிரியர்களில் பெரும்பாலானோர் நகரிலிருந்து வருபவர்கள் ஆவர்.

பிரதி அதிபராக பணியாற்றிய திரு.நந்தகுமார் வள்ளுவர் புரத்திலிருந்து ஏறத்தாழ நாலு மைல் தொலைவில் வதிந்துகொண்டு காணி விற்பனைகளில் ஈடுபட்டிருந்தார். இதனால் இவர் மாலை நேரங்களில் பாடசாலைப் பணிகளில் பங்குபற்றாது இருந்தார். ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் என்னும் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் பொரும்பாலானோர் மேலதிக வருமானம் பெறுவதற்கு மாலை நேரங்களில் தனிப்பட்ட பிரத்தியேக (டியூசன்) வகுப்புக்கள் நடத்தினார். கல்வி, அலுவலகத்தில் பணியாற்றிய எழுதுநர் ஒருவரின் மனைவியான திருமதி. நீலாவும் கிராம சேவக அலுவலரின் மனைவியும் முன்னாள் அதிபருக்கு ஆலோசனைகள் வழங்கியவர்கள் ஆவார்.

நகரலிருந்து பேருந்தில் வரும் ஆசிரியர்களில் பலரும் பாடசாலைக்கு அருகே வதியும் திருமணமான பெண்கள் சிலரும் பாடசாலைக்குத் தாமதமாக வருவதை திரு. இந்திரன் அவதானித்தார். ஆசிரியர்களின் வரவு இடாப்பைப் பிரதி அதிபரே பேணிக்கொண்டிருந்தார். வரவு இடாப்பின்படி ஆசிரியர்கள் மிகவும் அரிதாகவே தாமதமாக வருகை தந்திருந்தினர். இதன் விளைவாக அதிபரே வரவு இடாப்பில் சிவப்பு கோடு .இடும் பணியை மேற்கொண்டார்.

அடுத்த வாரத்தில் மாதாந்த ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் வரவு பற்றி உரையாற்றிய திரு.இந்திரன் தாமதமாக வரும் ஆசிரியர்களின் தொடர்பாகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இவை ஆசிரியர் சொந்த விடுமுறையிலிருந்து கழிக்கப்பட்டு ஈடுசெய்யப்படும் எனவும் கூறினார். இது தொடர்பாக ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் தாம் மேற்கொண்ட முடிவை அவர் நடைமுறைப்படுத்த தயங்கவில்லை.

பரீட்சைப் பெறுபேறுகள் சிறந்த முறையில் அமையாமையால் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாலை வேளைகளில் விசேட வகுப்புகளை நடத்த வேண்டுமென அதிபர் தெரிவித்த ஆலோசனையை ஆசிரியர்கள் பலர் புறக்கணித்தனர்.

இதனைப் பற்றி மேன்மேலும் சிந்தித்த அதிபர் திரு.இந்திரன் தமக்கு எதிரான ஆசிரியர்கள் பாடசாலையில் இருந்தால் பாடசாலையை முன்னேற்ற முடியாது என்பதை உணர்ந்துகொண்டார். நவோதயப் பாடசாலையில் தம்முடன் பணியாற்றிய திரு.சந்தானம் ஒரு நாள் அதிபரைச் சந்திக்க வந்த போது அதிபர் இவ்விடயங்கள் பற்றி அவருடன் கலந்துரையாடினார். நவோதயப் பாடசாலையில் பணியாற்றும் இளம் ஆசிரியர்களில் சிலர் இப்பாடசாலைக்கு மாற்றலாகி வர விரும்புவதாகத் திரு.சந்தானம் குறிப்பிட்டார். இந்த யோசனையை உடனடியாக நடைமுறைப் படுத்திய அதிபர் ஒரு மாத காலத்துள் நவோதயப் பாடசாலையின் ஐந்து ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு மாற்றம் பெற்று வரச் செய்வதில் வெற்றி கண்டார். அவர் நவோதயப் பாடசாலையிற் செய்தவாறே புதிய ஆசிரியர்களின் துணையுடன் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஆரம்பித்தார். மூன்று மாதங்களில் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது.

தம்முடன் ஒத்துழையாத ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்து தன்னுடன் ஒத்துழைக்கும் ஆசிரியர்களை வைத்திருந்தால் மட்டுமே பாடசாலைப் பணிகளை மேலும் சிறந்த முறையில் நடத்த முடியுமெனக் கருதிய அதிபர் இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளருடனும் கலந்துரையாடினார்.

ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின்னர் ஆசிரியர் இடமாற்றம் நிகழப்போகிறது என்னும் வதந்தி ஆசிரியர்களிடையே பரவியது. ஆசிரியர்களில் ஒருவர் இது பற்றிப் பிரதி அதிபரிடம் விசாரித்தபோது திருமதி. நீலாவே அக்கதையை கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே ஆண்டின் இறுதியில் கலைவிழா ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட்டன. நவோதயப் பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்று இப்பாடசாலைக்கு வந்த இளம் ஆசிரியரான திரு.மோகனே இதற்கு முன்னின்று உழைத்தவர் ஆவார். இவருக்கும் க.பொ.த (உ.த) வகுப்பில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவும், நாடகப் பயிற்சி என்று கூறிகொண்டு அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாகவும் பாடசாலையில் வதந்தி ஒன்று பரவியது. கலைவிழாவின் பின்னர் அவர் அம்மாணவிக்கு பரிசுகள் கொடுக்கப்போவதாகவும் அவளின் வீட்டுக்குச் சென்று வருவதாகவும் மாணவர்கள் தம்முள் பேசிக்கொண்டனர்.

திருமதி இந்திரனுக்கும் இச்செய்தி எட்டியது. அவர் அதனைத் தன் கணவரிடம் தெரிவித்தார் "நான் இது பற்றி விசாரிக்கின்றேன்" என்று இந்திரன் கூறியபோது இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின்னர் உயர் வகுப்பு ஒன்றில் பயிலும் மாணவன் ஒருவன் அதே வகுப்பில் பயிலும் மாணவி ஒருத்திக்கு எழுதிய காதல் கடிதம் ஒன்று அவ்வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியரிடம் கிடைத்தது. அதிபருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது. இறுதியில் மாணவன் பாடசாலைக்கு வருவது நிறுத்தப்பட்டது. மாணவிக்குக் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மறுநாள் நடைபெற்ற காலைக் கூட்டத்தின் போது இது பற்றிக் குறிப்பிட்ட அதிபர் அத்தகைய மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படுவரென எச்சரித்தார்.

அடுத்தநாள் அம்மாணவன் பூச்சிகொல்லி மருந்தை அருந்தித் தற்கொலை புரிந்ததாகச் செய்தி பரவியது. அதிபருக்கு எதிராகப் பாடசாலைச் சுற்றுமதிலில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இது தொடர்பாக விசாரணை நடாத்துவதற்குக் கல்வி அலுவலகத்தின் அலுவலர்கள் பாடசாலைக்கு வந்தனர்.

திரு.இந்திரன் தமக்கு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத் தருமாறு கல்வி அலுவலர்களை வேண்டிக்கொண்டார்.

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.
   (i) பாடசாலைச் சமுதாயம் என்பதால் கருதப்படுவது யாது?
   (ii) பாடசாலைக்குத் தாமதமாக வரும் ஆசிரியர் தொடர்பாகச் சட்டரீதியாக எடுக்கத்தக்க நடவடிக்கைகள் யாவை?
   (iii) பாடசாலைக் காலைக் கூட்டத்தின் போது எடுத்துரைக்க வேண்டிய ஐந்து விடயங்களைக் குறிப்படுக.
   (iv) பாடசாலை மேற்பார்வை பணியாளரை (Staff) நியமித்தல் தொடர்பாகத் தற்போது நடைமுறையில் உள்ள ஏற்பாடுகள் யாவை?
   (v) மாணவர்களுக்குத் தண்டனை விதித்தல் தொடர்பான விதிகள் யாவை?

2. தலைவர் என்ற முறையில் திரு.இந்திரனிடம் இருந்த மூன்று சிறப்பியல்புகளையும் இரண்டு குறைபாடுகளையும் விபரிக்க.

3. தாபனம் ஒன்றின் "முகாமைப் பண்பாடு" அத்தாபனத்தைப் போன்றே சுற்றாடலுக்கும் உகந்த முறையில் அமைந்திருக்க வேண்டும்.

   (i) "முகாமைப் பண்பாடு" என்பதை விளக்குக.
   (ii) நவோதய மகா வித்தியாலயமும் பாரதி வித்தியாலமும் அமைந்துள்ள வேறுபட்ட சுற்றாடலுக்கு ஏற்ப "முகாமைப் பண்பாடு" களை அமைத்துக் கொள்வது பற்றி உமது கருத்துக்களை எடுத்துரைக்க.

4. திரு.இந்திரன் மாற்றலாகிச் சென்ற பின்னர் நீங்கள் பாரதி மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டால் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வீரென விளக்குக.

**இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப்பரீட்சை, 1991 ஜீன்**

## (03) கல்வி நிர்வாகம் தொடர்பான விடய ஆய்வு

இரண்டு மணித்தியாலம்
Two hours

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து எல்லா வினாக்களுக்கும் விடை தருக

திரு. பரணவிதானே என்பவர் தென்மத்திய மாகாணத்தின் கல்விப் பணிப்பாளராவார். இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் முறைமையாகக் கற்பித்தல் நடைபெறவில்லையெனப் பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் கல்விப் பணிப்பாளருக்கு அடிக்கடி முறையிட்டு வந்தனர்.ஆசிரியர்கள் நேரம் பிந்தி வருகின்றனர், அதிக லீவு எடுக்கின்றனர், பாடக்குறிப்புக்களையும் வேலைத்திட்டங்களையும் அவர்கள் எழுதுவதில்லை, பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆயத்தமாக அவர்கள் வருவதில்லை, பாடசாலை நேரங்களில் பொருள்களை வாங்குவதற்குச் சந்தைக்கும் கடைகளுக்கும் செல்கின்றனர் என்பவையே பொதுவான முறைப்பாடுகளாக இருந்தன.மேலும் ஆசிரியர்கள் தமது பாடசாலைக் கடமைகளைப் புறக்கணித்து பிரத்தியேகக் கற்பித்தலில் அல்லது முழுநேரப் பயிர்ச் செய்கை வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றச்சாட்டு விடுக்கப்பட்டது.

மாகாணக் கல்விப் பணிப்பாளரும் பங்குபற்றியிருந்த, அண்மையிற் கூடிய கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டமொன்றில் பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள், தாம் செய்த முறைப்பாடுகள் தொடர்பில் கல்விப் பணிப்பாளர் இதுவரை நடவடிக்கையெதனையும் எடுப்பதற்குத் தவறியுள்ளாரெனவும் நிலைமையைத் தடுப்பதற்கு உடனடியான நடவடிக்கைகளெவையும் எடுக்கப்படாவிட்டால் தமது விருப்பத்துக்குமாறாகவேனும் தாம் கல்வி, உயர்கல்வி அமைச்சருக்கு அறிக்கையிடவேண்டிய நிர்ப்பந்தமேற்படுமெனவும் அறிவுறுத்திக் கூறினர்.

56 வயதைத் தாண்டிவிட்ட கல்விப்பணிப்பாளர், தனக்கு எதிரான அச்சுறுத்தல் குறித்து மிக அஞ்சினார். தனது சொந்த ஊர் அலுவலகமான தற்போதைய இடத்திலிருந்து தன்னை இடம் மாற்றுவதற்குக் கல்வி அமைச்சர் தீர்மானித்தால் தான் சேவையிலிருந்து ஓய்வு பெறக் கட்டாயப்படுத்தப்படுவார் என்பதுடன் தமது பாடசாலைக் கல்வியையே இன்னும் பூர்த்தி செய்யாத, தனது இரு இளம் புதல்வியர் வீட்டில் இருந்ததால் உரிய காலத்திற்கு முன் இளைப்பாறுதல் பற்றிய சிந்தனை அவருக்குப் பீதியை உண்டுபண்ணியது.

எனினும், ஆலோசனைக் குழுக்கூட்டத்திற் பதிலளிக்கையில் திரு. பரணவிதானே பாடசாலைகளில் நிலவும் சீர்கேடுகள் அனைத்திற்கும் தனக்குக் கீழ் பணியாற்றிய உத்தியோகத்தர்களையும் பாடசாலை அதிபர்களையும் குற்றஞ்சாட்டி உடனடியாகப் பரிகார நடவடிக்கையெடுப்பதாக வாக்குறுதியளித்தார். தனது அலுவலகத்திற்குத் திரும்பியதுதான் தாமதம் பிரதேசத்திலுள்ள அதிபர்கள் அனைவருக்குமான அவசரக் கூட்டமொன்றைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் பணிப்பாளர் சக்திவாய்ந்த பேச்சொன்றை நிகழ்த்தி அதிபர்கள் தமது பாடசாலைகளில் நிலவும் சீர்கேடுகள் அனைத்தையும் களைவதற்கு உடனடியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறினார். ஆசிரியர்கள் இயற்கையாவே பணிவிணக்கமுள்ளவர்களெனவும் கற்பித்தலில் அவர்கள் அதிக ஆர்வங்காட்டவில்லையெனவும் சுட்டிக்காட்டினார். ஏனைய அரசாங்க ஊழியர்களைப் போன்று அவர்களும் அதிகுறைந்த வேலையைச் செய்து அதியுயர்ந்த நன்மைகளையும் சலுகைகளையும் பெறக்கருதுவதால் அதிபர்கள் அவர்கள் மீது நெருங்கிய மேற்பார்வையையும் கூடிய கட்டுப்பாட்டையும் கொண்டிருக்க வேண்டுமென்றார்.இது மிக உறுதியாக மேற்கொள்ளப்பட வேண்டும் இதற்கமைய நடவாத ஆசிரியர்கள் எவரும் இருப்பின் ஒழுக்காற்று நடவடிக்கையெடுப்பதற்காக அவர்கள் பற்றிக் கல்விப் பணிப்பாளருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். அவர்களை நன்றாகவும் மெய்ம்மையாகவும் தாபிக்க முடியும் என்று அவர்கூறினார். மேலும் தனது அலுவலகத்தில் இத்தகைய ஆசிரியர்கள் பற்றிய மனுக்களையும் முறைப்பாடுகளையும் கொண்ட ஏடுகளைத் தயாரிப்பதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார்.

பணிப்பாளர் அச்சுறுத்தும் தொனியில் இவ்வாறு பேசியதன் பின்னர் இறுதியாக, தமது நிர்வாகக் கடமைகளைத் தகுந்தவாறு நிறைவேற்ற முடியாதிருக்கும் அதிபர்கள் அனைவருக்கும் எதிராகத் தான் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறினார்.

கூட்டத்திலிருந்த அதிபர்கள் தமது அங்கீகாரத்தைத் தெரிவிக்குமுகமாகத் தமது தலைகளை அசைத்தனர். ஆனால் அண்மையிலேயே, கல்வி நிர்வாகக் கல்லூரியிலே கல்வி முகாமைத்துறையில் தனது டிப்ளோமாக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவரான சிங்கராஜா மகாவித்தியாலயத்தின் இளம் அதிபர் திரு. கதாசூரியரென்பவர், தனது ஆசனத்தினின்றும் எழுந்து கல்விப் பணிப்பாளரால் எடுத்தியம்பப்பட்ட குறிப்புரைகள் தொடர்பில், தனது கருத்துகளைத் தெரிவிக்கையில், வன்மைவாய்ந்த அச்செயல்நெறியைத் தொடக்கத்திலேயே மேற்கொள்வதற்குக் கல்வித் திணைக்களம் எடுத்திருக்கும் தீர்மானம் பற்றித் தான் திகைப்படைந்துள்ளதாகக் கூறினார். அடிப்படையில், ஆசிரியர்கள் வேலை செய்வதற்கு விருப்பங்கொண்டவர்களெனவும் பாடசாலைச் செயற்பாடுகளில் அவர்கள் கட்டாயப்படுத்தலின்றித் தாமாக முன்வந்து செயற்பாடுகளில் பங்கு பற்றி வருகின்றனரெனவும் தமது பணியில் இயன்றவரை சிறப்பாகக் கருமமாற்றமுயல்வரெனவும் அவர்களுக்கு வேண்டியது பணியாற்றுவதற்கான ஊக்கலை அவர்களிடம் உண்டுபண்ணுவதேயாகும் எனவும் அவர் கூறினர். மேலும் தற்கால ஆசிரியர்கள் 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆசிரியர்களிலிருந்து மிக வேறுபட்டவர்களெனவும் வெளிப்படாது மறைந்திருக்கும் ஆற்றல்கள் பலவற்றை அவர்கள் கொண்டிருப்பதால் அத்தகைய ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திணைக்களம் மேற்கொள்ளவேண்டுமெனவும் கூறினார்.

மேலும் முறைப்பாடுகள் அனைத்தும் ஆசிரியர்கள் தம் அவதானத்திற்குக் கொண்டுவரப்படவேண்டுமெனவும் அவை பற்றி ஆசிரியர்களுடன் கலந்தாராய்ந்து, நிலவும் சீர்கேடுகள் எங்ஙனம் ஒழிக்கப்படவேண்டுமென ஆசிரியர்களது ஆலோசனை பெறப்பட வேண்டுமெனவும் கூறித் தனது உரையைக் கதாசூரியர் முடித்துக் கொண்டார்.தீர்மானமெடுத்தற் செயல்முறையில் ஆசிரியர்களைப் பங்குபற்றச் செய்யும் இம்முறை அதிசிறந்த பயன்களைத் தருமென அவர் கூறினார்.

திரு. கதாசூரியர் வழங்கிய இக்குறிப்புரைகளால் திடீரென மின்னலால் தாக்குண்டவர் போலக் கல்விப் பணிப்பாளர் குழப்பமடைந்தார். மீண்டும் பேசத் தொடங்குவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்த திரு. பரணவிதானேயிற்குச் சில நிமிடங்கள் எடுத்தன. நெடுமூச்சொன்றுடன் தனது சுவாசப்பையை நிரப்பிக்கொண்டு அவர் அமைதியாகப் பேசத் தொடங்கினார். திரு.கதாசூரியரால் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள், குறித்த விடயத்தில் நவீன நூல்கள் எழுதப்பட்டுள்ள வெளிநாடுகள் சம்பந்தப்பட்டவரைப் பொருத்தமானவையாக அமையுமெனவும் ஆனால் எமது நாட்டிலுள்ள பாடசாலைகளில், நிலைமைகள் முற்றிலும் வேறுபட்டவையாக இருத்தலினால் அத்தகைய கருத்துக்களைச் செயற்படுத்துதல் முடியாத காரியமெனவும் அவ்வாறு செய்ய முற்படுவதால், நிலைமைகள் சீர்கெடலாமெனவும் அவர் அறிவுறுத்தினார்.

ஹன்கெந்த மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு. சீதலரத்ன கலந்துரையாடலுக்குத் தனது பங்களிப்பை நல்குகையில் பாடசாலைகளின் நிலைமைகள் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடுகின்றனவெனவும் மேற்குறித்த குறைபாடுகளையும் பலவீனங்களையும் கொண்ட பாடசாலைகளும் , அவையற்ற பாடசாலைகள் பாடசாலைகளும் உள்ளன எனவும் பாடசாலைகள் அனைத்தும் அத்தகைய செயல்நெறியைப் பிடிவாதமாக நிறைவேற்றினால் அது பாதகமான விளைவுகளைக் கொணருமெனவும் எச்சரித்தார்.

அடுத்ததாகப் பேசிய, புஞ்சிதுன்ஹிந்த மகாவித்தியாலய அதிபர் திரு. இரத்தினபால தான் பல கடிதங்களை எழுதியும் கல்வி அலுவலகத்திலிருந்து தனது பாடசாலைக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லையெனக் கூறினார். உரிய நேரத்தில் பாடசாலையைத் தொடங்கவும் மூடவும் ஒரு மணிக்கூடுதானும் வழங்கப்படவில்லையெனவும் பாடசாலைக்கு மணியொன்று இல்லையெனவும்பல ஆண்டுகளாக ஆண்டுக்குரிய பழுதுபார்த்தல் வேலைகள் எவையும் அங்கீகரிக்கப்படாததால் கட்டடங்களும் வேலியும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றனவெனவும் பாடசாலை பாழடைந்துள்ளதெனவும் இவற்றால் தானும் தனது பணியாளர்களும் ஊக்கலை இழந்துள்ளதாகவும் முறைப்பாடு கூறினார்.

குருகிங்குல வித்தியாலயத்தின் அதிபர் திருமதி பாலமயற்றவக்க, அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் வரிசையில் 5 ஆசிரியர்கள் குறைவாக இருப்பதாகவும் பாடசாலையில் ஆங்கிலமோ, விஞ்ஞானமோ கற்பிக்கப்படாததால் இப்பாடங்களைக் கற்பதற்கு மாணவர்கள் பிரத்தியேக படிப்புக்குப் போகவேண்டியுள்ள்தாகவும் கூறினார். இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்வரை பாடசாலைகளில் திருத்திகரமான நிலைமைகளை மீள ஏற்படுத்துதல் சிரமமான பணியாக அமையுமென்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

கனமதுல்ல வித்தியாலயத்தின் அதிபர் திரு. கருணதாச தனது பாடசாலையில் ஆசிரியர்களுக்கான குடிமனைகள் இல்லையெனவும் தூர மாவட்டங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் குறித்த இப்பிரதேசத்தில் தமக்கு உறைவிட, தங்குமிட வசதிகள் இல்லாத காரணத்தால் பத்துப் பதினைந்து மைல்கள் பிரயாணஞ்செய்ய வேண்டியுள்ளதெனவும், அத்துடன் பேரூந்துச்சேவை திருப்திகரமானதாக இல்லாத காரணத்தால் அவ்வாசிரியர்கள் நேரத்திற்குப் பாடசாலைக்கு வரமுடியவில்லையெனவும் குறைப்பட்டுகொண்டார்.

எனவே கூட்டத்தின் தொனி முற்றிலும் வேறுபட்ட ஒரு திசையிற் சென்றது. அதிபர்கள் ஒருவர் பின் ஒருவராக எழுந்து பாடசாலைகளில் காணப்படும் பெளதிக, மனித வளங்களின் குறைபாடுகளை நிரற்படுத்தத் தொடங்கித் திணைக்களத்தினால் அக்குறைவுபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை திருப்திகரமான பாடசாலை நிர்வாகம் சாத்தியமற்றதாக அமையுமென அறிவுறுத்தினார்.

திடீரெனப் பணிப்பாளர் எழுந்து நின்று கூட்டத்தை அமைதிகொள்ளச் செய்து அதிபர்கள் ஒவ்வொருவரும், தமது பாடசாலைகளில் தற்பொழுது நிலவும் குறைபாடுகளை எங்ஙனம் களைய முடியுமெனும் குறிப்பான முன்மொழிவுகளுடன், உடனடியாக, அறிக்கையொன்றைத் தயாரித்து அடுத்துவரும் வாரத்தின் இறுதிக்கு முன்னதாக அதை நேரில் தன்னிடம் சமர்ப்பிக்கவேண்டுமெனக் கூறிக் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

1. இடமாற்ற அச்சுறுத்தலினின்று தப்பிக்கொள்வதற்குக் கல்விப் பணிப்பாளர் திரு. பர்ணவிதானேயினால் எடுத்துக்கொள்ளப்பட்ட செயல்நெறிபற்றி நீர் கொள்ளும் கருத்துக்கள் யாவை?
   அவரது பேச்சினில் வெளிவந்த அவரது கருத்துக்களையும் மனபான்மைகளையும் நீர் ஏற்றுக் கொள்கிறீரா? உமது விடைக்கு நியாயங்கள் தருக.

2. எமது நாட்டின் பாடசாலை நிர்வாகத்தில் சிங்கராஜ மகாவித்தியாலய அதிபர் திரு .கதாசூரியரினால் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள் எவ்வளவிற்குப் பயனுள்ளவையாகவும் பிரயோகிக்கப்படத்தக்கவையாகவும் உள்ளன? உமது அனுபவத்தின் மூலம் விடையைத் தெளிவுபடுத்துக.

3. தென் மத்திய மாகாணத்திலுள்ள ஒரு பாடசாலைக்கு அதிபராக நீர் நியமிக்கப்பட்டால் பாடசாலையின் இக்குறைபாடுகளை வெல்வதற்கு நீர் எந்நடவடிக்கைகளை மேற்கொள்வீர்? அவ்வாறு செய்கையில் கூட்டத்தில் அதிபர்கள் எடுத்துக்காட்டிய பெளதிக, மனித வளங்களின் பற்றாக்குறைகள் எந்த அளவிற்குப் புறக்கட்டுப்பாடுகளாக அமையும்?

4. மேற்குறிப்பிட்ட பாடசாலைகளிற் காணப்பட்ட பலவீனங்களைக் குறைப்பதற்கு அதிபர்களுக்கு உதவும் வகையில் கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்படத்தக்க பொருத்தமான கட்டமைப்பு வாய்ந்த திட்டமொன்றை ஆலோசனையாகத் தருக?

**இலங்கைக் கல்வி நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பிற்கு (பொதுப் பதவி அணி) ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, 1994 (1995 மார்ச்)**

**கல்வி நிர்வாகம் தொடர்பான விடய வகைக் கற்கை**

இரண்டு மணித்தியாலம்
Two hours

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து எல்லா வினாக்களுக்கும் விடை தருக

ஒரு கிராமப் பிரதேசத்தில் அமைந்திருந்த கரும்புருவெல்ல மகா வித்தியாலயத்தின் அதிபரான திரு. பண்டிதசேகர கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றவுடன் திடீரென இடமாற்றஞ்செய்யப்பட்டார் இதனால் பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் பெருந்துயரமும் வேதனையுமடைந்தார்கள். கிராமத்தின் நடவடிக்கைகள் அனைத்திலும் தலைமைத்துவத்தை ஏற்கும் தலைவரான இரத்நாயக்க ராலகாமி என்பவர் இது தொடர்பாகக் கூட்மொன்றைக் கூட்டுவித்தார். கிராமத்தின் பிரதான மதகுருவின் ஆதரவின் கீழ் இக்கூட்டம் நடாத்தப்பட்டது. பாடசாலையின் அதிபரைத் தவிர கிராமத்திலிருந்த முக்கியமான நபர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர்.

முதலாவதாக உரையாற்றிய இரத்நாயக்க ராலகாமி என்பவர் கூட்டம் கூட்டப்பட்டமைக்கான காரணத்தை விளக்கிக் கூறினார். அதிபரான திரு. பண்டிதசேகர திடீரெனச் செல்வதனால் அப்பிரதேசத்துக்கு ஏற்படும் பெருந் தாக்கத்தினை அவர் பகுப்பாய்வு செய்தார். எனினும் திரு.பண்டிதசேகர தன்னுடைய சொந்த நலனுக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் செல்வதனால் அவரைத் தடுப்பது நியாயமல்ல என்பதை அவர் எடுத்துக் கூறினார். எனவே நன்றியுணர்வுள்ள மக்கள் என்ற முறையில் அவருடைய அர்ப்பணவுணர்வுடைய சேவையைக் கௌரவிக்கு முகமாகத் தாம் அதிசிறப்பான பிரியாவிடை வைபவமொன்றினை ஒழுங்க செய்யவேண்டும் என்று அவர் கூறினார்.

அடுத்த பேச்சாளர் கிராம வைத்தியரான சூரியாராச்சி வெத ராலகாமி என்பவராவார். அவர் இரத்நாயக்க ராலகாமியின் பிரேரணையை அங்கீகரித்ததுடன் பாடசாலையின் அண்மைக்கால வரலாற்றினையும் நினைவு கூர்ந்தார். திரு.பண்டிதசேகர அதிபராகப் பதவியேற்ற சமயத்தில் பாடசாலை மிகவும் சீர் குலைந்த நிலையிலிருந்தமையால் முப்பது ஆண்டுகளாக அப்பாடசாலையில் சேவையாற்றிய முன்னாள் அதிபரான திரு. ஆரியரத்தினவுக்குப் பிரியாவிடை வைபவமொன்றைக் கூட ஒழுங்கு செய்வது சாத்தியமாக இருக்கவில்லை என்றும் திரு. பண்டிதசேகர பதவி ஏற்றதும் அவர் செய்த முதற்காரியம் பாடசாலையிலே சிறு குழுக்களாகப் பிளவுபட்டிருந்த சகல பிரிவுகளையும் ஒன்றுபடுத்தி திரு. ஆரியரத்தினவுக்குப் பிரியாவிடை வைபவம் ஒன்றினை ஒழுங்கு செய்தமையேயாகும் என்று அவர் கூறினார்.

மேலும் திரு. பண்டிதசேகரவுக்கு முன்னர் பதவி வகித்த அதிபரான திரு. ஆரியரத்தின தேசிய உடை அணிந்தாரென்றும் அவர் ஒரு பட்டதாரி அல்லர் என்றும் திரு. சூரியாராச்சி ராலகாமி தொடர்ந்து கூறினார். எனினும் தான் பதவியேற்றபோது சிறிதாக இருந்த பாடசாலையை திரு. ஆரியரத்தின அபிவிருத்தி செய்து அதனை மகா வித்தியாலய அந்தஸ்துக்கு உயர்த்தி, உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்து வியக்கத்தகு சேவையாற்றியிருந்தார். ஆனால் மகா வித்தியாலய அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட பின்னர் துரதிஷ்டவசமாக, சிறிது காலத்தினுள் அது துரிதமாகச் சீர்கெடலாயிற்று. அதனால் அவர் ஆற்றிய அரிய சேவையை மக்கள் மறந்து விட்டார்கள். பாடசாலையில் நிலவிய ஒற்றுமை குலைந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடையே மனஸ்தாபமும் ஏற்பட்டது. பாடசாலை சமூகத்தில் பல்வேறு பிரிவுகளிடையே அவநம்பிக்கையும் அபிப்பிராய பேதமும் நிலவியது. இதன் காரணமாகப் பாடசாலை சீர்குலைந்து வீழ்ச்சியுற்றது. புதிய அதிபரான திரு. பண்டிதசேகர ஆசிரியர்களை ஒன்றுபடுத்தியமையும் வீழ்ச்சியுற்றிருந்த பாடசாலை ஒழுக்காற்றினை மீண்டும் நிலைபெறச் செய்தமையையும் விரக்தி காரணமாகப் பாடசாலை நடவடிக்கைகளில் பங்குபற்றாமலிருந்த அப்பிரதேச மக்களை மீண்டும் பாடசாலை நடவடிக்கைகளில் பங்குபற்றச்செய்தமையும். திரு. சூரியாராச்சி வெத ராலகாமி தெளிவாக விவரித்தார். இறுதியாக திரு. பண்டிதசேகர ஆற்றிய விலை மதிக்கமுடியாத சேவைக்காக, அவரைக் கௌரவிக்குமுகமாக அவருக்கு அதிசிறந்த பிரியாவிடை வைபவமொன்றினை நாம் ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

அடுத்ததாக தற்போது அப்பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றும் திரு. ஜயசேகர உரையாற்றினார். திரு. பண்டிதசேகரவின் முதலாவது ஆசிரியர் குழுக் கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஆசிரியர்களிடையே ஒற்றுமை இல்லாமையினால் பாடசாலை அபிவிருத்தி அடைவது சாத்தியமல்ல என்றும் ஆசிரியர் குழுவிலே பட்டதாரிகள், பட்டதாரிகள் அல்லாதவர், ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கில ஆசிரியர்கள் அல்லாதவர், தேசிய உடை அணிந்தவர்கள், காற்சட்டை அணிந்தவர்கள் என்றவாறு இன்னோரன்ன

பிரிவுகளும், குழுக்களும் இருப்பதைத்தான் அறிந்திருந்தார் என்றும்,திரு. பண்டிதசேர மீண்டும் மீண்டும் கூறியதை திரு. ஜயசேகர நினைவுகூர்ந்தார். ஆசிரியர் மத்தியில் நிலவிய இப்பிரிவுகளுக்கு அமைய மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோரும் குழுக்களாகப் பிரிந்தனர். இக்குழுக்கள் ஒன்றையொன்று வெறுத்தன. அவநம்பிக்கையுடன் செயற்பட்டன. ஒன்றுடனொன்று போட்டியிட்ட இக்குழுக்களின் தொழிற்பாடுகள் பாடசாலையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தமையால், ஆசிரியர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டால் மட்டுமே பாடசாலையை மீண்டும் அபிவிருத்தி செய்யலாம் என்று திரு. பண்டிசேகர திரும்பத்திரும்ப வலியுறுத்தினார். திரு. பண்டிதசேகர துணிச்சலுடன் பகர்ந்த கூற்றையும் திரு. ஜயசேகர நினைவுகூர்ந்தார். நாம் அனைவரும் ஒரு குழுவாகச் செயற்படுவோம் அன்றேல் ஒன்றாகவே மாய்ந்து விடுவோம். நான் முன்னேற்றத்துக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குகின்றேன். ஒரு மாதக் காலத்தினுள் முன்னேற்றமெதுவும் காணப்படாவிட்டால் நான் உங்களிடமிருந்து பிரியாவிடை பெறுவேன்'' என்பதே அக்கூற்று. மேலும் திரு. பண்டிதசேகர தன்னுடைய செயற்றிறம் மிக்க தலைமைத்துவம் மூலம் ஒரு மாத காலத்தினுள் ஆசிரியர்களிடத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்திய விதத்தினையும் அதற்குப் பின்னர் அவர் பாடசாலையினை எவ்வாறு உயர்நிலைக்குக் கொண்டுவந்தார் என்பதையும் திரு. ஜயசேகர தெளிவுபடுத்தினார். அத்துடன் நடுநிலைமையையும் நியாயத்தையும் அடிப்படையாகக் கொண்ட அவரது உறுதிப்பாடும் அன்புமே அனைவரது விசுவாசத்தையும் நன்மதிப்பையும் பெறுதற்கு அவருக்குப் பெருமளவில் உதவியது என்றும் திரு. ஜயசேகர விளங்கப்படுத்தினார்.ஆகவே திரு. பண்டிதசேகரவுக்குத் தங்களது நன்றியுணர்வை வெளிப்படுத்துவதற்கான வைபவம் மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

அப்பாடசாலையின் மற்றுமோர் உதவி ஆசிரியரான திரு. இரத்தினபால அடுத்த பேச்சாளர் ஆவார். திரு. பண்டிதசேகர அதிபராக இருந்த காலத்தில் தாமதமாகப் பாடசாலைக்கு வந்த ஆசிரியர்களைத் தண்டிப்பதற்காக அவர் சிவப்புக் கோட்டினை ஒரு போதும் வரவுப் பதிவேட்டில் கீறவில்லை என்றும் திரு. பண்டிதசேகரவுக்கு முன்னரிருந்த அதிபரான ஆரியரத்தின சிவப்புக் கோட்டினை உரிய நேரத்திற் கீறிட்ட காலத்தில் நிகழ்ந்தது போன்று ஆசிரியர்கள் தற்போது தாமதமாகிப் பாடசாலைக்கு வருவதில்லை என்றும் திரு. இரத்தினபால கூறினார். உண்மையிலே திரு. பண்டிதசேகர அதிபராகப் பதவியேற்ற பின்னர் பஸ் வண்டியில் வரவேண்டியிருந்தமையால் இருந்திருந்த தாமதமாகப் பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள், பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வரவேண்டுமென்பதற்காகக் கூடின பணம் செலவழித்துத் தனியார் வாகனங்களை ஒழுங்கு செய்வதற்கும் ஊக்குவிக்கப்பட்டனர். பாடசாலையின் ஏறத்தாழ எல்லா நடவடிக்கைகளையும்''சுய மதிப்பீடு'' எவ்வாறு ஊடுருவி இருந்ததென்பதையும் ஒவ்வொருவரும் தனது கடமைப்பங்கினைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு எவ்வாறு முயற்சி செய்தார் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார்.திரு. பண்டிதசேகர அதிபராக வருவதற்கு முன்னர், பாடசாலைக்குத் தாமதமாக வந்த அசிரியர்கள் தம்மை ஹீரோக்களாகத் (தலைவர்களாகக்) கருதிக்கொண்டவர்களென்றும் தற்போது தவிர்க்க முடியாத காரணங்களுக்காகத் தாமதமாகிப் பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள் மாணாக்கரிடம் மன்னிப்புக் கோருபவராக இருந்தார்கள் என்றும் திரு. இரத்தினபால கூறினார்.ஆசிரியர் மனப்பாங்கில் ஏற்பட்ட இம்மாற்றம் திரு. பண்டிதசேகரவின் சாமர்த்தியத்தை பிரதிபலிப்பதாக இருந்தது.

அடுத்ததாக, பல்கலைக்கழக மாணவனும் பாடசாலையின் பழைய மாணவனுமான திரு.சிறிபாலா உரை நிகழ்த்தினார். திரு. பண்டிதசேகர இல்லாவிடில் தான் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றிருக்கவே மாட்டாரென்றும், உள நோயாளர் இல்லம் போன்றிருந்த பாடசாலையை, குறுகிய காலத்தில் கற்றல் தொழிற்பாட்டுக்கு உகந்த ஓர் இடமாக மாற்றியதுமன்றி உயர்தர வகுப்புக்களில் புவியியல் பாடத்தைச் சிறப்பாகக் கற்பித்துத் தனது கற்பித்தல் திறனை வெளிப்படுத்தி ஆசிரியர்களின் நன்மதிப்பையும் திரு. பண்டிதசேகர பெற்றார் என்றும் திரு. சிறிபால கூறினார்.திரு. பண்டிதசேகர நிருவாகப் பணியில் ஈடுபட்டிருந்த போதிலும் உயர்தர வகுப்பிற்கு உரிய நேரத்திற்குச் சென்று பாடங் கற்பித்து, தான் முன்மாதிரியாக இருந்து கொண்டு நேரந்தவறாமையின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணர்த்தினார். திரு. பண்டிதசேகர தனக்கு முன்னர் பதவி வகித்த அதிபரைப் போலன்றி, அதிபர் குடிமனையில் குடும்பத்துடன் வசித்தார். முழு நேரத்தையும் பாடசாலைக்காகவே செலவிட்டார். இப்பாடசாலையில் நல்ல விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. கைப்பந்து, வலைப்பந்து ஆகியன மட்டுமே விளையாடப்பட்டன. அவற்றிற்கு ஏறத்தாழ எவ்வித ஊக்கமோ, உற்சாகமோ அளிக்கப்படவில்லை. உதைப்பந்து, கிரிக்கற், பாட்மின்ரன், ரேபிள் ரென்னிஸ் போன்ற விளையாட்டுக்கள் உட்பட சாரணர் இயக்கம், பயிலுனர் பட்டாளம்,ஆகியனவற்றையும் இவர் ஆரம்பித்தார். இதற்காகப் பாடசாலை முடிவடைந்த பின்னர் மாணாக்கருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்காக மாணக்கர் பாடசாலையில் நிறுத்தி வைக்கப்பட்டார்கள். இணைபாடவிதான நடவடிக்கைகள் மாணாக்கரது நாளாந்த நாளாந்த வழக்கமுறையான நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக்கப்பட்டது, ஒரு விளையாட்டு மைதானத்தை அமைப்பது பகீரதப் பிரயத்தனமாகும், ஆனால் ஆசிரியர், மாணாக்கர், பெற்றோர் ஆகியோரின் துணையுடன் அவர் "சிரமதானம்" மூலம் சில மாதங்களில், விளையாட்டு மைதானத்தை அமைத்துவிட்டார். மேலும் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகியன உள்ளடங்கிய அழகியற்ற கலைகளுக்கு முக்கிய இடமளித்தார். இத்துறையில் மாணாக்கர் காட்டிய ஊக்கமும் உற்சாகமும் காரணமாகப்

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நமது பாடசாலை பல பரிசில்களைப் பெற்றதுடன் பல வெற்றிகளையும் ஈட்டியது. இதனால் மாவட்டமெங்கும் பாடசாலையின் புகழ் பரவியது. பாடசாலையில் மாற்றங்களைப் புகுத்துவதற்கும் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்வதற்கும் திரு. பண்டிதசேகர பாடசாலையின் பௌதிக வளங்களையும் மனித வளத்தையுமன்றி வேறு எதனையும் பயன்படுத்தவில்லை. இந்த உண்மையை திரு. சிறிபால அழுத்தமாகக் கூறினார்.

கொஞ்சக் காலத்திற்கு முன்னர் இப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி, தற்போது அப்பிரதேசத்தில் மற்றொரு பாடசாலையில் அதிபராகக் கடமைபுரியும் திரு. இரத்தினதாச உரை நிகழ்த்துகையில் திரு. பண்டிதசேகராவுக்கு முன்னிருந்த அதிபரான திரு. ஆரியரத்தின அப்பாடசாலையில் முப்பது ஆண்டுகளுக்குங் கூடுதலாகப் பணிபுரிந்தார் என்றும் அப்போது சிறு பாடசாலையாக இருந்தஅப்பாடசாலையினை அபிவிருத்தி செய்து அதனை ஒரு மகாவித்தியாலயத்தின் அந்தஸ்த்துக்கு உயர்த்துவதற்கு அவர் ஆற்றிய சேவை மிக்க பெறுமதி வாய்ந்ததாகவும் மெச்சத்தக்கதாகவும் இருந்தபோதிலும் அது பாராட்டுக்குப் பாத்திரமாகவில்லை என்றும் கூறினார். பாடசாலையானது மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அங்கு கற்பிக்க வந்த பட்டதாரிகள், ஆசிரியர்கள் மத்தியில் குழுக்களையும் பிரிவுகளையும் ஏற்படுத்தி அதிபர் உட்பட பாடசாலையையும் சமூகத்தையும் நாசமாக்கி விட்டார்கள். தாம் பட்டம் பெற்றிருந்திருந்தமையால் தலை வீக்கங்கொண்டிருந்த பட்டதாரி ஆசிரியர்கள், தங்களது அதிபரான திரு. ஆரியரத்தின பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியராக இருந்தமையால் அவரை மதிக்கவில்லை. உரியவாறு நடத்தவுமில்லை. அதிபரின் தலைமைத்துவத்தை அவர்கள் ஏற்கவில்லை. இதனால் பாடசாலையில் நிலவிய ஐக்கியம் கலைந்தது. இதனைத் தொடர்ந்து உருவான ஒற்றுமையில்லாத நிலைமை பேரழிவுக்கு வழிவகுத்தது. ஆகவே பட்டதாரிகளினால் வழிநடத்தப்ப்ட்ட காற்சட்டை அணிந்த ஆசிரியர்களே பாடசாலையின் வீழ்ச்சிக்குக் காரணமாவர் அதிபரான திரு. ஆரியரத்தின அல்லர். எனவே முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றிய திரு.ஆரியரத்தினவுக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பிரியாவிடை வைபவத்திலும் பார்க்கச் சிறப்பான வைபவமொன்று இப்போது ஒழுங்கு செய்யப்படுவது குறித்து திரு. இரத்தினதாச தனது பூரண அதிருப்தியை தெரிவித்தார்.

இச்சமயத்தில் கூட்டத்துக்கு வருகை தந்த அப்பாடசாலையின் ஆசிரியர்களுள் ஒருவரான வணக்கத்திற்குரிய தம்மாராம தேரோ கூட்டத்திற்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த பிரதம மதகுருவிடம் அனுமதிபெற்று உரையாற்றினார். நாளை மறுநாள் மகரகமை பதவிநிலை அலுவலர் கல்லூரியில் ஆரம்பிக்கும் இரண்டு வாரகாலக் கட்டாயப் பயிற்சி நெறியொன்றினைப் பின்பற்றுமாறு திரு. பண்டிதசேகரவுக்குக் கடிதமொன்று சற்று முன்னர்கிடைத்ததென்றும் அதனால் அடுத்த நாள் மூட்டை முடிச்சுக்களுடன் தான் கட்டாயமாகப் போகவேண்டியிருந்தமையால் தனது சார்பில் ஒழுங்கு செய்யப்பட்ட எந்தவொரு வைபவத்திலும் தன்னால் கலந்து கொள்ள முடியாது என்றும் பரிசில்கள் எதனையும் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் திரு. பண்டிதசேகர கூட்டத்திற்கு அறிவிக்கச்சொன்னதாக வணக்கத்திற்குரிய தம்மாராம தேரர் கூறினார். மேலும் தான், கம்புருவெல்லையில், இருந்த காலத்தில் தனக்கு ஆதரவளித்து ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்குமாறு திரு. பண்டிதசேகர கூட்டத்திற்கு கூறச்சொன்னதாகவும் வணக்கத்திற்குரிய தம்மாராம தேரோ கூறினார்.

1. திரு. பண்டிதசேகர அதிபராகக் கடமையாற்றியபோது அவர் வெளிப்படுத்திய முக்கியமான தலைமைத்துவப் பண்புகள் மூன்றினைத் தருக. நீர் குறிப்பிடும் ஒவ்வொரு பண்பினைப் பற்றியும் நீர் அவதானித்தவற்றைத் தருக.

2. திரு. பண்டிதசேகரவுக்கு முன்னர் பதவி வகித்த திரு. ஆரியரத்தினவின் முகாமைத்துவம் தோல்வியடைவதற்கு ஏதுவாயமைந்த முக்கியமான மூன்று காரணங்கள் தருக. சம்பந்தப்பட்ட துறைகளில் திரு. பண்டிதசேகரவின் முகாமைத்துவத்தின் வலுவான அம்சங்களுடன் அவற்றை ஒப்பிட்டு வேறுபாடு காட்டுக.

3. பாடசாலைகளிலே ஆசிரியர்கள், மாணாக்கர் மத்தியில் "சுயமதிப்பீடு" எனும் எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துவதனால் ஏற்படும் செயல்முறை சார்ந்த விளைவுகளைப்பரிசீலனை செய்க. மூன்று உதாரணங்கள் தருக.

4. ஆளணி முகாமைத்துவம் தொடர்பில், "போதனை செய்வதிலும் அனுஷ்டித்துக் காட்டுதல் நன்று" எனும் கோட்பாடு மிக்கபயனுறுதி வாய்ந்ததாகும். மேலே தரப்பட்டுள்ள விடய ஆய்வினூடாக (விடய வகைக் கற்கையினூடாக )இக்கூற்று செல்லுபடியாத்தன்மையைப் பரிசீலனை செய்க.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப்பரீட்சை, 1983

## கல்வி நிர்வாகம் தொடர்பான விடய ஆய்வு

இரண்டு மணித்தியாலம்
Two hours

### தேசிய வங்கியின் பிரதேச அலுவலகங்கள்

தேசிய வங்கியின் குன்கம என்னுமிடத்திலிருந்த பிரதேச அலுவலகம் கொழும்பிலுள்ள தலைமையலுவலகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்ட நியாயமான அளவிற் பெரிய அலுவலகமாக இருந்தது. பிரதேச முகாமையாளரைத்தவிர அலுவலகத்தில் ஒரு கணக்காளர் ஓர் உதவிக்கணக்காளர் இரு துணைக்கணக்காளர் ஒரு தலைமைக்காசாளர் என மேற்பார்வை செய்யும் பணிப்பாளர் தொகுதியின் ஐந்து உறுப்பினர்கள் அங்கு இருந்தனர். அலுவலகம் 35 எழுதுவினைஞர்களையும் 12 காசாளர்களையும் 6 ஏவலாளர்களையும் கொண்டிருந்தது.

பிரதேச முகாமையாளர் திரு. பங்குநாயக்கா வங்கியின் 45 வயது நிரம்பிய பழைய ஒருவராவார். மற்றிக்குலெசன்தகமை பெற்ற அவர் 23 ஆண்டுகளுக்கு முன் தனது 22 ஆவது வயதில் எழுதுவினைஞராக வங்கியில் சேர்ந்தார். 4 ஆண்டுகளுக்கு முன் அவர் பதவி உத்தியோகத்தர் தரத்திற்கு பதவியுயர்தப்பட்டு 1983 மார்ச் மாதம் 15ஆம் தேதி குன்கம பிரதேச அலுவலகத்தின் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். குன்கமவில் பதவிலமர்த்தப்படுமுன் அவர் கொழும்பு பாங்சல் வீதிக் கிளையின் கிளை முகாமையாளராக இருந்தார்.

கணக்காளர் திரு ஜீ. அதிகாரி ஊக்கம் மிகுந்த 27 வயது இளம் நபராவார். கல்விப் பாதையில் ஒளிமிகுந்த முன்னேற்றத்தைப் பெற்றிருந்த அவர் இறுதியில் வித்தியோதயப் பல்கலைக்கழகத்தின் வர்த்தகப் பட்டப்படிப்பு பரீட்சையில் தனிச்சிறப்புத் தகமைகளுடன் சித்தியெய்தினார். அவர் 1978 அம் ஆண்டில் நேரடியாகப் பதவி உத்தியோகத்தராக வங்கியிற் சேர்ந்தார். அவர் திரு. பங்குநாயக்கா பிரதேச முகாமையாளராக நியமனம் பெற்றமைக்கு ஏறக்குறைய 3 மாதங்களுக்கு முன்பு குன்கம பிரதேச அலுவலகத்தின் கணக்காளராக அமர்த்தப்பட்டார்.

திரு. லியனமான குன்கம பிரதேச அலுவலகத்தின் ஓர் எழுதுவினைஞராவார். அவர் 28 வயதினையுடைய வர்த்தகப்பட்டதாரியாவார். அவர் 5 ஆண்டுகளுக்கு முன்பு வங்கியில் எழுதுவினைஞராகச் சேர்ந்தார்.

திரு. பங்குநாயக்கா மார்ச் மாதத்தில் கடமையேற்ற பொழுது பிரதேச அலுவலகத்தில் வேலைகள் நிறைவேற்றப்படாது எஞ்சியிருந்தமையைக் கண்டார் பல நாட்களாக வேலையைக் கவனமாக அவதானித்த பின்னர் அவர் பணியாளர் போதுமான அளவில் இருந்தமையையும் ஆனால் எழுதுவினைஞர் தொகுதியின் சில உறுப்பினர் தமது முழுநாள் வேலையையும் செய்யாதிருந்தமை காரணமாக வேலைகள் பூர்த்தியெய்தாது எஞ்சியிருந்தமையையும் உணர்ந்து கொண்டார். அலுவலகத்திற்குள் அவர் நுழைந்த பல தடவைகளில் எழுதுவினைஞர் சிலர் தமது ஆசனங்களில் இல்லாதிருந்தமையைக் கண்டார். அவர்களுட் சிலர் கூட்டங்கூட்டமாக ஒருவருடன் ஒருவர் உரையாடிக்கொண்டிருந்தனர். ஏனையோர் வெளியே சென்றிருந்தனர். மேலும் அவர் பிரதேசக் கிளைப் பிரிவின் பணியாளர் சங்கம் மிகப்பலம் பெற்றிருந்தமையையும் சில தடவைகளில் எதிர்க்குமியல்பு வாய்ந்ததாக இருந்தமையையும் அவதானித்தார். சங்கத்தின் செயலாளர் அற்ப குறைபாடுகள் தொடர்பாகவுங் கூட பிரதேசக் முகாமையாளரைச் சந்திக்கத்தயங்கவில்லை. ஓர் உதாரணத்தை மேற்கோளாகத் தருமுகமாக அவர் பிரதேச முகாமையாளராகப் பதவியேற்ற ஏறக்குறைய

ஒரு மாதத்தின் பின்னர் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகின்றேன். அன்று முற்பகல் 10 மணியளவில் சங்கத்தின் செயலாளர் பிரதேச முகாமையாளரின் அலுவலகத்திற்குள் அமைதியைக் குலைக்கும் வகையில் திடீரெனப் புகுந்து அலுவலகத்திலுள்ள இரு விசிறிகள் இயங்காதிருக்கின்றன என முறைப்பாடு செய்ததுடன் அவை பழுதுபார்க்கப்பட்டாலன்றி எந்த எழுதுவினைஞரும் அலுவலகத்தில் வேலை செய்யமாட்டார்கள் என்றும் அவருக்கு அறிவித்தார்.திரு. பங்குநாயக்க வெறுப்படைந்தாராயினும் அத்தினமே விசிறிகளை பழுதுபார்த்தலுக்கான ஒழுங்குகளைச் செய்தும், அதற்கிடையில் இயங்காதிருந்த விசிறிகளுக்கு அண்மையில் இருந்த எழுதுவினைஞர்களை அலுவலகத்தின் பொருத்தமான இன்னுமொரு பகுதிக்கு இடமாற்றியும் மகிழ்ச்சியின்மை வளர்வடைவதைத் தவிர்த்துக் கொண்டார்.

கணக்காளரும் ஏனைய நிறைவேற்று அதிகாரிகளும், எழுதுவினைஞர்கள் சிலர் தமது வேலையைப் பூர்த்தி செய்யாது அலுவலகத்தை விட்டு அனேக தடவைகள் வெளியேறுகின்றனர் என்றும் ஏதாவது ஒரு சாட்டின் பேரில் குறுகிய கால நேரங்களுக்கு அடிக்கடி வெளியே செல்கின்றனர் என்றும் பல தடவைகள் முறைப்பாடு செய்துள்ளனர். திரு. பங்குநாயக்க இவ்விடயங்கள் தொடர்பாக சங்கத்தின் பிரதிநிதிகளுடன் ஒரு பொழுதும் கதைத்ததுமில்லை, அவர்களைப் பற்றித் தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை செய்ததுமில்லை. அத்தகைய செயல் நெருக்கடியான ஒரு நிலையை உண்டு பண்ணுமென்று அவர் கருதினார். மேலும் அவர் பிரதேச முகாமையாளராகத் தான் முதல் நியமனம் பெற்றமையுடன் தொடர்பு பெறும் அத்தகைய ஒரு நிலைமையைத் தலைமையலுவலகத்திற்கு அறிவிக்கத் தயங்கினார்.

1983 ஜீலை 26ந் திகதி, கணக்காளர் திரு. அதிகாரி, ஏறக்குறைய பிற்பகல் ஒரு மணியளவில் பிரதேச முகாமைய்யாளரிடம் வந்து எழுதுவினைஞர் திரு.லியனமான்ன அலுவலகத்தில் மிகுந்த இறுமாப்பான முறையில் நடந்து கொண்டாரென்றும் தன்னைத் தகாதவார்த்தைகளால் இகழ்ந்து பேசினார் என்றும் வங்கிக்கு வெளியே தன்னைத் தாக்கப்போவதாகவும் அச்சுறுத்தினாரென்றும் முறைப்பாடு செய்தார். ஏறக்குறைய அரை மணித்தியாலத்தின் முன்னர் நிகழ்ந்த இச்சம்பவத்தினால் திரு. அதிகாரி கிளர்ச்சியடைந்தார் என்பது தெளிவாயிற்று. பிரதேச முகாமையாளரின் வேண்டுகோளின் படி அவர் எழுத்து மூலமான முறைப்பாடொன்றைச் சமர்ப்பித்தார்.

அதன் பின்னர் திரு. பங்குநாயக்க அச்சம்பவம் தொடர்பான சில விசாரணைகளை மேற்கொண்டார். மேற்பார்வை செய்யும் ஏனைய அலுவலர், திரு. அதிகாரிக்கும் திரு.லியனமான்னவிற்குமிடையில் நிகழ்ந்த தகாத பேச்சுவார்த்தைகளைத் தாம் தற்செயலாகக் கேட்க நேர்ந்ததென்றும் ஆனால் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்குத் தூரத்தே தாம் இருந்ததால் விவரங்களைத் தம்மால் தரமுடியவில்லை என்றும் அவருக்கு கூறினார். திரு. லியனமான்னவின் ஒத்துழைப்பைப் பெறுதல் சிரமமானது என்று அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். இன்னும் அவர் திரு.லியன்ன மான்ன தன்னிடம் ஒப்படைக்கப்படும் வேலையை ஏற்க அடிக்கடி மறுத்தார் என்பதையும் அவர் தமது ஆசனத்திலிருந்து உரத்துப் பேசும் வழக்கமுடையவர் என்பதையும் அறிந்து கொண்டார். எனினும் கடந்த காலத்தில் திரு.லியன்னமான்ன எழுதுவினைஞராக ஓரளவு ஒத்துழைத்தார் எனத் திரு. பங்குநாயக்காவுக்குக் கூறப்பட்டது. முன்பு பிரதேச முகாமையாளராக இருந்த வன்செயல் நிறைவேற்ற அலுவலர் தரத்திற்குப் பதவியுயர்த்தும் நோக்கங்ளுக்காகக் கடந்த வருடத்திற்கான தனது மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்தபொழுது, திரு. லியன்னமான்னவைத் தனிப்பட்ட அலுவலராகக் கணித்து பதவியுயர்விற்கு அவரை விதந்துரைக்கவில்லை. இதன் பின்னரே எழுதுநர் தனது வேலைப்பொறுப்புக்களிலிருந்து நழுவத்தொடங்கினார் எனவும் இவ்வாறான நடத்தையிலிறங்க முற்பட்டார் எனவும் குறிப்பிடப்பட்டது.

திரு. பங்குநாயக்க குறித்த சம்பவம் பற்றி தலைமை அலுவலகத்திற்கு விரிவான அறிக்கை ஒன்றை அனுப்பினார். திரு. லியனமானாவுக்கு எதிரே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் விதந்துரைத்தார். தவறான நடத்தையின் பாரதூரமான இயல்பு கருதி திரு.லியனமானாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தலைமை அலுவலகம் தீர்மானித்தது. தலைமையலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின் படி திரு. பஞ்சநாயக்க திரு.லியனமன்னவின் மீது பின்வரும் குற்றச்சாட்டுத்தாளை வழங்கினார்.

திரு. லயன்னமான்ன
எழுதுவினைஞர்,
தேசிய வங்கியின் கிளை அலுவலகம்,
குன்கம.

பின்வரும் குற்றச்சாட்டுக்களில் ஒன்றிற்காகவோ அல்லது பலவற்றுக்காகவோ உமக்கு எதிரே ஏன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாகாது என்பதற்குத் தயவுசெய்து காரணங்காட்டுக.

1) 1983.7.26 ஆம் திகதியன்று கணக்காளர் திரு. அதிகாரி உம்முடன் கதைத்தபொழுது தகாத வார்த்தைகளால் அவரை இகழ்ந்தீர். என்பதுடன் வங்கிக்கு வெளியே அவரைத் தாக்கப்போவதாக அச்சுறுத்தி மிக்க தவறான முறையில் நடந்து கொண்டீர் என்பது.

2) உமது ஆசனத்திலிருந்து உரத்துச்சத்தமிட்டுக் காணப்பட்டீர் என்பதுடன் அலுவலக நேரத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டீர் என்பது.

3) பல தடவைகள் உமக்கு ஒதுக்கப்பட்ட வேலையை நிறைவேற்றாது அலுவலகத்தை விட்டு வெளியே சென்றீர் என்பதுடன் பிரதேச அலுவலக கணக்காளரினது ஏனைய உத்தியோகத்தரினரதும் சட்டப்படியான அறிவுறுத்தல்களை வேண்டுமென்றே மீறி நடந்தீர் என்பது.

மேற்போந்த குற்றச்சாட்டுக்களுக்கான உமது பதில் கீழே கையொப்பமிட்டவரிடம் ஒகஸ்ட் 18ம் திகதியன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் வங்கி அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

கையொப்பம்/ பங்குநாயக்க
முகாமையாளர்,
குன்கம பிரதேச அலுவலகம்,
ஆகஸ்ட் 10,1983.

திரு. வியன்னமானவின் மீது இக்குற்றச்சாட்டுத்தாள் வழங்கப்பட்டதன் விளைவாக அலுவலகத்தில் எழுதுவினைஞர் தொகுதியின் மத்தியில் குழப்ப நிலை தோன்றியது. அடுத்த நாட் காலை பணியாளர் சங்கத்தின் செயலாளர், முகாமையாளரை இவரது அறையில் கண்டு அவருடன் நீண்ட நேரம் வாதம் நிகழ்த்தினார்.

1983.8.12ம் திகதி திரு.பங்குநாயக்க தனது முன்னைய நிலையிலிருந்து பின்வாங்கி தலைமை அலவலகத்திற்கு இன்னுமோர் கடிதம் எழுதினார். திரு. அதிகாரியின் கூற்றினைத்தவிர திரு.லியன்னமானவின் ஒழுங்கீனமான நடத்தைக்கு நேரடியான பிற சான்று எதுவும் இன்மையால் குற்றச்சாட்டுக்களை நிலைநிறுத்துதல் மிகவும் சிரமமானது என அவர் அதில் கூறியிருந்தார். இச்சூழ்நிலைகளில் திரு. பங்குநாயக்கா புலன் விசாரணைகளைத் தொடர்வதனால் பயனுள்ள

எந்நோக்கமும் நிறைவேற்றுவதில்லை என்றும் குறிப்பிட்டார். எனினும் தலைமை அலுவலகம் முகாமையாளரால் வழங்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை கைவிடுவதில்லை. என தீர்மானித்தது. ஏனெனில் ஒழுங்கீனமான இந்த நடத்தை மிக்க பாரதூரமானது என கருதினர்.சங்கத்தின் வற்புறுத்தலின் கீழ் முகாமையாளர் தனது முன்னைய கருத்திலிருந்து பின்வாங்கினார் என அவர்கள் சந்தேகித்தனர். திரு.லியன்னமானாவுக்கு அவர் மீது வழங்கப்பட்ட குற்றச்சாட்டுத்தாள் குறித்து ஆகஸ்ட் 28ம் திகதி நினைவூட்டப்பட்டது. செப்ரம்பர் 5ம் திகதியன்று அவர் தனது பதிலில் தனக்கு எதிராக வழங்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்றும் தன்னை இடரில் வீழ்த்துவதற்கென அவை தனக்கு எதிராக திட்டமிடப்பட்டவை என கூறியிருந்தார்.

தலைமை அலுவலகத்தின் ஆளணிப்பிரிவைச் சேர்ந்த திரு. பிரஜபால புலன் விசாரணை நடத்துவதற்கு செப்ரம்பர் 28ம் திகதி குன்கமவிற்கு வந்தார். அவரால் நடத்தப்பட்ட புலன் விசாரணையில் கணக்காளர் தனது முன்னைய குற்றச்சாட்டுரையை திரும்பவும் வற்புறுத்தி கூறினாராயினும் பிரதேச அலுவலகத்தின் ஏனைய உத்தியோகத்தர் திரு. லியன்னமானாவின் கீழ்படிவின்மையை உறுதிப்படுத்துவதற்கான திட்டவட்டமான கூற்றுக்களை வழங்குவதற்கு தயாராக இருக்கவில்லை. பணியாள் சங்கத்தின் பிரதேச கிளை திரு. லியன்னமானாவை பலமாக ஆதரித்தது. எழுதுவினைஞர் அணியின் எல்லா உறுப்பினர்களும் அவரது கூற்றினை உறுதிப்படுத்தி அவருக்கு ஆதரவு வழங்கினார்.அதற்கிடையில் முகாமையாளர் திரு. பங்குநாயக்கா மிக்க அளவில் உறுதியின்மை வாய்ந்தவராக நடந்து கொண்டார். கணக்காளரின் கூற்றுத் தவிர திரு. லியன்னமானாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு சான்று எதுவும் இல்லை.என புலன் விசாரணை உத்தியோகத்தரிடம் அவர் கூறினார்.

புலன் விசாரணையின் இறுதியில் திரு. பிரஜபால தனது அறிக்கையில் குன்கம பிரதேச அலவலகத்தின் கருமங்கள் திருப்திகரமாக நடைபெறவில்லை எனவும் பணியாளர் அணியின் சில உறுப்பினர்கள் தமது பொறுப்பைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகியுள்ளது எனவும் கூறியிருந்தார். மேலும் அவர் இவ்விடயம் தொடர்பாக பணியாளர் சங்கம் ஏற்று நிற்கும் நிலையினையும் மேற்பார்வை செய்யும் பதவி உத்தியோகத்தரது, சிறப்பாக பிரதேச முகாமையாளர் பங்குநாயக்காவின் கோழைமை வாய்ந்ததும் ஒரு நிலைப்படாததுமான மனப்பான்மையினையும் நோக்குகையில் புலன் விசாரணையை மேலும்தொடர்ந்து நடாத்துவதனால் எந்நோக்கமும் நிறைவேற்றப்படப்போவதில்லையென அறிக்கையிட்டார்.

1. திரு. லியன்னமானாவுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை தொடர்புபடுத்துவதற்கு வழிவகுத்தசம்பவங்களும்/ அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் புலன் விசாரணையில் நிலைநாட்டப்படாத நிலைமையின் தோற்றத்திற்கு எங்ஙனம் விளக்கம் தருவீர்

(60 புள்ளிகள்)

2. பிரதேச அலுவலகத்தில் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு உதவக்கூடிய மாற்றுச்செயல் நெறிகளை மதிப்பீடு செய்க.

(40 புள்ளிகள்)

இலங்கைக் நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த
போட்டிப் பரீட்சை-1994 (1995 யூலை)

விடய ஆய்வு

இரண்டு மணித்தியாலம்
Two hours

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

## மாவட்ட புனருத்தாரணச் செயற்றிட்டம்

கடந்த ஆண்டிலேற்பட்ட சூறாவளியும் புவிநடுக்கமும் மிகக் கடுமைவாய்ந்தவையாகவும் முன்னொரு போதும் இல்லாவகையிலும் இருந்தனவென்றும் இத்துன்ப நிகழ்வுகளினால் ஏற்பட்ட சேதம் மிகப்பாரியது என்றும் அறிக்கையிடப்பட்டது. மிகப் பாரிய சேதம் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. சமுத்திரம் ஏறத்தாழ மூன்று நான்கு மைல்கள் நாட்டினுள்ளே பாய்ந்தது. வீடுகள், கட்டடங்கள் பல அழித்தொழிக்கப்பட்டன. தென்னை, மரங்களிற் பெரும்பாலானவை வேருடன் சாய்க்கப்பட்டமையால் பிரதான பயிராம் தென்னை பாதிப்படைந்தது. இப்பேரிடர் நிகழ்வில் ஏறத்தாழ எண்ணாயிரம் மக்கள் இறந்ததாகவும் அறிக்கையிடப்பட்டது.

அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டு அவசரகாலத்தைப் பிரகடனம் செய்தது. பிரதான சேவைகள் அனைத்தும் அத்தியாவசிய சேவைகளாகக் குறித்தொதுக்கப்பட்டன. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரம் பெற்ற ஒரு குழு மாகாணத்திற்கு விஜயம் செய்து மாகாணத்தின் புனருத்தாரணத்திற்கும் புனரமைப்புக்குமான அறிக்கையைச் சமர்ப்பிப்பத்தது. அரசாங்கத்தினால் கிழக்கு மாகாணத்தின் புனருத்தாரணத்திற்கும் புனரமைப்புக்குமான நியமிக்கப்பட்ட செயற்பாட்டுக்குழு மாவட்ட புனருத்தாரணச் செயற்றிட்டங்கள் மூன்றினைத் தாபித்தது. இம்மாவட்டப் புனருத்தாரணச் செயற்றிட்டங்களின் பிரதான தொழிற்பாடுகளும் பின்வருமாறு.

(i) இடம் பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வு முகாம்களைத் தாபித்தல்
(ii) மாவட்ட மக்களுக்கு உணவினையும் பிற அத்தியாவசிய சேவைகளையும் வங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
(iii) அவசர கால உடனலச் சேவைகளை வழங்கல்
(iv) பகிரங்கக் கட்டடங்கள், வீதிகள், பாலங்கள் உட்படசேதமடைந்த கீழ்க் கட்டமைப்புக்களைப் புனர் நிர்மாணம் செய்தல்.
(v) இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்தல்
(vi) அழிவுற்ற பெருந்தோட்டப் பயிர்களை மீள நடுதல்
(vii) மாவட்டத்தில் இயல்பான நிலையை மீளக்கொணர்வதற்குத் தேவையான பிற முயற்சிகளை மேற்கொள்ளுதல்

திரு. வற்சன் பெரேரா என்பவர் கோகன்ன மாவட்ட புனருத்தாரணச் செயற்றிட்டத்தின் செயற்றிட்டப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அண்மையிலேயே ஓய்வுபெற்ற ஒரு சிரேட்ட அரசாங்க உத்தியோகத்தரான அவர் அரசாங்க சேவையில் திணைக்களங்கள் பலவற்றில் சிரேட்ட பதவிகளை வகித்து வந்தவர். இராணுவத்தின் தொண்டர் படையில் 'மேஜர்' பதவியையும் வகித்து வந்தவர். தனது செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும். பிற முகவராண்மைகளுடன் அவற்றை இயைபு படுத்துவதற்கும் பரந்த அதிகாரங்கள் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டிருந்தன. பின்வரும் பொறுப்புக்களுடன் மூன்று பிரதி பணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

திரு.ரஞ்சன் டி மெல் - வழங்கல்களும் களஞ்சியமும்
திரு. பாலித விஸ்வகுமார - கீழ்க்கட்டமைப்பு அபிவிருத்தி
திரு. பத்தி யஸபால - மீளக்குடியமர்த்தலும் அபிவிருத்தியும்

திரு. கிங்கஸ்லி பிரேமரட்ண என்பவர் மீளக்குடியமர்த்தல், அபிவிருத்தி உதவிப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். திரு. எம். ஸி. பர்னாந்து என்பவர் பொறியியல் உதவியாளராக நியமனம் பெற்றார். இரு வழங்கல்கள் அலுவலர்கள், இரு களஞ்சியக்காப்பாளர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

நிர்வாகம், நிதி எனும் விடயங்கள் செயற்றிட்டப்பணிப்பாளரின் பொறுப்பில் விடப்பட்டன. செயற்றிட்டப்பணிப்பாளருக்கு உதவும் முகமாக நிர்வாக உத்தியோகத்தராக திரு. காரியப்பெருமவும் கணக்காளராக திரு. குணபாலவும் நியமிக்கப்பட்டனர்.ஆறுபொது எழுதுநர்கள், நான்கு கணக்கு எழுதுநர்கள், நான்கு சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்கள், மூன்று அலுவலகத்தொழிலாளர்கள், என்போர் நிர்வாகத் உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் வேலையாற்றி வந்தனர்.சமுதாய அபிவிருத்தி அலுவலர்களான திரு. அரம்பே பொலவும் திரு. மகிந்த பாலவும் நேரடியாக செயற்றிட்டப்பணிப்பாளரின் கீழ் பணியாற்றி வந்தனர். மகளிர் விவகார உதவிப்பணிப்பாளர் திருமதி. வினிதா சுகதபால மகளிர் அபிவிருத்தி அமைச்சிலிருந்து செயற்றிட்டப்பணிக்கு விடுவிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் அமைச்சுடன் நேரடியான தொடர்பைப் பேணி வந்தார். மாவட்டத்தில் மகளிர் நிலையை உயர்த்துவதற்கான திட்டம் வகுத்து நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கம் செய்ய வேண்டுமென அவர் எதிர்பார்க்கப்பட்டார்.

செயற்றிட்டப்பணிப்பாளர் எப்பொழுது வேலை மிகுந்தவராகக் காணப்பட்டார். அவர் தனது நேரத்தின் பெரும்பாகத்தைக் கடிதத் தொடர்புகளைக் கவனிப்பதிலும் பக்ஸ் செய்திகளை அனுப்புவதிலும் தொலைபேசியில் உரையாடுவதிலும் செலவிட்டார். தனது பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் அனைவரும் தமது கருத்துக்களையும் அறிக்கைகளையும் எழுத்து வடிவிற் சமர்ப்பிக்க வேண்டுமென அவர் வற்புறுத்தி வந்தார். நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகக் கோப்புக்களையும் அலுவலக நடைமுறைகளையும் பேணி வருதல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டார். பிரதிபணிபாளர் யஸபால செயற்றிட்டப்பணிப்பாளரிடம் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும் அலுவலகத்தில் வேறுபட்ட பிரிவுகளை இயைபுபடுத்துவதற்கும் அலுவலகக் கூட்டங்கள் ஒழுங்காக நடத்தப்பட வேண்டுமெனப் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்திருந்தார். இவ்வேண்டுகோளுக்கு விடையாக செயற்றிட்டப்பணிப்பாளர், "திரு. யஸபால எனக்கு எவ்வளவு வேலையுண்டு என்பதை நீர் காணவில்லையா? கூட்டங்களில் நேரத்தைச் செலவிட நான் விரும்பவில்லை. எனினும் அலுவலகத்தில் எவரும் எந்நேரத்திலும் எதுபற்றியும் என்னுடன் கலந்து பேச முடியும். அத்துடன் பணியாளர் தொகுதி உறுப்பினர்கள் எவரையும் சந்திக்கும் பொழுதெல்லாம் முன்னேற்றம் குறித்து நான் அவர்களிடம் விசாரிப்பதுண்டு. இதை விட வேறு யாது எமக்கு வேண்டும்" என்று கருத்து வெளியிட்டார்.

திரு. ரஞ்சன் டி மெல் ஒரு பெரிய தனியார் கம்பனியில் நிறைவேற்று அலுவலராகப் பதவிவகித்தவர். அவர் தனியார் துறையில் 15 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றியவர். திரு. டி மெல் ஆற்றிவந்த வேலைகள் சிலவற்றை அங்கீகரிக்காத நிர்வாக உத்தியோகத்தர் காரியப்பெரும திரு. மெல் பண்டங்களின் தொகையான வழங்கல்கள் அனைத்திற்குமான கிரயப்பட்டியல்களை நீர் சமர்ப்பித்திருக்கிறீர். கிரயப்பட்டியல்கள் சில ஒரு இலட்சம் அல்லது இரு இலட்சம் ரூபாக்களுக்கு மேற்பட்டவையாக உள்ளன. கூறுவிலைகளைக் கோராதும் செயற்றிட்டப்பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது எவ்வாறு நீர் கொள்வனவுகளைச் செய்ய முடியும்? கணக்காய்வு அலுவலர்கள் வருகை தரும்பொழுது இக்கொடுப்பனவுகள் பற்றி வினாவ முடியும்" எனப் பகர்ந்தார். திரு. டி மெல் இதற்குப் பதிலளிக்கும் முகமாக 'திரு.காரியபெரும, நான் இந்நாட்டின் பெயர் பெற்ற கம்பனிகளில் சேவையாற்றியிருக்கின்றேன். நான் கொள்வனவு செய்த பண்டங்களின் விலைகள், தரம் என்பவை குறித்து நான் திருப்தி கண்டால் இக்கம்பனிகளுக்கான பண்டங்களைக் கொள்வனவு செய்த பொழுது கூறுவிலையைகளை நான் ஒரு பொழுதும் கோரியதில்லை. இந்நடைமுறைகளில் நேரத்தை நான் வீணாக்க முடியாது. அவ்வாறு செய்ய நான் முயற்சிப்பேனாயின் பண்டங்களை உரிய நேரத்தில் வழங்க முடியாது போகும். இடம் பெயர்ந்த மக்களுக்கான உணவு வழங்கலைத் தாமதிக்க முடியுமா? எனக் கேட்டார்.

திரு. டி மெல் அவர்களின் கீழ் பணியாற்றிய வழங்கல்கள் அலுவலர் இருவரும் தனியார் கம்பனிகளில் வேலையாற்றி வந்தவர்கள், அவர்களைச் செயற்றிட்டத்திற்குக் கொணர்ந்தவர் திரு. டி மெல் ஆவார். எனினும் இரு களஞ்சியக்காப்பாளர் அரசாங்க சேவையிலிருந்து செயற்றிட்டத்திற்கு விடுவிக்கப்பட்டவர்கள். அவர்கள் களஞ்சிய நடைமுறைகளில் கருத்துச் செலுத்தி வந்தார்கள். பண்டங்களைத் தாமதமின்றி வழங்குமாறு திரு. டி மெல் அவர்களைக் கேட்டபொழுதெல்லாம் வேறுபட்ட படிவங்களை நிரப்புவதிலும் பதிவேடுகளில் பதிவுகளைச் செய்வதிலும் அவர்கள் நேரத்தைச் செலவிட்டு வந்தனர். என்பதை அவர் அவதானித்தார். இது பற்றி திரு. டி மெல் செயற்றிட்டப்பணிப்பாளருக்கு முறைப்பாடு செய்தார். "இக்களஞ்சியக் காப்பாளர்களுடன் எவ்வாறு நான் வேலை செய்ய முடியும்? அவர்கள் மிகுந்த அசட்டை மனப்பான்மை கொண்டவர்கள்: திறமையற்றவர்கள்: இதனால் தான் நான் எப்பொழுதும் அரசாங்க நிறுவங்கள் நிறைவேற்றி வரும் பெரும்பாலான செயற்பாடுகள் தனியார் துறையினரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும் எனக் கூறுவது வழக்கம்."

இதனைக் கேட்ட செயற்றிட்டப்பணிப்பாளர், "திரு.மெல் நாம் அனைவரும் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் அதே வேளை நடைமுறைகளும் எமக்குத் தேவைதான் இல்லாவிடில் நாம் மேற்கொள்ளும் வேலைகள் தொடர்பில் பொறுப்புடைமையும் கணக்களித்தகைமையும் இல்லாமற் போய்விடும்" எனப் பதிலளித்தார்.

இதற்கிடையில் பிரதிப்பணிப்பாளர் பாலத விஸ்வகுமார, செயற்றிட்டப்பணிப்பாளரைச் சந்தித்து தனது அறிவுக்கு எட்டாத வேறுபட்ட வேலைகளை அவர் தனது பொறியியல் உதவியாளரிடம் ஒப்படைப்பது குறித்துத் தான் கொண்ட அதிருப்தியை அவரிடம் தெரிவித்தார். "இவ்வாறு வேலை செய்தல் ."இவ்வாறு வேலை செய்தல் மிகச் சிரமமானது. நான் வேலைக்களத்திற்குச் சென்றபோது தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடமிருந்து இத பற்றி அறிய நேர்ந்தது. வீதியை தக்கவாறு அமைக்கும் பொறியியல் உதவியாளர் மீது அவர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர். இதுபற்றிய இன்னுமொரு விடயம் யாதெனில் இவ்வீதி எமது வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. எனது பிரிவில் எனக்குத் தெரியாமல் வேலை எதுவும் நடைபெற்றால் என்னால் இத்தொழிலைச் செய்யமுடியாது. "செயற்றிட்டப்பணிப்பாளர் தனது தலையைச்சொறிந்தவாறே சிரிக்க முயன்று பின்வருமாறு கூறினார். "திரு. விஸ்வகுமார இவ்விடயங்கள் பற்றி இவ்வளவு கவலை கொள்ளாதீர். பொறியியல் உதவியாளர் இதுபற்றி உம்முடன் கலந்துரையாடியிருப்பார் என நான் எண்ணினேன். இது ஓர் இன்றியமையாத கருமம் எனவே அதனை வேலைத்திட்டத்தில் உள்ளடக்குவீராக. அத்துடன் தொண்டர் அமைப்பினைச் சேர்ந்த மக்கள் எது கூறினும் அது பற்றிக் தீவிரமாக அக்கறைச் செலுத்தாதீர்".

திரு. விஸ்வகுமார, செயற்றிட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தை விட்டு வெறுப்புடன் அப்பாற் சென்றார். செயற்றிட்டப்பணிப்பாளர் எதைக் கூறினும் பிரதிப்பணிப்பாளர் யசபாலவும் கூட செயற்றிட்டப்பணிப்பாளர் வேலைகளை நேரடியாகத் தனது உதவிப்பணிப்பாளரிடம் ஒப்படைப்பது பற்றி அவ்வளவு மகிழ்ச்சி காணவில்லை என்பதை அவர் அறிந்திருந்தார்.. திரு. விஸ்வகுமார மேலும். பொதுமக்களுடனான வேறுபட்ட கூட்டங்களில் செயற்றிட்டப்பணிப்பாளர் தனது தற்றுணிபின் பேரிலேயே கருமங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன எனும் அபிப்பிராயத்தை ஏற்படுத்தியதுடன் வேறுபட்ட வேலை உருப்படிகளை அவை வேலைத்திட்டத்தில் இல்லாதிருப்பினும் கூட நிறைவேற்றித்தருவதான வாக்குறுதியளித்துள்ளார் என்பதையும் அறிந்து கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் புனருத்தரான வேலைக்குத் தமது உதவியை வழங்க வெளிநாட்டு முகவராண்மைகள் பல இணங்கின அத்தகைய உதவிக்கான செயற்றிட்ட முன்மொழிவுகளை வகுத்தளிக்குமாறு புனருத்தாரனத்திற்கும், புனரமைப்பிற்கும் தனிப்பொறுப்பு வாய்ந்த செயற்பாட்டுக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. மாவட்டத்தின் புனருத்தாரனச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென மீளாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. மீளாய்வுக்குழு கோகன்ன மாவட்டடத்திற்கு வந்து செயற்றிட்ட அலுவலகம் ,அகதிமுகாம்கள் களத்திலிருந்த வேறுபட்ட நிர்மாண அமைவிடங்கள் என்பவற்றுக்கு விஜயம் செய்தது தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மீளாய்வுக் குழுவிற்கு செயற்றிட்ட அலுவலகம் திறமையற்று இயங்குவதாகவும் செயற்றிட்டப்பணிப்பாளர் தொண்டர் அமைப்புக்களுடன் அதன் எச்செயற்பாடுகளிலும் ஒத்தழைக்கவில்லை எனவும் அறியத் தந்தனர். உணவுப்பொருட்கள்,உட்பட அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் கிராம மட்ட அரசாங்க அலுவகர்களால் மட்டும் விநியோகிக்கப்பட்டு வந்ததையும் தகைமை பெறாத மக்கள் பலர் இவ்வுதவியைப் பெற்று வந்தமையையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். மேலும் நிர்மாண வேலைகள் சிலவற்றின் தரம் மிகக் குறைவாக உள்ளது. எனவும் இவ்விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும் கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

அகதிகள் முகாம் ஒன்றிலே பெண்கள் கூட்டம் ஒன்று மகளிர் விவகார உதவிப் பணிப்பாளர் பற்றி மீளாய்வுக் குழுவுக்குத் தனது அதிருப்தியை வெளியிட்டது. “இந்த அம்மையார் எமது மனக்குறைகளைச் செவிமடுப்பதில்லை. எமக்குப் பயிற்சி அளிப்பதற்கான அமர்வுகளை ஏற்பாடு செய்வதில் மட்டும் அவர் ஆர்வம் காட்டுகின்றார். எப்பொழுதும் எமது உரிமைகளுக்காக நாம் ஆண்களுடன் போராட வேண்டுமென அவர் கூறுவார். அவர் கூறுவனவற்றுட் பெரும்பாலானவற்றை எம்மால் விளங்கிக் கொள்ளமுடிவதில்லை.” என அவர்கள் கூறினர்.

மீளாய்வுக் குழுச்செயற்றிட்ட அலுவலகத்திலும் கூட பெருமளவு குறைபாடுகளைக் கண்டது. மீளக் குடியமர்த்தலும் அபிவிருத்தியும் வழங்கல்களும் களஞ்சியமும் என்பவற்றுக்கான பிரதிப்பணிப்பாளர்களின் கவனத்துக்குத் தலைமையலுவலகத்திலிருந்து அனுப்பட்ட அவசர ஃபக்ஸ் இயந்திரம் செயற்றிட்டப் பணிப்பாளரின் அறையில் வைத்திருக்கப்பட்டு, அவர் அவ்விடம் இல்லாத வேளையில் அறை பூட்டப்பட்டுக் கிடப்பதால் வேறு ஒருவரும் ஃபக்ஸ் இயந்திரத்தை பயன்படுத்த முடியாதிருந்தமையாகும். வெற்றிட்டப்பணிப்பாளர் பல நாட்கள் தொடர்ச்சியாக அலுவலகத்தில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வுக்குழு மேலும் செயற்றிட்ட அலுவலகத்தின் செயற்பாடுகளில், குறிப்பாக கணக்கீடு, களஞ்சியக் காப்பு, அலுவலக நடைமுறைகள் எனும் பரப்புக்கள் ஒழுங்கீனங்கள் பல நிலவியதை அவதானித்தது. குழு கோகன்ன மாவட்ட புனருத்தாரணச் செயற்றிட்டத்தில் இரு வார காலம் தனது நுண்ணாய்வுகளை நடத்தித் தான் கண்ட விவரணங்களையும் உள்ளடக்கித் தலைமையலுவலகத்துக்குத் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

1. இம்மாவட்ட புனருத்தாரணச் செயற்றிட்டத்தில் நீர் இனங்காணக்கூடிய பிரதான பிரச்சனைகள் யாவை?
2. செயற்றிட்டத்தின் செயல்நிறைவேற்றத்தை மேம்படுத்துவதற்கு அத்தகைய பிரச்சனைகளுக்கான முகாமைத்துவத் தீர்வுகளை ஆலோசித்துரைக்க?
3. செயற்றிட்ட அலுவலகத்தை மீள ஒழுங்கமைப்புச் செய்வதற்கு கோட்டுப்படங்களுடனான (அட்டவணைகள்) செயற்றிட்டமொன்றைத் தருக

# இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப்பரீட்சை -1993

## விடய ஆய்வு

2 மணி

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

### பியகம கிறெற்சர் தொழிற்சாலை

இலங்கையின் பியகம சுதந்திர வர்த்தக வலயம் பற்றிய விவரணத்தின் மூலம் நெதர்லாந்தைச்சேர்ந்த திரு.டி கிறெற்சர் என்பவர் மிகவும் மனம் கவரப்பட்டார். இலங்கையில் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு வழங்கிய வரிச்சலுகைகள் குறைந்த சம்பளங்கள் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்க ஊக்குவிப்புக்களை வழங்கக்கூடிய பிற சுதந்திர வர்த்தக வலயம் எதனையும் அவர் காணவில்லை. நடைமுறை சார்ந்த தேவைப்பாடுகள் துரிதமாகப் பூர்த்தி செய்யப்பட்டுக் கைத்தொழில் ஆடைகளின் உற்பத்திக்கான தொழிற்சாலையொன்று ஓர் ஆண்டிற்குள் செயற்படச் செய்யப்பட்டது.

தொழிற்சாலையின் பௌதீக அமைப்புக்கான நீலப்பதிவுப் படங்களிற் பெரும்பாலானவை அல்ஜீரியாவில் தன்ஜியர்ஸ் என்னும் இடத்தில் அமைந்த கிறெற்சர் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டவை. தன்ஜியர்ஸ் தொழிற்சாலை கடந்த 10 ஆண்டு காலமாகக் தொழிற்பட்டு வந்தது. இந்த ஆண்டுகள் பூராவும் தொழிற்சாலை தங்குதடையின்றி தொழிற்பட்டு வந்தது, அனுகூலமான சம்பளம், வரிச்சலுகைகள் என்பவற்றின் பயனாக கொழும்புத் தொழிற்சாலையானது தன்ஜியர்ஸ் தொழிற்சாலையிலும் கூடிய இலாபகரமானதாக இயங்கவேண்டுமென் கிறெற்சர் எதிர்பார்த்தார்.

நிறைவேற்றுப் பதவிகளுக்காகச் செய்யப்பட்ட தெரிவுகளை அங்கீகரிப்பதற்கென கிறெற்சர் தானே கொழும்புக்கு வருகை தந்தார். அலுவலகம் மிகச் சிறியதொன்றாக அமைய வேண்டியிருந்தது. அதன் பணியாளர் குழுவானது ஒரு பொது முகாமையாளர், நிர்வாக முகாமையாளர், ஆளணி உதவியாளர், உற்பத்தி முகாமையாளர், இலத்திரனியல் தரவு நிரற்படுத்து முகாமையாளர், ஒரு செயலாளர் என்போரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அரசாங்கத்தின் பலதரப்பட்ட அங்கீகாரங்களையும் பெற்றுத்தருவதில் கிறெற்சர் கம்பனிக்கு உதவி நல்கிய வழக்கறிஞரான திரு. நாராயணன் பொது முகாமையாளர் ஒரு வெளிநாட்டவராக இருந்த காரணத்தினால் புதிய பணியாளர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யுமாறு வேண்டிக்கொள்ளப்பட்டார்.

திரு. நாராயணன் தொழிற்சாலை அலுவலகத்தைத் தாபித்த பொழுது தனது முகாமைத் தொழிற்பாடுகள் சில குறித்து தவறான விளக்கங்கொண்டிருந்தார். நிர்வாக முகாமையாளர், ஆளணி உதவியாளர் போன்ற குறித்த சில பதவிகள் நிரப்பப்பட்ட முறையுடன் அவர் முழுமையான இணக்கம் காணவில்லை. நிர்வாக முகாமையாளர் சுதந்திர வர்த்தக வலயப் பிரதேசத்தைச் சேர்ந்தவராகி பல அரசியல் தொடர்புகளையும் கொண்டிருந்தார்.புதிய தொழிற்சாலைகள் பல தாபிக்கப்பட்ட பொழுது அவர் அவற்றிற் சேவையாற்றியிருந்தார். எனினும் எந்த ஒரு தொழிற்சாலையிலேனும் அவர் நீண்டகாலம் சேவையாற்றவில்லை. நாராயணன் மேலும், குறித்த சில வேலையாளர்களின் தெரிவில் உள்ளூர் அரசியல் வாதிகள் செல்வாக்குச் செலுத்தி வந்ததையும் அறிந்திருந்தார். சுதத் வாழ்க்கையின் வேறுபட்ட துறைகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து மிக அற்பமான விடயங்கள் தொடர்பாகவும் சில சமயங்களில் சமூகச் செயற்பாடுகள் தொடர்பாகவும் அதிக எண்ணிக்கையான தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது வழக்கமாயிருந்தது. இது திரு. நாராயணனுக்கு தொந்தரவைத் தந்தது.

தொழிற்சாலையில் வேலை ஆரம்பமாகிச் சில கிழமைகளுக்குள் எதிர்பாரா நிகழ்ச்சிகள் இடம்பெறத் தொடங்கின. தொழிற்பாடு முழுவதையும் வகுத்துச் செயற்படுத்திய பொது முகாமையாளரான வான் எக் என்பவர் தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்பிள்ளை ஒருவருடன் காதல் கொண்டார். அவருக்கு வயது 46ஆக இருந்தது. பல்தேசியக் கம்பனிகள் பலவற்றில் பிரதம நிறைவேற்று அலுவலகராகப் பணியாற்றியிருந்தார். இலங்கையில் செயற்பாடுகளை வெற்றிகரமாக ஆரம்பித்து வைப்பதற்கு அவர் மீது பாரிய அளவிற் தங்கியிருந்தனர். அவர் தொழிற்சாலை பற்றிய காட்சியொன்றையும் அத்துடன் அதன் வருங்கால நிகழ்ச்சித்திட்டங்களையும் வைத்திருந்தார். பணியாளர்கள் எவ்வாறு அபிவிருத்தியடைய வேண்டுமென்பது முழுமையாக அவரது கற்பனையில் வகுக்கப்பட்டிருந்தது.

திரு. வான் எக்கும் சுதத்தும் நெருங்கிய நண்பர்களாயி இருந்தனர். வான் எக்கின் காதலுக்குப் பாத்திரமான செல்வி. குசும் உண்மையில் சுதத்தின் உறவினர்களுள் ஒருத்தியாவாள். சுதத் வேலை நேரங்களுக்குப்பின்னர் வான் எக்கின் வதிவிடத்திற்க வருகை தருவது வழக்கமாக இருந்ததுடன் தொழிற்சாலை விவகாரங்களுடன் சிறிதும் தொடர்பற்ற உள்ளூர்ச் செயற்பாடுகளில் பங்கு பற்றியும் வந்தார். குசுமிற்கும் வான் எக்கிற்குமிடையில் காதல் விவகாரம் ஆரம்பித்ததுடன் காதலை விட்டு விலகினார். ஆனால் வான் எக்கும் சுதத்தும் மிகத் தூரத்தில் அமைந்திருந்த குசுமின் இல்லத்திற்கு வருகை தந்து திருமணத்துடன் தொடர்புபட்ட சடங்குகளை ஒழுங்கு செய்தனர். விவாகம் கண்டியிலுள்ள ஒரு ஹொட்டலில் நடைபெற்றது. வார இறுதியில் நடைபெற்ற விவாக விருந்துப சாரத்திற்கு திரு. நாராயணன் மட்டும் நீங்கலாக நிறைவேற்று அலவலர்கள் அனைவரும் சமூகம் தந்தனர். வேலை செய்த பெண்பிள்ளைகள் சிலர், அழைப்பு விடுக்கப்படாதிருந்தும் பெரும் எண்ணிக்கையில் தம்பதியினரை வாழ்த்துவதற்காக கண்டிக்கு வந்தனர்.

சுதத்திடமிருந்த அறிவுறுத்தல்களின் பேரில் குசும், வான், எக் தன்மீது காதல் கொண்டதை அடுத்து உடனடியாகப் பதவியில் இருந்து விலகியிருந்தார். எனினும் நாடு விட்டு வெளியேசென்ற பிரதம நிறைவேற்றுனர் ஒருவர் உண்ணாட்டுப் பொறிவினைஞர் ஒருவரை விவாகம் செய்துள்ளார் எனும் செய்தி நெதர்லாந்தைச் சென்றடைந்தது இதனால் கிறெற்சர் தொழிற்சாலையினர் வேறுவழியின்றி வான் எக்கைத் திருப்பியழைக்க வேண்டியதாயிற்று. பதவியை விட்டு விலகுமாறு ஒரு கிழமைக்குள் இலங்கையை விட்டு திரும்புமாறு அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இது தொழிற்சாலை ஊழியர்களிடையே அமைதியின்மை அலைகளைப் புரளச் செய்வதுடன் அதன் விளைவாக வேலையாளர் சிலர் தமது வேலையை விட்டு நீங்கினார். டச்சு உடமையாளர்களுக்குத் தகவல் கொடுத்தவர் நாராயணனே என்று வேலையாளர் நம்பினர். வான் எக் விலகி ஒருவார காலத்தின் பின்னர் நாராயணன் தொழிற்சாலைக்கு விஜயம் செய்தபோது வேலையாளர் அவருக்கு எதிராகக் கூச்சலிட்டு ஆரவாரித்தனர். அப்பொழுது அலுவலகப் பகுதியில் இருந்த சுதத் ஆரவாரம் ஏன் என்பதை விசாரிப்பதற்காக தொழிற்சாலையினுள் ஓடிச் சொன்றார். மூர்க்கமாக நின்ற தொழிற்சாலை வேலையாளர்களுடன் சுதத்தைக் கண்டபொழுது நாராயணனுக்கு ஆத்திரம் மேலிட்டது. குழப்பத்திற்கு மூலகர்த்தாவாக இருந்தவர் சுதத் என அவர் கருதினார். இதனால் தொழிற்சாலையை விட்டு விலகுமாறு சுதத்துக்கு உடனடியாகவே வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன். அதன் பின்னர். தொழிற்சாலை வளவுக்குள் நுழையக்கூடாது என அவருக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

நாராயணனின் இத் தீர்மானம் நிறைவேற்று அலுவலகர்களால் அவர்களது தனிப்பட்ட கலந்துரையாடல்களின் போது கண்டிக்கப்பட்டது. பொதுமுகாமையாளர் ஒருவர் இல்லாத அவ் வேளையில், சுதத் தனது வேலையை விட்டு நீங்க வேண்டுமொன்று சுதத்திற்கு நாராயணன் விடுத்த கட்டளையை முறைமையாக உறுதிப்படுத்தக்க எவரும் கம்பனியில் இருக்கவில்லை. தொழிற்சாலைமுகாமையை நாராயணன் பொறுப்பேற்கப் போகிறார் என நிறைவேற்று அலுவலர்கள் நம்பினர்.

இரண்டு கிழமைகளுக்குப் பின் எல்லோருக்கும் வியப்பினைத்தரும் வகையில் 26 ஆண்டுகளே நிரம்பிய வான் டைக் எனும் வணிகப்பட்டதாரி ஒருவருடன் டி கிறெற்சர் இலங்கைக்குத் திருப்பி வந்தார். வான் டைக் அண்மையில் தான் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியவர். அவர் பொது முகாமையாளராக நியமிக்கப்பட மாட்டார் எனவும் ஆனால் தொழிற்சாலையின் யாவற்றையும் உள்ளடக்கிய பொறுப்பை அவர் கொண்டிருப்பாரெனவும் அறிவிக்கப்பட்டது. நிறைவேற்று அலுவலர்கள்

இப்பொழுது நாராயணனின் கெடுநோக்குடைய திட்டங்களையும் அதன் விளைவாக நிறைவேற்று அலுவலர்கள் ஆய்ந்து பாராது பதவி நீக்கம் செய்யப்படுவதையும் கூர்ந்து நோக்குவதற்கு ஒருவர் தொழிலிடத்திலேயே இருக்கின்றார் என்பதால் மனச்சுமை நீங்கிய உணர்வினைப் பெற்றனர். வான் டைக் நிறைவேற்று அலுவலர்கள் மத்தியில் சுதந்திரமாக இயங்கினார். அத்துடன் வேலைநேரம் முழுவதும் அவர் அலுவலகத்திலேயே இருந்தார்.

ஆனால் ஒரிரு வாரங்களில், தாயகத்தை விட்டு வந்த சமூகத்தின் பிற உயர்ந்தோர் குழாத்தின் கவசத்திற்கு அவர் ஈர்க்கப்பட்டார். ஆளணி முகாமையாளர் ஒருவரின்றி ஆளணி சார் தொழிற்பாட்டைத் தான் எவ்வாறு கையாள முடியுமென் அவர் சிந்திக்க முற்பட்டார். வான்டைக் பியகம இரவு விடுதியில் மிடுக்கு நடை வாய்ந்த இலங்கைப் பெண்மணி ஒருவரைச் சந்தித்தார். அப்பெண் சுதந்திர வர்த்தக வலயத்திலமைந்த இன்னுமொரு பாரிய தொழிற்சாலையில் ஆளணி முகாமையாளராக இருந்தார். ஆனால் அண்மையில் தான் அந்நிலையைத் துறந்தார்.

அலுவலகச் செயலாளர் ஏஞ்சலா, காலைத் தபாலில் ஆளணி முகாரமையாளர் பதவிக்கான விண்ணப்பமொன்றைக் கண்ட பொழுது தீயகுறியொன்று தோன்றியுள்ளதை உணர்ந்தாள். உடனடியாகவே அவள் அதனை ஆளணி உதவியாளரான பிரசாத்திற்குக் காட்டினாள். இது அவர் மனத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியது. தனது பணி முதல்வராவதற்கு இன்னுமொருவர் ஆர்வங் காட்டுவதால் காப்பற்ற உணர்வினை அவர் எய்தினார். இப்பத்திரத்தைக் கருத்தார்ந்ததொன்றாகத் தான் கையாள வேண்டுமா என ஆஞ்செலா விசாரித்தாள். ஆனால் பிரசாத் விண்ணப்பம் வான் டைக் வசம் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென ஆலோசனை பகர்ந்தார். குறித்த இந்த வாரத்தில் எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஆளணி முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பித்த பெண்மணியை வார அந்தத்தில் வான் டைக் பேட்டிகண்டுள்ளார் என்பதை அடுத்து வந்த திங்கட்கிழமையன்று இலங்கை நிறைவேற்று அலுவலர்கள் அறிந்து கொள்ள நேர்ந்தது. பிரசாத் வான் டைக்கிடம் ஆளணி முகாமையாளரொருவரை நியமிக்கும் எண்ணம் அவருக்கு உண்டா என வினாவினார். ஆளணி முகாமையாளர் பதவியொன்றை உருவாக்கும் எண்ணம் பற்றித் தனக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் தடுமாற்றம் பெருமளவில் தவிர்க்கப்பட்டிருக்கலாம். என அவர் முறன்பாடு செய்தார்.

வான்டைக் உடனையே அலுவலக செயலாளர் ஆஞ்சலாவை அழைத்து, பேட்டி பற்றி ஆளணி உதவியாளர் பிரசாத் எவ்வாறு அறிந்துகொண்டாரென விசாரித்தார் தமது அலுவலகம் போன்ற சிறியதொரு பணிமனை சிறப்பாக சக அலுவலர் ஒருவரின் வாழ்க்கைத் தொழிலை அது பாதிக்கும் பொழுது இரகசியத்தைப் பேண எதிர்பார்ப்பது. மடமை வாய்ந்த செயலாகும் அவள் கூறினாள் நிறுவகத்தினுள் ஆளணி முகாமையாளர் ஒருவரை புகுத்துவதற்கான நடவடிக்கையைத் தான் அறிந்தவுடனேயே அது பற்றி தான் பிரசாத்திற்கு அறிவித்ததை அவள் ஒப்புக்கொண்டாள் ஆஞ்செலாவின் பற்றுறுதியற்ற தன்மை குறித்து வான் டைக் வருந்தினார்.

அடுத்தவாரம் கம்பனி முதல்வர் கிறெற்சர் வந்து சேர்ந்த பொழுது பிரசாத் அவரைப்பேட்டி கண்டு ஆளணி முகாமையாளர் ஒருவரின் ஆட்சேர்ப்புப் பற்றி சிந்திக்கப்பட்ட விதம் குறித்துத் தனது கவலையைத் தெரிவித்தார். ஆளணி முகாமையாளர் ஒருவரை ஆட்சேர்க்கும் எண்ணம் கம்பனிக்கு இல்லை எனவும் அது வான்டைக்கின் தனிப்பட்ட ஒரு தீர்மானம் மட்டுமே எனவும் கிறெற்சர் பிரசாத்திற்குக் உறுதிகூறினார்.

உயர் முகாமை தற்பொழுது நியமனங்கள் தொடர்பான அண்மைக்காலத் தீர்மானங்களை மீளாய்வு செய்கின்றது என்பதை நிறைவேற்று அலுவலர்கள் உணர்தலைப்பட்டனர். இருவார காலத்தில் சுதத்துடன் கைகோர்த்தபடி டிகிறெற்சர் அலுவலகத்தினுள் நுழைந்தபொழுது உறுதியாயிற்று. சுதத் பதவியில் மீளமர்த்தப்பட்டார் என. அவர் அறிவித்தார். சுதத்தை அவரது பழையநண்பர்களுடன் உரையாடும் படி கூறிவிட்டு கிறெற்சர் தனது அலுவலக அறையினுட் புகுந்தார் வேலையிலிருந்து சுதத்தை அகற்றுவதற்குக் காரணமாக இருந்த நாராயணனைத் தவிர அனைவருக்கும். பிரிந்தவர் தலைக்கூடும் மகிழ்ச்சிகரமான கூட்டமாக அது அமைந்தது. நாராயணனும் சுதத்தும் எவ்வாறு ஐக்கியமாவர் என ஊழியர்களிற் பெரும்பாலானோர் வியர்ந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் சொந்த அபிமானிகள் இருந்தனர். கம்பனியின் எதிர்காலம் அமைதியற்றதாக அமையும் என சிலர் எதிர்வு கூறினார்.

சுதந்திர வர்த்தகவலயத்திலுள்ள சகல கம்பனிகளிலும் ஊழியர்களுக்கு ஒப்பிடத்தக்க சம்பளங்கள் செலுத்தப்பட்டு வந்தனர். ஆனால் கம்பனிகள் சில அவைவேலையாளர்களில் காட்டிய கூடிய கவனம் காரணமாகவும் ஆட்களுடன் அவை பேணி வந்த சிறந்த தொடர்புகள் காரணமாகவும் கூடிய கவர்ச்சிகரமானவையாக இருந்தன. எனவே வேலையாளர்கள் கூடிய நம்பிக்கை தரும் நிலையங்களுகளில் வேலைகளுக்கு முண்டிச் செல்லும் போக்குக் காணப்பட்டது.

கிறெற்சர் தொழிற்சாலையில், முறைமாற்றங்கள் மூன்றினைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்பட்ட வேலையாளர்களின் எண்ணிக்கை 180 ஆக இருந்தது. 1991 ஒக்டோபர் மாதமளவில் மூன்று முறை மாற்றங்களையும் தொழிற்படுத்த அவர்கள் திட்டமிட்டனர்.


1991ஆம் ஆண்டின் ஜூலை தொடக்கம் டிசெம்பர் வரையான 6 மாத காலத்திற் காணப்பட்ட, பணியாளர் புரள்வு பற்றிய ஒரு கருத்தினைப் பின்வரும் எண்விபரங்கள் தருவனவாக உள்ளன.

| | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வேலையாளர்களின் எண்ணிக்கை | சுயமாகவே விலகிய வேலையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜூலை | 60 | 20 |
| ஓகஸ்ட் | 80 | 30 |
| செப்ரம்பர் | 80 | 40 |
| ஒக்ரோபர் | 50 | 45 |
| நொவெம்பர் | 80 | 50 |
| டிசம்பர் | 80 | 60 |

பொறிவினைஞர் ஒருவரைப்பயிற்றுவதற்குக் கம்பனி ஏறத்தாழ ரூபா 25000 ஐச் செலவிட வேண்டியதாயிற்று. தெரிவுச் சேதனைகள் நேர்முகப் பேட்டிகள் என்பவற்றை நிறைவேற்றுவதற்கு ஆளணிப்பிரிவு முழுநேரம் வேலையாற்ற வேண்டியிருந்ததால் புதிய ஆட்சேர்ப்பும் கூட செலவு மிகுந்ததாக இருந்தது. மகிழ்ச்சிக்கு இடமளிக்காத பிற நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக, ஆறு மாதங்களின் முடிவில் நிறைவேற்றுப் பணியாளர். தம்முடன் வேலை செய்வோர் கிறெற்சர் தொழிற்சாலையில் நிரந்தரமான அக்கறை செலுத்தாத இடம்பெயரும் வேலையாளர்களின் ஒரு கூட்டமே எனும் கருத்தை பெறுவராயினர்.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. உண்ணாட்டு ஊழியர்களுக்கு கிறெற்சர் தொழிற்சாலை ஏன் கவர்ச்சிகரமானதாக இருக்கவில்லை?
2. இந்த ஊழியர்கள் அனைவருக்கும் தொழிற்சாலையை எங்ஙனம் கூடிய கவர்ச்சிகரமான ஓரிடமாக்க முடியும்?
3. கிறெற்சர் தொழிற்சாலையின் ஆளணிமுகாமை நடைமுறைகளை அரசாங்க சேவையிற் கையாளப்படும் நடைமுறைகளுடன் ஒப்பிட்டு வேறுபாடு காட்டுக.
4. விடய ஆய்வின் பாத்திரங்களுள் எவரேனும் ஒருவரைத் தெரிவு செய்து, கிறெற்சர் தொழிற்சாலையினது விவகாரங்களின் திருப்திகரமற்ற நிலமைக்கு அவர் எவ்வாறு உதவினாரென விவரிக்க.



# SLEAS
# SLAS
# SLPS

150/=


S.R.A. Publications

DIGITEL PRINTERS

T.P : 024-4589009 Mobile : 0777-584402